# தமிழ்க்கவி அமுதம்

வித்வான் ல. சண்முகசுந்தரம்

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

ஸ்டார் பிரசுரம்

ருவல்லிக்கேணி
சென்னை-5

மேலக் கோபுரத் தெரு
மதுரை

முதற் பதிப்பு—ஜுன், 1956

விலை 2 8 0

Star Publications

Triplicane
Madras-5

West Tower St.
Madurai.

Eveready Printers, Madras-17

# பதிப்புரை

வித்வான் ல. சண்முகசுந்தரம் அவர்கள் ஏற்கனவே வாசகர்களுக்கு அறிமுகமானவர். அவரது **நந்திக் கலம்பகம்**, **ஆனந்தக்கூத்து**, **டி. கே. சி. வரலாறு** முதலியவை உங்களுக்குப் பரிச்சயமானதே.

நான்காவதாக, ஆசிரியரின் **தமிழ்க் கவி யமுதத்தை** உங்களுக்கு அளிக்கிறோம்.

தமிழ்—ஒரு பாற்கடல். இதில் அமிழ்தம் கடைந்தவர்கள் எண்ணற்ற புலவர் பெரு மக்கள் ; கவிஞர் பெருமக்கள். அதில் வெற்றி கண்ட சிலரில் முதல்வன் கம்ப நாடன். கம்பனின் மேதை தமிழுக்கு முடி சூடிற்று. ஒவ்வொரு பாத்திர சிருஷ்டியும் ஒவ்வொரு விதமான ரத்தினங்களாய் மிளிர்ந்தன.

அந்த ரத்தினங்களில் மூன்றை உங்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

புனிதத்தின் புலரொளியில், உஷைதேவி நடை பயின்று வருவதுபோல், உங்கள் மனவெளியில் கவிதை உருவில் உலவிவரும் சீதையை — 'சீதை' என்ற கட்டுரையில் காண்கிறோம்.

இராவணனைப் போன்ற ஒரு காம்பீர்ய உருவம் தோல்விக் கணைகளால் துளைக்கப்பட்டு

நாணத்தாலும் சோகத்தாலும் சாம்பிக்கிடப்ப தைக் கண்டு கவிதையே பெருமூச்செறிகிறது. 'இராவணன்' என்ற கட்டுரையை முடிக்கும் போது நாமும் பெருமூச்செறிகிறேம். கம்பனின் பாத்திர சிருஷ்டியைக் கண்டு பிரமிக்கிறேம்.

...................
வஞ்சமோ எனும் வாரலையோ எனும்
...................
அஞ்சினேன் என்று அரற்றுமங்கோர் தலை

என்ற வரிகளைப் படிக்கும்போது ராவண னுக்குப் பத்துத் தலைகள் இருக்க வேண்டிய அவசியத்தையே நாம் உணர்கிறேம்.

அந்த இராவணனின் புதல்வன் மட்டுமல்ல, அவன் வீரத்துக்கும் நான்தான் வாரிசு என்பது போல் களத்தில் நின்று சமர சாகஸம் புரியும் '**இந்திரஜித்தை**' ஆசிரியர் வியத்தற்குரிய முறை யில் நம்முன் நிறுத்தி விடுகிருர்.

'**நகைச்சுவையில்**' கம்பனின் மேதா விலாசத் தோடு கூடிய ஹாஸ்யக் கவிகளும், அனுமனின் அட்டகாசமான கேலி மொழிகளும் நமது செவி களில் ஒலிக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் முன்பாக, ஜெயங் கொண்டானின் போர் முரசம் ஒலிக்கிறது, 'கலிங்கத்துப்பரணி'யின் மூலம்.

மாணிக்கவாசகரின் மதுர மொழிகளும், நாலடியாரின் நயமிக்க செய்யுள்களும் தமிழில் வீரவிக்கிடக்கின்றன.

தமிழ் — பாற்கடல்தான்; தமிழ்க்கவி — அமிழ்தம்தான்!

இக்கட்டுரைகளில் பல ஏற்கனவே பல பத்திரிகைகளில் வெளியானவை. ஒரு சில இந் நூலுக்காகவே எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளவை. இந்த அழகிய கட்டுரைகளின் தொகுதியை வெளி யிடும் வாய்ப்பை எங்களுக்கு அளித்த ஆசிரி யருக்கு எங்கள் நன்றி.

ஸ்டார் பிரசுராலயம்.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கவியின் லட்சியம் | ... | 9 |
| 2. | கவிகாட்டுகிற உண்மைகள் | ... | 13 |
| 3. | கலிங்கத்துப் பரணி | ... | 21 |
| 4. | சீதை | ... | 32 |
| 5. | இராவணன் | ... | 44 |
| 6. | இந்திரஜித்து | ... | 74 |
| 7. | நகைச்சுவை | ... | 98 |
| 8. | பக்தி | ... | 114 |
| 9. | அதிசயத்திலா ஆங்காரம்! | ... | 126 |
| 10. | கழுக்குன்றத்தின் அற்புதனே! | ... | 134 |
| 11. | குறளின் குரல் | ... | 140 |
| 12. | வள்ளைப் பாட்டு | ... | 148 |
| 13. | அடியவன் என்கிற பேறு | ... | 152 |
| 14. | சிவபெருமானின் ஆபரணங்கள் | ... | 158 |
| 15. | சீர்திருத்தக் கல்வி | ... | 162 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# கவியின் லட்சியம்

யானை நான்கு கால்கள் துதிக்கை கொண்ட பெரிய உருவம் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. கடவுள் தத்துவமானது எங்குமாய் எல்லாமாய் வியாபித்து நிற்கும் மகத்தான உண்மை. ஆனால் இந்த உண்மை நமக்குப் புலனாவதில்லை. எப்படி இருந்தாலும் சரி, உண்மையை அதற்குத் தேவையான பண்புகளோடு சேர்த்து அழுத்தமாகவும் தெளிவாகவும் வெளியிடுவது தமிழின் காரியம். அப்படி வெளியிடும்பொழுது தமிழுக்கு ஆனந்தமே உண்டாகி விடுகிறது. உண்மையும் ஆனந்தமும் கலந்து தமிழ்க் கவி ஆய்விடுகிறது.

கவியை அனுபவிக்கிற நமக்கும் ஆனந்தம் ஏற்பட்டு விடுகிறது. மற்றப்படி காதலைப் பற்றிச் சொல்லவேண்டும், வீரத்தைப் பற்றிச் சொல்லவேண்டும், கல்யாணத்தைப் பற்றிச் சொல்லவேண்டும், காடயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்கிற கட்டாயம் ஒன்றும் தமிழ்க் கவிதைக்குக் கிடையாது.

உண்மையை ஆனந்தமாக வெளியிடவந்த கவிதைகள் தமிழில் ஏராளமாக இருக்கின்றன. அனுபவிக்க நம்முடைய ஆயுள் நாள் போதாதென்று சொல்லும்படியாகவே இருக்கின்றன. இருந்தாலும் கருமம் யாரை விட்டது? தமிழ்க் கவிதைகளில் உள்ள ஆனந்தத்தையும் உண்மையையும்

அனுபவிக்கப் பல பேர் தவறிவிட்டார்கள். பாடல்களில் அதைச் சொல்லியிருக்கிறது இதைச் சொல்லியிருக்கிறது என்று விஷயத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு விஷயம் அல்லாத வெறும் வார்த்தைகளாலேயே அளந்து கொட்டினுர்கள். கோட்டை கோட்டையாய் அம்பாரம் அம்பாரமாய் அளந்தே கொட்டிவிட்டார்கள்.

*    *    *

செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு நூறு ஏக்கர் நஞ்சை, நூற்றைம்பது ஏக்கர் தோப்பு, எண்பதினுயிரம் ரூபாய் ரொக்கம் இவ்வளவும் இருந்தது. மாடு கன்றுகளுக்கோ, வீடு வாசலுக்கோ குறைவில்லை. ஆனுல் செல்வந்தருடைய இதயம் இருக்கிறதே அது ஒரு வரண்ட சுடுகாடு.

மூன்று வேளையும் பட்டுப்போன மிளகு வத்தலைப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டுவிடுவார். கிழிந்த கண்டாங்கிச் சேலைத் துண்டுகளையே உடுத்திக் கொள்ளுவார். சொட்டு மிஞ்சாமல் மோரையும் பாலையும் விற்றுவிட வேண்டும். கால்படி மோர் மிஞ்சிவிட்டால் போதும். வீடே அன்றைக்கு அல்லோல கல்லோலம்தான்.

உத்ஸவம் நடத்த வேண்டுமென்று யாராவது நன்கொடை வசூலிக்க அவரிடம் தெரியாமல் வந்துவிடுவதும் உண்டு. அவ்வளவுதான் இவரிடம் ஏன் போனேம் என்கிற திகைப்பும் மயக்கமும் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் நடத்தின பின்பும் அவர்களை விட்டு நீங்காது.

பணம் கிடைப்பதாக இருந்தால் செல்வந்தர் எதைச் செய்யவும் தயங்கமாட்டார். பொய் சொல்ல வேண்டுமா, மனச் சாட்சியின் குரல்வளையை நெரிக்க வேண்டுமா, மனையாளையும் குழந்தைகளையும் பகைத்துக் கொள்ள வேண்டுமா ஆசாமி தயார்தான்.

இப்படிப்பட்ட செல்வந்தர்கள் பலரை நாலடியார் பார்த்திருக்கிறுர். அடடா! செல்வத்தால் யாதொரு பலனும் அனுபவிக்காமல் பிறரையும் அனுபவிக்க ஒட்டாமல் இவர்கள் தடுத்து விட்டார்களே என்று அனுதாபப்பட்டிருக்கிறுர். இவ்வளவு செல்வத்தையும் அப்படியே விட்டு விட்டு வெறுங் கையோடு போய்விடுகிறுர்களே என்று இரக்கப்பட்டும் இருக்கிறுர். அனுதாபத்தைத் தமிழ்க்கவி வெளியிடுவதைப் பார்க்கலாம்:

**உண்ணுன் ஒளிநிருன் ஓங்குபுகழ் செய்யான்**
**துன்னரும் கேளிர் துயர் களையான்—கொன்னே**
**வழங்கான் பொருள்காத்(து) இருப்பனேல் ஆஅ**
**இழந்தான் ஒழிந்தான் அவன்.**

* * *

இதை ஒட்டி இன்னொரு கவியைப் பார்க்கலாம்: பணத்தின்மேல் ஆசை பிறந்துவிட்டால் 24 மணி நேரமும் இதயம் பணத்தின்மேல் போய்த்தான் உட்கார்ந்து கொள்ளும். இரும்புப் பெட்டியை அடிக்கடி திறக்கச் சொல்லும்; கட்டுக் கட்டாக அடுக்கி வைத்திருக்கிற நோட்டுகளை எண்ணச் சொல்லும்; பெட்டியைப் பூட்டச் சொல்லும்; பூட்டிய பூட்டை இழுத்துப் பார்க்கவும் சொல்லும்.

பெட்டிக்குள் இருக்கும் பணத்தை எடுக்கவோ செலவு செய்யவோ இந்த அதிபதிக்கு அதிகாரம் கிடையாது. எண்ணவும் பாதுகாக்கவும்தான் இவனுக்கு அதிகாரம்.

பிரபுவினுடைய இந்தச் செயலைக் கண்டு இரும்புப் பெட்டிக்கே ஆங்காரம் வந்துவிட்டது. ஆங்காரத்தோடு

---

ஒளிநிருன் - நல்லவன் என்று பெயர் வாங்கி இருக்கமாட்டான்; துன்னரும் - நீக்க முடியாத அவ்வளவு ஒட்டிய; கேளிர் - சுற்றத்தார்; கொன்னே - அடடா! ஆஅ— ஐயோ!

அனுதாபமும் பிறந்துவிட்டது. இரும்புப் பெட்டி சொல்லுகிற தாக பாவம்.

"எனக்கும் இவனுக்கும் வித்தியாசமே கிடையாது. நாங்கள் இரண்டு பேரும் பொருளை உபயோகிக்க முடியாது. ஆனால் பாதுகாக்க முடியும்."

**எனதென(து) என்றிருப்பன் ஏழை ; பொருளை**
**எனதென(து) என்றிருப்பன் யானும்,—தனதாயின்**
**தானும் வழங்கான் பொருள்காத்(து) இருப்பானேல்**
**யானும் அதனை அது.**

இரண்டு பாடல்களும் அபாரமான பாடல்கள், அபூர்வ மான பாடல்கள். தமிழ்க் கவிக்கு ஒரு லட்சியம் உண்டு என்பதை இரண்டு பாடல்களும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதுவே போதும் நமக்கு.

---

"ஏழை-பொருளை உபயோகிக்க முடியாதவன். செல்வந்தனும் பொருளை என்னுடையதுதான் என்னுடையதுதான் என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். இரும்புப் பெட்டியாகிய நானும் அப்படியே சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால் இரண்டு பேரும் அனுபவிக்க முடியாமல் காத்துத்தான் சாகிறோம்" என்பது கருத்து.

# கவி காட்டுகிற உண்மைகள்

தனிப்பட்ட மனிதன் ஆனாலும் சரி, சமுதாயம் ஆனாலும் சரி, படித்த படிப்பு ஒரு தினுசாகவும், அனுபவித்த அனுபவம் வேறொரு தினுசாகவும் இருக்கும்.

ஏசுநாதர் சொல்லியவற்றில் ஒன்றைப் பார்க்கலாம்.

“வலது கன்னத்தில் அடித்தவனுக்கு இடது கன்னத்தையும் அடிக்கக் கொடுங்கள். மேலங்கியைப் பறித்தவனுக்கு உள்ளங்கியைக்கழற்றிக் கொடுங்கள்.”

இந்த உபதேச மொழியை மேலை நாட்டில் உள்ள ஒவ்வொரு கிருஸ்தவனும் படித்திருக்கிறான். தேவ சபைகளில் மண்டியிட்டுக் கண்களை மூடிக்கொண்டு இந்த மந்திரங்களை உச்சரிக்கிறான். ஆனால் ஏகாதிபத்திய வெறியும், சாம்ராஜ்யத் திமிரும், இனக் கொடுமையும் மேலை நாட்டு மக்களின் இதயத்திற்குள் புகுந்து எத்தனை கொடுமைகளை விளைய வைக்கின்றன. வேறொரு இனத்தை அவர்கள் அடக்கி ஒடுக்குவதும் அவமரியாதை செய்வதும் சகிக்க முடியாத பாவ காரியங்கள்.

இந்தோ சீனாவிலுள்ள மக்கள் சுதந்திரம் கேட்டால் அவர்களைப் பிரஞ்சுக்காரர்கள் சுட்டுப் பொசுக்குகிறார்கள். மலேயாவிலும், கென்யாவிலும், கயானாவிலும் பிரிட்டிஷ்காரர்கள் கையாண்டுவரும் பாதகச் செயல்கள் வார்த்தைகளில் அடங்காதவை. மனித சமுதாயத்தை அவமரியாதை செய்வதிலும், ஈனத்தனமாகக் கொன்று குவிப்பதிலும்

நிகரில்லாதவர்கள் மேலைநாட்டார். ஐரோப்பிய மகா ஜனங்கள் செய்கின்ற அட்டூழியங்களுக்கும் அநியாயங் களுக்கும் ஆதாரமாயிருப்பவர்கள் அமெரிக்கர்களே. அமெரிக்கர்கள் தான் இன்றையக் கொடுமைகளைத் தூண்டி விடுபவர்கள், வளர்ப்பவர்கள், பாராட்டுபவர்கள்.

எப்பொழுதும் போல மேலை நாட்டாருடைய தேவால யங்களில் மணிகள் ஒலிக்கத்தான் செய்கின்றன. மண்டி போடுகிறவர்கள் மண்டி போடத்தான் செய்கிருர்கள். ஏசுநாதருடைய உபதேசங்களை ஜபிக்கவும்தான் செய்கி ருர்கள். ஆனுலும், லேனியல், வின்ஸ்டன் சர்ச்சில், டல்லஸ், ஐசன்ஹோவர் ஆகிய பேர்வழிகள் இருக்கிற வரைக்கும் ஏசுநாதரை மேலை நாட்டார் உணர்ந்தார்கள் என்று சொல்ல முடியுமா? மக்கார்தரையும், மக்கார்த்தி யையும் அதிகாரபூர்வமாக அந்த மக்கள் நேசிக்கும் வரைக்கும் அவர்கள் ஏசுநாதருடைய உபதேசங்களை அனுபவித்தார்கள் என்று சொல்ல முடியுமா? முடியவே முடியாது.

உணர்ச்சி இல்லாத உதடுகள் ஏசுநாதருடைய உபதேசங்களை ஜபிக்கலாம். ஆனுல் அனுபவிக்க முடியாது. இதே போலத்தான் ஒவ்வொரு மதத்தாரும் தங்களுடைய வேத மந்திரங்களைப் பாராயணம் பண்ணினுல் மாத்திரம் போதாது. உணர்ந்து அனுபவிக்க வேண்டும். அனுபவியாத வரைக்கும் புத்தகமும் அச்சும் எவ்வளவு ஞானத்தைப் பெற்றதோ அவ்வளவு ஞானத்தைத்தான் வாசிப்பவனும் பெற முடியும். கவிதை முதலிய அருங் கலைகள் ஆனுலும் சரி, சமையல் போன்ற தொழிற்கலைகள் ஆனுலும் சரி படிப்பு என்கிற வார்த்தைக்குரிய எதற்கும் உணர்ச்சியும் அனுபவமும் தான் உயிர் நாடி. உணர்ச்சியும் அனுபவமும் இல்லாமல் ஒருவன் எவ்வளவுதான் படித் திருந்தாலும் அவனைப் படியாதவன் என்றுதான் சொல்ல

வேண்டியிருக்கிறது. அதாவது 'கற்றும் கல்லாதவன்' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உண்டான நாலடியாரிலும்,

"ஓதியும் ஓதார் உணர்விலார்"

என்று அழகாகச் சொல்லி இருக்கிறது.

## 2

துரியோதனன் முதலிய நூறு சகோதரர் (கௌரவர்) களுக்கும், தருமர் முதலிய ஐந்து சகோதரர் (பாண்டவர்) களுக்கும் துரோணர் ஆசிரியராக இருந்தார். வில்வித்தை, வாள்வீச்சு, உண்மைத் தத்துவம், பண்பாடு, அரசியல் நிர்வாகம் முதலிய ஒவ்வொரு துறைகளையும் துரோணர் மாணவர்களுக்கு விளக்கி வந்தார்.

ஏகலைவன் என்கிற வேடன் காட்டில் வசித்து வந்தான். துரோணரிடம் வந்து தன்னையும் ஒரு மாணவனுகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டினுன். துரோணர் 'அது நடவாத காரியம் அப்பா' என்று மறுத்து விட்டார். "அரச குமாரர்களுக்கென்று நான் வைத்திருக்கிற கலாசாலையில் நீ வந்து படிப்பது சரிப்படாது" என்று உருக்கமாகச் சொல்லி அனுப்பிவிட்டார்.

மனம் உடைந்துபோன ஏகலைவன் துரோணரைப் போலக் களி மண்ணைக் கொண்டு ஒரு உருவத்தை உண்டாக்கினுன். பக்தியோடு அதை வழிபட்டு வணங்கினுன். வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு அந்த உருவத்திடம் வந்து சுவாமி வில்லை இப்படித்தானே வளைக்க வேண்டுமென்று வளைத்தான். நாணேற்றுவது இப்படித்தானே என்று நாணேற்றினுன். அம்பு எய்வது இப்படித்தானே என்று ஏகலைவன் அம்பையும் எய்தான். குறி தவருமல் ஒவ்வொரு அம்பும் குறிப்பிட்ட இலக்கை ஊடுருவின.

அர்ச்சுனன் துரோணர் சொல்லுகிற ஒவ்வொரு காரியத்தையும் நுட்பமாகக் கவனித்துவந்தான். வினயமாக ஒவ்வொரு காரியத்தையும் ஆசிரியர் மனம் மகிழ, செய்து வந்தான். ஆசிரியரிடத்தில் அன்பும் மரியாதையும் வேறு நிறைந்திருந்தது. இவற்றை எல்லாம் கண்ட துரோணருக்கு அர்ச்சுனன் மீது தனிப்பட்ட வாஞ்சையே உண்டாகி விட்டது. அது காரணமாக அர்ச்சுனனே உத்தமமான மாணவன் என்றும், அவனே தாம் கற்றுக்கொடுக்கிற ஒவ்வொரு காரியத்தையும் அனுபவித்துக் கையாளக் கூடியவன் என்றும் பல ரகஸ்யமான விஞ்சைகளேயும், மந்திரங்களேயும் அர்ச்சுனனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அர்ச்சுனன் காட்டிற்கு ஒரு தடவை வேட்டையாடப் போயிருந்தான். அர்ச்சுனனுடைய நாய் ஏகலேவனுடைய குடிசைக்குள் நுழைந்து துரோணருடைய உருவத்தின் மேல் சிறுநீர் கழித்துவிட்டது. இதை அறிந்த ஏகலேவன் நாயின்மேல் ஒரு அம்பை எடுத்துப் பிரயோகித்தான். அடிபட்ட நாய் அர்ச்சுனனுடைய காலடிமாட்டில் வந்து விழுந்தது.

அர்ச்சுனனுக்கு ஒன்றுமே ஓடவில்லே. பாணப் பிரயோகத்தின் முறையையும் உக்தியையும் நோக்கும்போது அர்ச்சுனனுக்குத் திகைப்புத்தான் உண்டாகிறது; தனக்கு மாத்திரம் ரகஸ்யமாகச் சொல்லிக் கொடுத்திருப்பதாக உள்ள ஒரு முறையை வேருெருவனுக்கும் நம்முடைய ஆசிரியர் சொல்லிக் கொடுத்திருக்கிருரே என்று அர்ச்சுன னுடைய இதயம் கொதித்துவிட்டது.

நாய் வழிகாட்ட, ஆசிரியரும் அர்ச்சுனனும் ஏகலேவன் குடிசைக்கு வந்து விசாரித்தார்கள். ஏகலேவன் நாய் மீது அம்பை எறிந்தது, தானே என்றும், தனக்கு ஆசிரியர் துரோணரே என்றும், அவரிடம் வில்வித்தை கற்றது இப்படி என்றும் முழு விபரத்தை விளக்கிவிட்டான்.

ஏகலைவன் சொல்லையும், (துரோணருடைய) களிமண் உருவத்தையும் கண்ட இரண்டு பேரும் அப்படியே அதிசயித்து விட்டார்கள். கல்வி என்றால் இதுதான் கல்வி என்று ஆனந்தம் அடைந்தார்கள். உணர்ச்சியோடு கூடியவர்கள் ஆசிரியரிடம் சென்று முறையாகப் படிக்காவிட்டாலும் சகலமும் கற்ற அறிஞர்கள் என்று அவர்களைத் தாராளமாகச் சொல்லிவிடலாம்.

நாலடியாரிலும் அப்படித்தான் சொல்லி இருக்கிறது.

"ஓதாதும்—ஓதி அனையர் உணர்வுடையர்"

3

கிரேக்க நாட்டில் மகா அலெக்சாண்டர் அரசாட்சி செய்து வருகிற காலத்தில் பித்தகோரஸ் என்கிற மகான் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

பித்தகோரஸ் கணிதம், தத்துவம் முதலிய கலைகளிலும் பார மார்த்திகத் துறையிலும் ஈடுபட்டுக் கரைந்த மகான். பேதா பேதம் கொண்ட மக்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்த மனமில்லாத பித்தகோரஸ் காட்டிற்குள் வந்து விட்டார். அவர் காட்டிற்கு வந்து வாழ்ந்த விதம் இப்படித் தான்: பித்தகோரஸ் ஒரு பெரிய அண்டா (பாத்திரம்) வைத்திருந்தார்; அது ஒன்றுதான் அவருடைய மூலதனம். இரவில் அந்த அண்டாவைக் குப்புறக் கவிழ்த்தி அதற்குள்ளாகப் படுத்து உறங்கிவிடுவார். பகலில் மறுபடி நிமிர்த்தி அதன்மீது சாய்ந்தபடியே சூரிய வெய்யிலில் காய்ந்துகொண்டிருப்பார். பசித்த நேரத்தில், கிடைத்த காய்கனிகளைச் சாப்பிட்டுக் கொள்வார்.

பித்தகோரஸைப் பற்றிக்கேள்விப்பட்ட மகா அலெக்சாண்டர் அவரைப் பார்க்கக் காட்டிற்கு விரைந்து வந்தான். மந்திரி பிரதானிகள், சேனைவீரர்கள் வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்கிறார்கள். நவரத்தின கசிதமாக மக

அலெக்சாண்டர் சூரிய ஒளியில் தங்கப் பதுமை போல மின்னிக்கொண்டிருக்கிறுன். பித்தகோரஸோ அண்டாவில் சாய்ந்தபடியே சூரிய வெய்யிலில் மூழ்கி ஆழ்ந்த தியானத்தில் கரைந்து கொண்டிருக்கிறுர்.

மகா அலெக்சாண்டர் 'சுவாமி' என்று அழைத்தான். பித்தகோரஸ் கண்களைத் திறந்தார். 'நான்தான் அலெக்சாண்டர்' என்று அலெக்சாண்டர் தெரியப்படுத்தினுன். 'தாங்கள்தானே மகான் பித்தகோரஸ்' என்று பணிவோடும் கேட்டுக்கொண்டான். 'ஆம்' என்று தெரிவித்துவிட்டு பித்தகோரஸ் கண்களை மூடிக்கொண்டார். அலெக்சாண்டர் சிறிது நேரம் நின்று பார்த்தான். பித்தகோரஸோ மூடிய கண்களோடு தியானத்தில் மூழ்கிவிட்டார். பிறகு அலெக்சாண்டர் 'சுவாமி' என்று கூப்பிட்டான். பித்தகோரஸ் கண்களைத் திறந்து பார்த்தார். "நான் தங்களுக்குத் தொண்டு செய்யக் காத்து நிற்கிறேன். என்ன தேவையோ அதைத் தாராளமாக என்னிடம் கட்டளை இடுங்கள். செய்து முடிக்கிறேன். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும். கட்டளை இடுங்கள்" என்று அலெக்சாண்டர் வணங்கினுன்.

பித்தகோரஸ் சொன்னுர் :

"அப்பனே, எனக்கு நீ செய்ய வேண்டியது ஒன்று இருக்கிறது. அதை இப்பொழுதே எனக்கு நீ செய்ய வேண்டும். அதாவது நீ கொஞ்சம் வழிவிட்டு விலகி நில். சூரிய ஒளி என்மீது நன்ருகப் படவேண்டும்."

இந்த விதமாகச் சொல்லிவிட்டு பித்தகோரஸ் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டார். தியானத்தில் கலந்துவிட்டார். அலெக்சாண்டரும் பரிவாரங்களோடும் தலைநகருக்கு வந்துவிட்டான்.

நமக்குத் தெரியும் பித்தகோரஸிடம் அண்டாவைத் தவிர மூலதனம் ஒன்றுமே இல்லை என்று; வீராதிவீரனும் மன்

ஞதிமன்னனுமாகிய அலெக்சாண்டர் தம்முடைய காலடியில் வந்து நின்றுகொண்டு என்ன வேண்டும், என்னவேண்டும் என்று கதறும் பொழுது ஒன்றும் வேண்டாமென்று பித்த கோரஸ் சொல்லி விட்டார். அதன் காரணம் என்ன? பித்தகோரஸின் இதயம் குறை வில்லாதது. அதற்குத் தேவையானது ஒன்றும் இந்தப் பூவுலகத்திலோ மகா அலெக்சாண்டரிடத்திலோ இல்லை என்பதும் அந்த இதயத் திற்கு நன்கு தெரியும். அதனால் தான் "சற்று விலகி நில் என்மீது வெய்யில் படட்டும்'' என்று உறுதியாக அது சொல்லி விட்டது.

பித்தகோரஸைப் போன்ற பல மகான்களை நாலடி ஆசிரியர் பார்த்திருக்கிறார். அடடா! இவர்கள் அல்லவா உண்மையான செல்வவான்கள் என்று வியந்திருக்கிறார்.

"யாதானும் நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார்"

ஒரு பொருளும் இல்லாதவர்களாகக்கூட இருக்க லாம். ஆனால் அவர்களுடைய உள்ளம் பிறரிடம் இருந்து எதையும் வேண்டாமல் இருந்து விட்டால் அவர்களே செல்வர்கள் என்பது கருத்து.

இனி நாலடி ஆசிரியர் மற்றொரு இனத்தையும் பார்த்து அனுபவித்து இருக்கிறார்.

வயல், தோப்பு, கறவை மாடு, ரொக்கம் இவ்வளவும் ஏராளமாக இருந்தும் அவர்கள் எப்பொழுதும் ஒன்றும் இல்லையே, ஒன்றும் இல்லையே என்று புலம்புவதும் ஆசிரியர் காதில் விழுந்திருக்கிறது.

அந்தப் பேர்வழிகள் நன்றாக உண்பதும் இல்லை. உடுத்துவதும் இல்லை. அப்படிப்பட்டவர்கள் பிறருக்குக் கொடுத்து, வாங்கியவர்கள் மகிழ்ந்ததை எப்படி அனுபவித் திருக்க முடியும். ஆகவே, பணத்தின் மூலமாகத் தம்மா லும் ஆனந்தம் பெற முடியவில்லை. பிறராலும் ஆனந்தம்

பெற முடியவில்லை. எப்பொழுதும் அவர்களுடைய உள்ளம் இருண்ட சுடுகாடாகவே இருந்தது. தரித்திரமாகவும் இருந்தது. அதனுல்தான் ஆசிரியர் "தரித்திரர்கள் என்ருல் ஈயாத புல்லர்கள்தான்" என்று அடித்துச் சொல்லி விடுகிருர். எப்படி ?

"செல்வத்தும் நல்கூர்ந்தார் ஈயார் எனின்"

இனிப் பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

"ஓதியும் ஓதார் உணர்விலார் ஓதாதும்
ஓதி அனையர் உணர்வுடையர்—யாதானும்
நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார் செல்வத்தும்
நல்கூர்ந்தார் ஈயார் எனின்"

நாலடியார் பாட்டு என்னவோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாடப்பட்டதுதான். ஆனுலும் நம்முடைய செவிகளில் இன்னமும் கணகணவென்று ஒலிக்கின்றன. அதைவிட இதயத்தில் அதிசயமாக ஒலிக்கின்றன.

எல்லாம் தமிழ் செய்கிற காரியம்.

---

யாதானும் நல்கூர்ந்தும் - எந்த ஒரு பொருளும் இல்லாத தரித்திரர்களாக இருந்தாலும், இரவாதார் - எதையும் வேண்டாதவர்கள். நல்கூர்ந்தார் - தரித்திரர்.

# கலிங்கத்துப் பரணி

**சோ**ழர் பரம்பரையில் நடு நாயகமாக விளங்கிய முதல் குலோத்துங்கனைப் பற்றிய சிறு காப்பியம் கலிங்கத்துப் பரணி. தனக்குக் கப்பம் கட்டாத கலிங்க மன்னன் மீது படைகளை ஏவி, முதல் குலோத்துங்கன் வெற்றி கண்டான்; இந்நூல் அதை நன்கு விளக்குகிறது. கருணாகரத் தொண்டைமான் என்னும் சேனாதிபதிதான் மேற்படி போரை நடத்தியவன். கருணாகரனது வீர தீரச் செயல்களைப் பேய்களின் கூற்றாக இந்நூல் சித்தரிக்கின்றது. இந்நூல் முழுவதும் தாழிசை என்னும் ஒரு பாவினத்தால் ஆகியது. தாழிசை என்பது இரண்டிரண்டு வரிகளைக் கொண்டு சந்தக் குழிப்புப் போன்ற வண்ணக ஒலிகளால் வரக்கூடியது. இதன் ஆசிரியர் சயங்கொண்டார். இவர்தான் தமிழ்ப் புலவர்களிடையே முதல் முதலாகக் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைப் பெற்றவர். கம்பருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் கிட்டத்தட்ட ஒரு தலைமுறைக் காலம் முந்தியவர். கவிதைகளை வெறும் விஷய கர்ப்பிணியாக மாத்திரம் பாவிக்காமல் மந்திரசக்தி நிறைந்ததாக மாற்றித் தந்தவர்களிலும் இவர்தான் முன்னோடி. இவர் சோழ நாட்டில் தீபங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது காலம் குலோத்துங்கன் காலமாகிய கி. பி. 1070–1118. மற்றப் புலவர்களுக்கு வழங்கி வருவது போன்ற கட்டுக் கதைகளோ கற்பனைக் கதைகளோ இவர் விஷயத்தில் ஒன்றுகூடக் கிடையாது. சுருக்கமாகச் சொல்லப் போனால்

இவரது வாழ்க்கை ஆடம்பர மில்லாத, ஆனால் கௌரவம் நிறைந்த வாழ்க்கையாகத்தான் முடிந்திருக்க வேண்டும்.

தமிழில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டு என்று வைத்துக்கொண்டால் இலக்கியங் களையும் கவிதைகளையும் பூரணமாகப் பொது மக்களுக்கு உரிமை ஆக்கிய காலம் கி. பி. 11-ம் நூற்றாண்டு என்று வைத்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட ஒரு சாராரோ வர்க்கத் தாரோ பார்த்து மகிழும் சரக்காக இருந்த இலக்கியத்தை இந்தக்காலம்தான் சர்வஜன ரஞ்சகமாக மாற்றித் தந்தது. இந்தப் பதினோராம் நூற்றாண்டின் இலக்கியத்துக்கு ஆதி புருஷனாக விளங்கியவர் சயங்கொண்டார். சயங்கொண்டார் பாடியது ஒரே நூலாக இருந்தாலும் அதுவும் சிறு காப்பியமாக இருந்தாலும் அதன் மகத்துவம் இன்றளவும் தனிப் பெருமையோடு இருந்து வருகிறது.

ஆற்றுப்படை, ஊசல், பிள்ளைத் தமிழ் முதலிய தொண் ணூற்றாறு வகைப் பிரபந்தங்களையும் சிறுகாப்பியம் என்று சொல்வார்கள். இவற்றுள் பள்ளு, குறவஞ்சி, பரணி முதலிய ஒரு சில பிரபந்தங்களில்தான் கொஞ்சமேனும் நாடகவாடை வீசிவரும்.

## பரணி இலக்கணம்

பரணி என்றால் என்ன ?

இதைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ள இலக்கணங்கள் எல்லாம் பொருத்த மில்லாதவையாகவே இருக்கின்றன. பேய்கள் பரணிநாளில் கூழ் சமைத்து உண்பதாகச் சொல்வதால் இதற்குப் பரணி என்று பெயர் ஏற்பட்ட தாகவும், போர்க்களத்தில் ஆயுதங்களால் ஆகிய பரண் மீதிருந்து இதைப் புலவன் பாடுவதால் இது பரணி என்னும் பெயர் பெற்றதென்றும் சொல்லப்படுகின்றன.

இனி ஆயிரம் யானைகளை வென்ற ஒரு வீரனைச் சிறப் பித்துச் சொல்வதால்தான் பரணி என்று இலக்கண நூல்கள் சாதிக்கின்றன. இதை,

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி'

என்ற இலக்கண விளக்கத்தால் அறியலாம். இப்படி எல்லாம் ஆராய்ச்சி பண்ணுவதற்கு நூலில் தக்க ஆதா ரங்கள் கிடையாது.

## விசேஷ அம்சங்கள்

இனி, கலிங்கத்துப் பரணியில் விசேஷமாக உள்ள சில அம்சங்களைப் பார்ப்போம். போர் என்கின்ற ஒரே அம்சத்தில் விஷயம் சுருங்கிக் கிடந்தாலும் அதை நன்ருக ஊட்டங் கொடுத்து ஆசிரியர் கதையாக உருவாக்கி யிருக் கிருர். நாடகத்தில் ஆரம்பிப்பது போன்று, சம்பவத்தைக் கம்பீரமாகவும் கதைப் பின்னலுக்கு ஏற்றதாகவும் ஆரம் பித்துள்ளார். கலிங்கநாட்டை வெற்றி அடைந்து திரும்பிய வீரர்கள் தங்கள் மனைவிமார்களிடம் கதவு திறக்கவேண்டிப் பாடுவதாகக் கதை ஆரம்பமாகிறது.

இதன் பின்பு காளிதேவியைப்பற்றியும் அவளைச் சுற்றி யுள்ள பேய்களைப்பற்றியும் விவரமாகச் சொல்லப்படு கின்றது. இந்த இடத்தில், தவறு செய்து ஓடிப்போன ஒரு பேய் திரும்ப வந்து தன் வரலாற்றைச் சொல்லுகிறது. இமயமலையில், தான் கற்ற வித்தைகளைப்பற்றியும், சோழ குல வம்சாவளிகளைப்பற்றியும் விளக்குகிறது. இதன் பின்புதான் கதைக்கு ஒரு மத்திய சம்பவமும் மூலக்கருவும் உண்டாகிறது. அதாவது காளியைச் சுற்றி உள்ள பேய்கள் இந்தக் கட்டத்தில் கூப்பாடு போடுகின்றன. உடனே இமயத்திலிருந்து வந்த பேய், தான் வரும்பொழுது வட

கலிங்கத்தில் கண்ட உற்பாதங்களை விவரிக்கின்றது. உடனே காளிதேவியானவள் அப்பேய் கண்ட உற்பாதங்களுக்கு வியாக்யானம் செய்கிருள். பின்பு காளிதேவி கூளிக்குக் குலோத்துங்கனுடைய அவதார மகிமைகளையும் வீரதீரங்களையும் விளக்குகிருள். அதே நேரத்தில் கலிங்க நாட்டிலிருந்து வந்த ஒரு பேய் அங்கு நடக்கும் போரைப் பற்றிச் சொல்கிறது. அப்பொழுது பேய்கள் எல்லாம் ஆரவாரமிடுகின்றன. இதன் பின்பு குலோத்துங்கன் கலிங்க வேந்தன்மீது படை எடுத்துச் சென்ற வரலாறு, போராட்டத்தின் சாகசங்கள், போர்க்களத்தின் கோர நிலைமைகள் ஆகியவை விஸ்தரிக்கப்படுகின்றன. அலுப்புத் தட்டக்கூடிய சாதாரண விஷயமாகிய யுத்தத்தை வைத்துக் கொண்டு நாடகம் போலக் கதையாக்கிவிட்டார் ஆசிரியர். தமிழில் முதல் முதலாக உண்டாகிய பரணி இவருடையதுதான். பரணி இலக்கியத்திற்கே ஆதிதேவனுக விளங்கக்கூடிய இவர், விஷயத்தை விஸ்தாரமாகவும் நயமாகவும் கையாண்டதோடு அழுத்தமாகவும் கையாண்டுள்ளார்.

## இணையற்றது

தமிழில் இதற்கு இணையான பரணியே கிடையாது. கவிதையை, வசீகரமும் வனப்பும் நிறைந்த சாதனையாக்கி, வெற்றி கண்ட மேதைகளில் சயங்கொண்டாரும் ஒருவர். சயங்கொண்டார் ஒட்டக்கூத்தரைப் போலவோ, முத்தொள்ளாயிரத்தானைப் போலவோ விஷயத்தை நகாசு படுத்துவது கிடையாது. மாணிக்க வாசகரைப் போல பாஷையில் சிற்றுளி வேலை செய்வதும் கிடையாது. விஷயத்தை நேருக்கு நேர் நின்று உதாரணமாகக் கையாளுவது இவருடைய தனிப்பட்ட பண்பு. இதற்கு ஈடு சொல்ல வேண்டுமானுல் காரைக்கால் அம்மையாரையோ, பட்டினத்தாரையோதான் சொல்லவேண்டும்.

## அசாதாரணமான பண்பு

கலிங்கத்துப் பரணியில் உள்ள எந்தப் பாடலை உருவி யெடுத்தாலும் சரி, விஷயம் நம்முடன் பழகியதுபோல மிளிரும். படிக்கப் படிக்க அவர் எடுத்தாளும் விஷயம் தினுசு தினுசாகப் பிரகாசிக்கும். வருணனைகளையும் காட்சி களையும் தத்ரூபமாகச் சித்தரித்து விடுகின்ற பண்பு இவரிடம் அசாதாரணமாக அமைந்துள்ளது.

இவர் போர்க்களத்தையும் அதன் குரூரக் காட்சி களையும் வருணிக்கின்ற தன்மை, நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றது. கருணாகரனது போருக்கு ஆற்றமுடியாமல் தப்பி ஓடுகின்ற கலிங்கப் படையாளர்கள் நம் கண்முன்னே சதா நிற்கின்றார்கள். அவர்களது மாறுவேடமும் பண்டாரக் கோலமும் பார்க்கப் பார்க்கச் சிரிப்பூட்டுகிறது.

சிறுகாப்பியத்தில் பாத்திரம் படைப்புக்களோ குண சித்திரங்களோ தேவை இல்லாவிட்டாலும் சயங்கொண் டாரது கையில் அதுவும் அகப்பட்டு உருவாகி விடுகிறது. விரிவே இல்லாமல் தோன்றி மறையக் கூடிய நிலைமையில் கூட பாத்திரங்கள் உண்டாகிச் சிரஞ்சீவித்வம் பெறுகின்றன என்றால் அதை சயங்கொண்டாருடைய கைவரிசை என்று தானே சொல்லவேண்டும்.

ஒரு உதாரணம் :

கலிங்க மன்னன் கப்பம் கட்டவில்லை என்று கேள்விப் பட்ட உடனே, குலோத்துங்கன் தோன்றுகிறான். முதலில் குலோத்துங்கனைப் பற்றிய ஒரு காட்சி; அதன்பின்பு அவனது ஆணை.

தூதுவர்கள், குலோத்துங்கனிடம் கலிங்க வேந்தனைப் பற்றிச் சொன்னதுதான் தாமதம்; சூழ நிற்கும் அரசர்கள் எல்லாம் அரசனுடைய உதட்டில் புன்முறுவல் நெளிகிறதே, என்ன நடக்குமோ என்று பதறிவிட்டார்களாம். முகத்திலே

சீற்றம் இல்லாமல் உதட்டில் மாத்திரம் ஏன் இந்த ஏளனச் சிரிப்பு என்று அவர்கள் மயங்குகிறுர்களாம்.

[1] உறுவ(து) என்கொல் என நிலகுலந்(து) அரசர்
உயிர் நடுங்கஒளிர் பவளவாய்
முறுவல்கொண்ட பொருள் அறிகிலம், சிறிதும்
முனிவு கொண்டதிலே வதனமே

இப்படியாகக் காட்சி கொடுக்கிறுன் குலோத்துங்கன். அவன் வாய் அசைகிறது. குரல் இடி இடித்தாற்போல எதிரொலிக்கிறது.

[2] எளியன் என்றிடினும் வலியகுன்(று) அரணம்
இடிய, நம்படைஞர் கடிது சென்(று)
அளி அலம்புமத மலேகள் கொண்டணேமின்,
அவனேயும் கொணர்மின் எனலுமே

இரண்டே கீறல்களில் தத்ரூபமாக உருவாகிவிட்டான் குலோத்துங்கன். அவன் குரல் கம்பீரமாகவும், அதிகார மமதையோடும் ஒலிக்கிறது.

பாத்திரம் உருவாகிவிட்டாலும் அது நிலே பெற்று நிற்பதற்கு ஒரு வழிதான் உண்டு. பாத்திரங்களே எந்த அளவோடு நிறுத்தவேண்டும், எவ்வளவுதூரம் கொண்டு போகவேண்டும் என்பதுதான் அது. இந்த அளவும் நிர்ணயமும் இல்லாவிட்டால் பாத்திர சிருஷ்டி அப்படியே உலேந்துவிடும். இந்த அளவைகளானவை, வருணனே, கதைப்போக்கு, சம்பாஷணே முதலிய ஒவ்வொரு துறையிலும் கையோடு ஒட்டி வரவேண்டிய காரியங்கள். இந்த

---

1 உறுவது - நிகழப்போவது ; அறிகிலம் - தெரியவில்லேயே ; முனிவு - கோபம் ; வதனம் - முகம்.

2 எளியன் என்றிடினும் - கலிங்க வேந்தன் அப்பாவியானுலும்கூட ; கடிது- வேகமாக ; அளி அலம்பு மத மலேகள் - வண்டுகள் மொய்த்து விளேயாடுகின்ற மதம் பொழியும் யானேகள் ; கொண்டணேமின், கொணர்மின் - என்பவை, கொண்டுவாருங்கள் என்னும் கட்டளேயை உணர்த்தும்.

வகையில், சயங்கொண்டார் மிக்க சிரத்தை உள்ளவர். அளவுக்கு மீறிப் பாத்திரங்களை வளர்க்க வேண்டுமே, அதற்குப் பக்க பலம் சேகரிக்க வேண்டுமே என்ற அனுவசியமான வேலைகள் அவரிடத்தில் கிடையாது.

## கலிங்க மன்னன் சிரிப்பு

உதாரணமாக கருணாகரனது படைகள் கலிங்க நாட்டிற்குள் வந்து நாசம்புரிவதைக் கேள்விப்பட்ட கலிங்க மன்னன் சிரிக்கிறான்.

* வண்டினுக்கும் திசையானை மதம் கொடுக்கும்
மலர்க்கவிகை அபயற்(கு) அன்றித்
தண்டினுக்கும் எளியனோ எனவெகுண்டு
தடம்புயங்கள் குலுங்க நக்கே

'நான் சோழ வேந்தனுக்குப் பயப்படுவதோடல்லாமல் அவன் சேனைகளுக்குமா பயப்படவேண்டும்?'

கானரணும் மலை அரணும் கடலரணும்
சூழ்கிடந்த கலிங்கர்பூமி தானரணம் உடைத்தென்று
கருதாது வருவதும் அத் தண்டு போலும்

நாலா வழிகளிலும் கலிங்கநாடு பாதுகாப்பு நிறைந்தது என்பது அப் படைக்குத் தெரியாதுபோலும்; தெரிந்தால் அப் படைகள் இப்படி அச்சம் இல்லாமல் வருமா என்று கொக்கரிக்கின்றான்.

இரண்டு பாடல்களினாலேயே உருவாகி விட்டான் கலிங்கமன்னன். அவனது கோபம், மனப்புழுக்கம், மீசைத் துடிப்பு அத்தனையும் துலாம்பரமாகத் தெரிகிறது. நாடக மேடையில் தோன்றுகின்ற ஒரு வீரனுடைய முத்தாய்ப்புப் போலிருக்கிறது அவனுடைய பேச்சு.

---

* அபயன் - சோழன்; தண்டு - சேனை. நக்கு - கோபத்தினால் சிரித்து.

இப்பாத்திர சிருஷ்டியை இத்தோடு நிறுத்திக்கொண்டார். இந்த இடத்தில் இதற்குமேல் இவனது கோபத்தைக் காட்டினுல் அது வெறும் பிரசங்கமாகப் போய்விடும் என்பது அவருக்குத் தெரியும். கதையும் இடைஞ்சல்படும்; சம்பவங்களும் நகராது. ஆனுல் அவனுடைய வீராவேசத்தை இனி வேருெரு வகையில் வெளிப்படுத்துகிருர். எங்கராயன் என்கின்ற மந்திரி புத்திமதி சொல்ல அதைக் கலிங்க மன்னன் உதறி எறிந்துவிடுவதாகச் சித்தரிக்கப்படுகின்றுன். இதன் மூலமாகக் கதைக்கு ஒரு வளைவு உண்டாகிப் பாத்திர சிருஷ்டியும் பரிபூரணப்படுகிறது.

குலோத்துங்கனிடம் எங்கராயன் சொல்லுகிருன்:

'ஏனை வேந்தை எறியச் சயதரன்
தானை அல்லது தான் வரவேண்டுமோ?
விட்ட தண்டினில் மீனவர் ஐவரும்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலும்நீ?
போரின் மேல்த்தண்டு எடுக்கப் புறக்கிடும்
சேரர் வார்த்தை செவிபட்ட(து) இல்லையோ?
இன்று சீறினும் நாளை அச்சேனைமுன்
நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால்'

எங்கராயன் மூலமாக இப்படி ஒரு வளைவை உண்டாக்கிவிட்டு மறுபடியும் கலிங்க வேந்தனைப் பூரணமாக்குகிருர். எங்கராயனுக்குப் பதில் சொல்லுவதின் மூலமாக அது உண்டாகிறது. எப்படி என்று அதைப் பார்ப்போம்:

எங்கராயன் சொல்லியதைப் பொறுக்க முடியாமல் மனம் வெதும்பிச் சொல்லுகிருன் அனந்த பத்மன்.

'என்றிவை உரைத்தலும் எனக்(கு) எதிர் உரைக்க
இழையோர்களும் நடுங்குவர், புயக்
குன்றிவை செருத் தொழில் பெருது நெடு நாள்
மெலிவு கொண்டபடி கண்டுமிலையோ?

என்னுடைய தோள் வலியும் என்னுடைய
வாள்வலியும் யாதும் அறியாது பிறர்போல்
நின்னுடைய பேதைமையி னுலுரை
செய்தாய் இது நினைப்பளவில் வெல்ல அரிதோ?'

இனி சேனைகளை நோக்கிக் கட்டளையிடுகிருன் :

'பண்ணுக வயக்களிறு! பண்ணுக வயப்புரவி!
பண்ணுக கணிப்பில் பலதேர்! நண்ணுக படைச்செருநர்!
நண்ணுக செருக்களம்! நமக்(கு)இகல் கிடைத்ததெனவே!'

கடவுள் தத்துவத்தைப் பற்றி நம் முன்னோர்கள் பலவித மாகப் பாடி இருக்கிருர்கள். சயங்கொண்டாரும் கடவுள் தத்துவத்தைப்பற்றிச் சொல்லத்தான் செய்கின்ருர். மற்றவர் களிடம் இல்லாத ஒரு புதுமையும் தெளிவும் இவரது பாடலில் உண்டாகிவிடுகிறது. விஷயம் சாதாரணமானுலும் கவிதா வெறியில் அவை பூதாகாரமாக விரிந்துவிடுகிறது, எப்படி என்று பார்ப்போம்:

## கடவுள் தத்துவம்

கிணற்றுக்குள்ளிருந்து நான்கு பானைத் தண்ணீரை வீடு கொண்டுவந்து சேர்ப்பதற்குள் நமக்குக் காலோய்ந்துவிடு கிறது. உடம்போடு மனமும் தளர்ந்துவிடுகிறது. நமது சக்தியின் அளவைச் சுட்டிக் காட்ட இது ஒருவாறு போதும். ஆனுல் மஞ்சள் கடலில் உள்ள சமுத்திர நீரை வாரி அடித்துவந்து இமயமலைச் சிகரங்களோடு பொதியமலைச் சிகரங்களும் நடுங்கும்படியாக ஒரு சக்தி, வெள்ளத்தைப் பொழிகிறது. அதே சக்தி இப்பேரண்ட முழுவதையும் ஒளி வெள்ளமாக நிறைத்துவிடுகிறது. மண்ணையும் கல்லையும் மணலையும் ஊடுருவி நிற்கும் அதே சக்தி நெற்பயி ராகவும், ரோஜாமலராகவும் மாதுளங்கனிகளாகவும் பூத்துக் குலுங்குகின்றது.

இப்படி எங்கும் பரந்து யாவற்றையும் இயங்கப் பண்ணுகின்ற அந்த அபூத நியதியைக் காளிதேவியாகப் பாவிக்கின்ருர் நம் ஆசிரியர்.

அவள் நினைத்தால் என்னதான் நடக்காது என்று வியப் படைகிருர். இந்த இடத்தில் கவிதை உல்லாசமாக மலர்ந்து வருகிறது. இதோ சொல்லுகிருர். 'காளிதேவியானவள் காதணி போடவேண்டுமே என்று எண்ணிவிட்டால் மலைகள் எல்லாம் காதணிகளாக மாறிவிடும். மாலை போட வேண்டும் என்று எண்ணிவிட்டாலோ அதே மலைகள் பாசி மணியாகவும் மாறிவிடும்.'

அண்டமுறும் குலகிரிகள் இருகாதில்
அவள் ஒருகால்
கொண்டணியில் குதம்பையாம்
மணிவடமாம் கோத்தணியில்

அதுமாத்திரமா ? விளையாட விரும்பிவிட்டால் இதே மலைகள் அவள் மலர்போன்ற கையில், தட்டாங் கல்லாகவும், பந்தாகவும், கழற்சிக்காயாகவும் உருண்டோடி வருமாம்.

கைமலர்மேல் அம்மனையாம்
கந்துகமாம் கழங்குமாம்
அம்மலைகள் அவள்வேண்டின்
ஆகாத(து) ஒன்றுண்டோ ?

வானளாவி விரிந்துபரந்துள்ள மலைகளை அவளுக்குக் குதம்பையாகவும் பாசிமணியாகவும் அலங்காரம் செய்யப் புறப்பட்டுவிட்டால் அவளுடைய ரூப தரிசனம் எவ்வளவு கண்கொள்ளாக் காட்சியாக மிளிரும் ? அகண்டமாக விரிந்து பரந்துள்ள ஒரு நியதியை, உண்மையை இப்படி ஒரு முனைப்படுத்துவதுதான் கவிதை.

கம்பனுடைய மகா காவியத்திற்கு முன்னே தோன்றிய வற்றுள் கலிங்கத்துப் பரணிக்கு இணையாகக் கவிதை அழகு

பொருந்திய நூல் ஒன்றுமே கிடையாது. கலிங்கத்துப் பரணியில் கம்பன் மிகவும் ஈடுபட்டவன் என்பது அவனுடைய சில போக்குகள் நிரூபிக்கின்றன.

கம்ப நாடன் என்கின்ற தேவகுமாரன் அவதாரம் செய்யப்போகிருன் என்பதைக் கட்டியம் கூறவந்தவர்கள் தான், இந்தப் பதினேராம் நூற்ருண்டுப் புலவர்கள். அவர்களில் சயங்கொண்டார் முதன்மையானவர்.

இரண்டு பெரிய மகா யுத்தங்கள் கலிங்க தேசத்தில் நடந்துவிட்டதாகச் சரித்திரம் கணித்துள்ளது. யுத்தத்தில் ஏற்பட்ட சேதங்களும் நாசங்களும் அளவிற்கு மீறியதுதான். ஆனுலும் அந்தக் கெடுதலிலிருந்து இரண்டு பெரிய நன்மைகள் தோன்ருமல் போய்விடவில்லை. ஒன்று அசோகனுடைய சத்திய வாழ்க்கையோடு ஒட்டிய தருமசக்கர ஆட்சி; மற்ருென்று சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி.

# சீதை

> பீடுடைய இருக்கையைநின் பெருமையே பேசாதோ
> வீடுடைய நெறிமையைநின் மேனியே விளக்காதோ
> ஒல்லாத வாய்மையைநின் உறுபுகழே உரையாதோ
> கல்லாத அறிவினைநின் கட்டுரையே காட்டாதோ

**ச**னக மகாராஜனுடைய ஞானப் புதல்வியாகவும் ராம பிரானுடைய தர்ம பத்தினியாகவும் அவதாரம் செய்த பிராட்டி இந்த (ராமாயண)க் காவியத்தின் ஜீவிதமாக விளங்குகிருள். சீதையை இந்தக் காவியத்தின் பிரதான பாத்திரம் என்று சொல்லுவதை விட உருண்டு திரண்ட ஒரு தத்துவத்தின் மானுட வடிவம் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும். பிராட்டி இந்தக் காவியத்தில் பிரவேசிப்பதன் மூலமாகச் சத்தியத்திற்குத் தன்னம்பிக்கை ஏற்பட்டது. தருமதேவதைக்குத் தெம்பு உண்டாகி விட்டது. அழகுத் தெய்வத்திற்கோ தன்னிடத்திலேயே கவர்ச்சியும் பிரியமும் ஏற்பட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கிவிட்டது.

வேதாந்த விசாரணை செய்து செய்து உறுதி கொண்டு மிருதுவாகிவிட்ட சனகனுடைய இதயம், சீதையை நாடித் தக்க மணவாளன் ஒருவன் வரவில்லையே என்று மறுகியது. இந்தத் துயரத்தைத் தன்னந்தனியாகச் சுமந்து தவிக்கின்ற அவனுடைய இதயம் சிவ தனுசுவை எண்ணி ஏங்கியது. அதன் பளுவையும் பாரத்தையும் பொறுக்க முடியாமல் அது தத்தளித்தது.

சீதை கன்னிப் பெண்ணாக வாழ்ந்து வந்தாள். அவளுடைய அழகு ஈடு இணை அற்றது. இயல்பாகவே வெட்டுண்ட நிலாத்துண்டம் போன்ற நெற்றி, அதிலே ஒரு ரத்தினக்கல்லை எடுத்து வைத்தாற் போன்ற சின்னஞ் சிறு திலகம், கடை சுருண்டு நீண்டு கறுத்த கூந்தல், மான்போலக் குளிர்ந்து மதமதர்த்த பார்வை, பர்வத சிகரத்தின் கொண்டையில் முளைத்த மூங்கிலைப்போன்ற மெத்தென்ற தோள்கள், வீணையின் நாதங்கூடக் குழைந்து நாணும்படியான மழலைச் சொற்கள்.

ரத்தினக் கசிதமாக இழைக்கப்பட்ட வாகு வளையங்கள் அவள் தோளிலே கிடந்து துவண்டன. முத்தாரங்களோ மார்பிலே அசைந்து புரண்டன.

சந்திரன் கூடக் கண்ட மாத்திரத்தில் திகைத்துப் பின் வாங்கும்படியானது அவளுடைய சுந்தர வதனம். பெண்ணினத்தின் பெருமையை அந்தரங்கமாக வெளிப் படுத்த அதரத்தோடு வருகின்ற புன்முறுவல் அவள் கன்னங்களிலே சிறு சிறு குழிகளை உண்டாக்க முகத்தின் சௌந்தர்ய வெள்ளம் ஓடி வந்து நிரப்பிவிடும்.

வேதங்களையே பாதசரங்களாகவும்; சங்குகளையே வளையல்களாகவும் அணிந்து வந்த மாதரசி கன்னிகா மாடத்தின் உள்ளேயே நடமாடி வந்தாள். அவளுடைய பார்வையும் சாயலும் மனித வமிசத்தை ஆசீர்வதிப்பது போலவும் அலங்காரப்படுத்துவது போலவும் பரவசப் படுத்தியது.

தாடகையின் உடம்பைக் கழுகுகளுக்கு வீழ்த்திவிட்டு, அகலிகையின் பெண் வடிவைக் கல்லிலே மலரவைத்து விட்டு, ராமன் மிதிலைத் தெரு வழியாக நடந்து வருகிறான்.

மேலை வெளியிலே, அந்திப் பொழுது கோலங்கள் போடுகிறது. பரவச உணர்ச்சி நரம்புகளை எல்லாம்

கடந்து உற்சாகப் படுத்துகிற இந்த வேளையில் சீதையும் உப்பரிகையின் முன்னேரமாக வந்து எட்டிப்பார்த்தாள்.

ராமனைச் சீதையும், சீதையை ராமனும் மாறி மாறிப் பார்த்தார்கள். அவர்களுடைய பார்வையைப் பின்பற்றி இதயம் சென்றது. இதயத்தைத் தொடர்ந்து உடம்பும் அணு அணுவாகப் பிரிந்து சென்றது. வேதனையும் திகைப்பும் நிறைந்த அவர்களுடைய பார்வையில் காதலுக்கு ஒரு உறுதி ஏற்பட்டது. அழுத்தமும் உண்டாக்கியது. இருவருடைய நயனங்களும் ஏங்கி அலைமோதின. விசுவாமித்திரன் முன்னே செல்ல இளையவன் பின்னே நடந்துவர ராமன் மிதிலையின் தெருவழியாக நடந்துவந்தான். அவனுடைய கோதண்ட தனுசு அவன் தோளை அமுக்கியது.

**அந்தம்இல் அழகனை அணைகிலாமையால்**
**பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்**
**சிந்தையும் நிறையும்மெய் நலனும் பின்செல**
**மைந்தனும் முனியொடு மறையப் போயினன்.**

"போனவன் திரும்பி வருவானா ? என்னைக் காப்பாற்றிக் கரையேற்றுவானா ?" என்று சீதையினுடைய உள்ளம் இடிந்து கரைந்தது.

தனக்குள் தானே மகிழ்ந்து சிரிக்கிற செந்தாமரை மலர் போன்ற அவனுடைய நயனங்களும், கனிந்த இருட்டைப் போன்ற திருமேனியும், வீரலட்சுமி தன் வதனத்தால் கிண்டி உழுகின்ற தோள்களும், சந்திரன் போன்று குளுமையும் பிரகாசமும் நிரம்பிய அவனுடைய திருமுக மண்டலமும் சீதையினுடைய பார்வையில் வந்து வந்து விழுந்தன. இவைகளை விலக்கி அவனுடைய சொகுசான புன்முறுவல்கள் ஊடுருவிப் பிரகாசித்தன. அவனை நேருக்கு நேராகப் பார்க்கும் பொழுது இந்தப் புன்முறுவல் தேவாமிர்தம் போல அபயம் தந்தது. இப்பொழுதோ ஆலகால விஷம்போலப் பழிவாங்குகிறது.

வருகின்ற அபாயத்தைக் கிலேச ரூபத்தில் விரிவு படுத்த, இருட்டானது தனக்குள் தானே கறுத்து இறுகியது.

சமுத்திரத்தைத் தன் கிரணக் கற்றைகளால் விலக்கி, மேலே கிளம்பி ககன மார்க்கமாக வருகின்ற சந்திரன், பூரணசுதந்தரத்தோடு அகண்டாகாரம் முழுவதையும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தான். தன் கண்ணில் தென்பட்ட ஓட்டை உடைசல்கள் முழுவதையும் அமிர்தமயமான கரங்களால் பூசிச் சீர்படுத்தினன். சந்திரனுடைய இந்தப் பால்வெள்ளத்தில் வையமும் வானும் தன்னை மறந்து மிதந்தன. சில காட்டுப் பூக்களும் நீர்ப்பூக்களும் மாத்திரம் இந்தக் குணம் ஒத்துக் கொள்ளாமல் வாடி வதங்கி உதிர்ந்தன.

சீதையினுடைய உடம்பு விரக தாபத்தால் தீயாய்க் கொதித்தது. அவளுடைய ஆவியோ புழுங்கி வாடியது.

*நீக்கம் இன்றி நிமிர்ந்த நிலாக்கதிர்*
*தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்*
*சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப்*
*பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள்*

*வாச மென்கல வைக்களி வாரிமேல்*
*பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்*
*வீச வீச வெதும்பினள் மென்முலை*
*ஆசை நோய்க்கு மருந்து உண்டாங்கொலோ*

விசுவாமித்திரன், ராமனையும் லக்குமணனையும் அழைத்துக் கொண்டுபோய்த் தனித்தனியாகப் படுக்க வைத்தான். காலா காலத்தில் படுத்ததில் குறைவில்லை. ஆனல் ராமனுக்கு உறக்கம் வரவேண்டுமே.

சீதையை அலைக்கழிக்கின்ற இருளும், நிலவும், உருவெளித் தோற்றமும், தனிமை உணர்ச்சியும் ராமனைச்

சும்மா விட்டுவிடுமா? 'இப்படி எல்லாம் நம்மை அவஸ் தைப்பட வைத்து விட்டதே இது' என்கின்ற ஏக்கந்தான் ராமனை விட்டு வைக்குமா?

**முனியும் தம்பியும் மொய்ம்முறையால் தமக்(கு)**
**இனிய பள்ளிகள் எய்தியபின் இருள்க்**
**கனியும் போல்வன, கங்குலும் திங்களும்**
**தனியும் தானும் அத் தையலும் ஆயினன்.**

இருள் கனியும் போல்பவன், ராமன்.

தையல் வந்தால் சாதாரணமாக வருவாளா? ராமனைத் தொந்தரவுக் குள்ளாக்கிச் சித்திரவதை படுத்துகின்ற கூற்றின் அட்டகாசமாகவே இருக்கிறது, இருளிலும் இருளூடு வந்த நிலவிலும், தன் வெறியிலும் தோய்ந்து எழுகின்ற சீதையினுடைய ரூபம்.

**வண்ண மேகலைத் தேரொன்று வாள் நெடும்**
**கண்ணிரண்டு கதிமுலை தாமிரண்டு**
**உண்ண வந்த நகையும் உண்டாமெனில்**
**எண்ணில் கூற்றினுக்(கு) இத்தனை வேண்டுமோ?**

சீதையும் ராமனும் தனித்தனியாகக் கிடந்து இரவில் இப்படி அவஸ்தைப் படுகிறார்கள். அவர்களுக்குச் சிறிது ஆறுதலளிக்க உதயமாகி வருவதுபோல் சூரியனுடைய அனந்தகோடி கரங்களும் இருளை விரட்டிப் பிரகாசத்தைக் கொடுத்தது.

"அப்பாடா! பொழுதும் விடிந்ததா?" என்று ராமன் எழுந்திருந்தான். சனகனுடைய ஞான கூடத்திற்கு— அவனுடைய பட்டி மண்டபத்திற்கு ராமனையும் லட்சு மணனையும் அழைத்துக் கொண்டுபோய் விசுவாமித்திரன் அறிமுகப்படுத்தி வைத்தான். ராமனுடைய கல்யாண குணங்களையும் புஜபல பராக்கிரமங்களையும் வெகுவாகப் புகழ்ந்து சனகனுக்கு எடுத்துரைத்தான்.

சனகனுடைய இதயத்திலே கிடந்து உறைந்துபோன துயரம் கரைந்து ஓடியது. அது அப்படி ஓடும்போது பாரமான வில்லின் சாயல் சோகத்தின் கொழுந்துபோல விழுந்து சனகனுடைய மனசை நிர்த்தாட்சண்யமாக அழுத்தியது.

சனகனுடைய கண்கள் நீரால் சிறிது நனைந்தன. ஆசார வாசலில் ஜனக் கூட்டம் சமுத்திரம் போல நிறைந்து திமிறியது. ராமனுடைய அழகையும் வசீகரத்தையும் நினைந்து நினைந்து இளமங்கையர் பெரு மூச்சு விட்டார்கள். " இவனுக்கு முன்பாகவா இவ்வளவு பெரிய வில்லைப் போடுவது " என்று பச்சதாபப்பட்டார்கள். " சீதையைப் பிடித்து இவன் கையில் கொடுப்பதை விட்டு விட்டு இப்படி எல்லாம் அசட்டையாக நடந்து கொள்கிறானே சனகன் " என்று சிலர் சிரித்தார்கள்.

ராமனுடைய ஸ்பரிசம்பட்ட மாத்திரத்தில் சிவதனுசு துவண்டு குழைந்தது. இரண்டு துண்டாக முறிபட்டு அவன் காலடியில் விழுந்தது. இடிக் கூட்டங்களின் சஞ்சார முழக்கம்போன்ற தொனியைத்தான் கேட்டார்களே தவிர, வில்லை எடுத்ததையோ முறித்ததையோ மிதிலை வாசிகள் பார்க்கவில்லை.

சீதையினுடைய செவியில் இவை ஒன்றுமே விழவில்லை. கன்னி மாடத்தின் உச்சியில் தனியே கிடந்து தவிக்கும் அவளுக்குச் சரியான ஸ்மரணையோ நிதானமோ இல்லை என்றே சொல்லிவிடலாம்.

" அவனை நான் இன்னுமொரு தடவை பார்க்க முடியுமா ? கைப்பிடித்த வில்லோடும், விற்பிடித்த கையோடும், மரகதப் பலகைபோன்ற அந்த மார்பையும், மார்பிலே கிடந்தசையும் பூணூலையும் அவனுடைய தோளையும் பார்க்காவிட்டால் என்னால் எப்படி உயிர் வாழ முடியுமென்று " புலம்புகிறாள்.

நாணுலாவு மேருவோடு பூணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும்வாளி யோடுலாவு தூணியும்
வாள் நிலாவின் நூலுலாவு மாலைமார்பும் மீளவும்
காணலாகும் ஆகின் ஆவி காணலாகும் ஆகுமே

ராமன் வில்லை முறித்த செய்தியை நீலமாலை சீதைக்குத் தெரிவிக்கிருள். நீலமாலை சொல்லும் அடையாள வரிசைப்படி வில்லை முறித்தது, நேற்றுக் கண்ட கோமகன்தான் என்பதைச் சீதை தத்தித்தத்தி முடிவு கட்டுகிருள். பொங்கி வருகின்ற மகிழ்ச்சியைத் தாங்க முடியாமல், சீதை அப்படியே குனிந்து தரையில் படுத்து விட்டாள்.

தசரதனுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. தன் பரிவாரங்களோடு தசரதன் மிதிலைக்கு வந்துவிட்டான். பூமண்டலாதிபதிகள் எல்லோருமே வந்துவிட்டார்கள். சதுரங்க சேனைகளோடும் உற்ருர் உறவினரோடும் நாட்டிலுள்ள ராஜாக்களெல்லாம் மிதிலை வந்து இறங்கி விட்டார்கள்.

எங்கு பார்த்தாலும் மகர தோரணங்கள், பூரண கும்பங்கள், மங்கல கோஷங்கள், மந்திர கீதங்கள், வாத்தி யங்கள், நடனங்கள், கேளிக்கைகள், சௌந்தர்ய தேவதை யின் கோடான கோடி ரூபபேதங்களும் மானுட வடிவங் களாய், அதை அநுசரித்த வஸ்துக்களாய் மிதிலையை அடைக்கலமாகக் கருதி வந்துவிட்டன.

ஜாஜ்வல்யமாய் அலங்கரிக்கப்பட்டுள்ள கல்யாணப் பந்தரில் முனிபுங்கவர்களும், வேத பாராயணர்களும் அமர்ந் திருக்கிருர்கள். உயர்ந்த கோமளக் கற்களால் இழைக்கப் பட்ட மகுடங்களைச் சிரசிலே தாங்கி, உடைவாளை இடுப்பிலே செருகி பூலோக இந்திரர்கள் கண்ணிமை கொட்டாது விழித்து இருக்கிருர்கள். பொது மக்களின் ஆரவாரத்தையோ அளவிட முடியாது. வசிட்டனும்,

தசரதனும், சனகனும், விசுவாமித்திரனும் ஒரு வரிசையாய் அரைச்சந்திர வட்டம் போல அமர்ந்திருக்கிறார்கள்.

மணப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் அலங்காரம் பண்ணி மணவறைக்கு அழைத்து வருகிறார்கள்.

சீதையினுடைய காதலின் உத்வேகத்தையும், ஆற்ற மையையும் முன்பு பார்த்தோம். இனி அந்த மாதரசியின் கனிவையும், பெரு நோக்கையும், தெய்வீக சௌந்தர்யத்தையும் நாம் பார்க்கவேண்டும். கம்பருடைய வாக்கில் பெண்ணினத்தின் அடங்காத பெருமையும், அளவிட முடியாத சீலமும், எப்படி உருவாகிறதென்பது தெரியவரும். மனித வமிசத்தைப் பெற்று வளர்த்துச் சிரஞ்சீவித்வம் கொடுக்கின்ற தாய்மை உணர்ச்சியும், தன் சௌந்தர்யத்தையும் உபகாரத்தையும் நாயகருக்குக் கொடுத்து வாழ வைக்கின்ற கருணையும், கம்பருடைய சிருஷ்டையில் சீதையாக மலர்கின்றது.

நவரத்தின கசிதமாக அலங்கரிக்கப்பட்ட சீதை தோழிமார் மத்தியில் அன்னம்போல நடந்து வந்தாள். அவளுடைய திருமேனியில் இழைத்துள்ள பலவகைப்பட்ட ரத்தினங்களும் ஒளிகளைக் கக்கின. தெறித்து விழுந்த ஒளிகள் ஒன்றுகூடிக் கண்சிமிட்ட அதன் சிரசிலே நடந்து வந்தாள். பூமாதேவி தன்மீது தன்னுடைய செல்வக் குமாரி (சீதை) நடந்துவந்தால் அவளுடைய பாதம் நோகுமே என்று பலவகைப்பட்ட பூக்களைத் தூவிப் பரப்பி வைத்ததைப் போல இருந்தது அந்த ஒளிகளின் விகசிப்பு.

*வல்லியை உயிர்த்தநில மங்கைஇவள் பாதம்*
*மெல்லிய உறைக்கும்என அஞ்சிவெளி எங்கும்*
*பல்லவ மலர்த்தொகை பரப்பினள், எனத்தன்*
*நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள்*

---

வல்லி - சீதை, அவளை உயிர்த்தவள் - அதாவது சீதையைப் பெற்றவளாகிய பூமாதேவி

சீதையின் சிரசுக்கு மேலாக ஒரு சந்திரவட்டக் குடை பிடிக்கப்பட்டது. அது முத்துச் சரங்களால் தொங்கவிடப் பட்டது. சாதிவயிரக் கற்களால் இழைக்கப்பட்டது. கண் கூசும்படியான அதன் ஒளி ரேகைகள் மணவறை மண்ட பத்தின் ஒளிகளை எல்லாம் அமுக்கிச் சூரியனைப்போலப் பிரகாசித்தது. சீதையின் பேரழகைக் கண்டு களிக்க, சூரியனே குடையாக வந்து சேர்ந்ததைப் போலவும் இருந்தது.

**மண்முதல் அனைத்துலகின் மங்கையருள் எல்லாம்**
**கண்மணி எனத்தகைய கன்னி எழில் காண**
**அண்ணல் மரபில் சுடர் அருத்தியோடு தானவ்**
**விண்ணிழிவ(து) ஒப்பதோர் விதான நிழல், வந்தாள்.**

அவள் நடந்து வரும்பொழுது தேவ கன்னிகைகள் நாணி ஒதுங்கிவிட்டார்கள். சித்திரத்தில் தீட்டப்பட்டுள்ள அன்னப் பேடுகள் கூட வெட்கப்பட்டுத் தலைகவிழ்ந்தன. தேவ லோகத்திலுள்ள அமிர்தமோ வெளிறி உலர்ந்துவிட்டது. தங்கக்கட்டியின் குளுமையான பிரகாசத்தை எடுத்து, மந்தார மலர்களின் நறுமணத்தோடு கலந்து, அரைத்து வைத்த சந்தனத்தையும் சிறிதே கூட்டி, மின்னலின் நிழலோடு பிணைத்து, அமிர்தத்தால் செய்த திருவுருவம் இந்தச் சபையிலே நடந்து வந்தது. நடந்து வரும்பொழுது சற்றே நெளிந்து நுடங்குவதும், கோணுவதும் சபையைத் திகைக்க வைத்தது.

**பொன்னின்ஒளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்**
**மின்னின்நிழல் அன்னவள்தன் மேனி ஒளி மான**
**அன்னமும் அரம்பையரும் ஆரமிழ்தும் நாண**
**மன்னவை இருந்தமணி மண்டபம் அடைந்தாள்**

"ராமனே திருமாலின் அவதாரம், அவனுக்கு நாயகியாக வாய்த்த இந்த மாது லட்சுமியின் அவதாரமாய் இருப்பதில்

சந்தேகம் என்ன, அதிசயந்தான் என்ன'' என்று வசிட்டன் வியந்துகொண்டான்.

“அறுபதினுயிரம் ஆண்டுகளாக அரசாண்டு அரசாண்டு என்ன பலனைக் கண்டேன். இன்றல்லவோ அரசாட்சியின் மகிமை தெரிந்தது. சாக்ஷாத் லட்சுமிதேவியே என் இல்லத்திற்கு வந்துவிட்டாளே!'' என்று தசரதன் பூரிப்படைந்தான்.

“இப்பேர்ப்பட்ட பேரழகி நாயகியாக வாய்க்கும்பட்சத்தில், இந்தச் சிவதனுசா பிரமாதம்! ஏழுகுல கிரிகளை ஒன்ருக்கி வில்லாய் அடித்துக் கொடுத்தாலும், அதையும் ஒடித்துவிடத் தைர்யம் வராமலா போய்விடும்! வில்லும், ஒடிபடாமலா போய்விடும்; வில்லின் பின்னுல் சீதேவி யல்லவா இருக்கிருள்?'' என்று விசுவாமித்திரன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அவனுடைய நீண்டு வெளுத்த தாடி நெஞ்சிற்கு மேலாக ஆடி அசைந்தது.

சீதை ராஜ சபையின் மத்தியில் நடந்து வந்தாள். கூடியிருந்த மக்களெல்லோரும் அவளைக் கண்ட மாத்திரத்தில் தலைமீது கைகூப்பி வணங்கினுர்கள். தெய்வத்தைக் கண்ட பிறகு கைகள் சும்மா இருக்குமா ?

நைவள நவிற்றுமொழி நண்ண வரலோடும்
வையம்நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்
கைகள் தலை புக்கன கருத்துளன எல்லாம்
தெய்வம் என உற்ற, உடல் சிந்தைவசம் அன்ருே

மானிட வர்க்கத்தை ரக்ஷிக்க வருகின்ற தேவதைப்போலச் சீதை சபையூடே நடந்து வந்தாள்.

முனிவர்களையும் தசரதனையும் முறைப்படி நமஸ்காரம் பண்ணினுள். சனகன் பக்கத்திலே போடப்பட்டிருந்த பூந்தவிசில் பக்குவமாக அமர்ந்தாள். அப்பொழுது சனகனுடைய கண்களைத் துளிர்த்து வருகிற கண்ணீர்த் துளி நனைத்துக்கொண்டிருந்தது. சனகனுக்கு அடுத்தாற்போல ராமனிருந்தான்.

மாதவரை முற்கொள வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி சோரும்
தாதை அரு(கு) இட்டதவி சில்த்தனி இருந்தாள்
போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள்

உப்பரிகையில் நின்று பார்க்கப்பட்ட மகானுபவனும் வில்லை வளைத்து இப்பொழுது தன் தந்தை அருகே இருப்பவனும் ஒருவனே என்பதைத் தேறத் தெளிய அறிந்து கொண்டாள். தன் கையிலணிந்த வளையல்களைச் சரிக்கட்டப் பார்ப்பதுபோல ராமனைப் பார்த்துக்கொண்டாள். எவ்வளவு பார்க்க வேண்டுமோ அவ்வளவு பார்த்துக் கொண்டாள். அவள் இதயத்தில் பரவசம் ஒன்றைத் தவிர இப்பொழுது வேறொன்றும் இல்லை.

எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்து
மெய்யனை விடத்துமுதல் ஐயம்விடல் உற்ருள்
ஐயனை அகத்துவடி வே அல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்

ராமனும் சீதையும் மணவரையில் தவிசேறி வீற்றிருந்தார்கள். சனகன் தன் திருக்கரத்தால் கன்னிகாதானம் செய்து கொடுத்தான். முனிவர்கள் பல்லாண்டு கூறினர்கள். வாத்தியங்கள் மங்களம் பாடின. பெரியவர்களும் படித்தவர்களும் ஆசி கூறினர்கள். தசரதனும் அவன் தேவிமார்களும் வாயார வாழ்த்தினர்கள்.

கோலாகலம் நிறைந்த மிதிலையில் ஆரவாரமும் மகிழ்ச்சியும் பொங்கி மறுகால் எடுத்தது. ராமனும் சீதையும் பலவகைப்பட்ட போகங்களிலும் பங்குகொண்டு திளைத்திருந்தார்கள். கல்யாணத்திற்கு வந்திருந்தவர்கள் புறப்

* சீதையை விட்டுப் பிரியவேண்டி இருக்கிறதே என்று எண்ணிய உடன் சனகனுக்கு அழுகை வந்துவிடுகிறது, செந்தாமரை மலரில் வீற்றிருந்த லட்சுமிதான் சீதை என்பது நாலாவது வரியின் கருத்து.

பட்டுப்போய் விட்டார்கள். விசுவாமித்திரன் கூட இமாசலத்தை நோக்கித் தவஞ்செய்யப் போய்விட்டான்.

கோனுகிய மணவாளனும் சனகன்தரு குயிலும்
நானுவித வருபோகமே நுகர்கின்ற அந் நாள்வாய்
ஆனுமறை நெறிமாதவ முனிகோசிகன் அருளிப்
போனுன் வட திசைவாய் உயர் பொன்மால் வரை புகுவான்

விசுவாமித்திரன் சென்ற பின்பு மேலும் சில காலம் ராமன் மிதிலையில் தங்கி இருந்தான். பின்பு சீதையை அழைத்துக் கொண்டு அயோத்தி வந்து சேர்ந்துவிட்டான்.

முனிபுங்கவர்களின் மத்தியில் ஞான கூடத்தில் தன்னுடைய மடியிலே புரண்டும் தோளில் துவண்டும் விளையாடிய சீதையின் பருவத்தைச் சனகன் நினைத்துப் பார்த்தான். அவன் கண்களில் நீர் முத்துமாலை கோர்த்தது.

இந்தக் காவியத்தின் நாயகியாய், கற்பின் கொழுந் தாய், அடக்கத்தின் பூஷணமாய் உள்ள தேவபாத்திரம், தன் கன்னிப் பருவத்தில் இருந்த வாழ்க்கையையும், அந்தப் பருவத்திலேயே வெடித்து மணம் வீசுகிற அவளின் தெய்வீகப் பண்பையும் கம்பர் அனுயாசமான முறையில் வனைந்து நமக்குத் தந்திருப்பது அதிசயமாக இருக்கிறதல்லவா?

# இராவணன்

இராவணன் பிதிரார்ஜித முறைப்படி இலங்கைக்கு மன்னன். சுய வெற்றி காரணமாக ஈரேழு லோகங்களுக்கும் பேரரசன். விண்ணையும் மண்ணையும் ஒன்றுகூட்டி அதை விளையாட்டு மைதானமாக வைத்துக் கொண்டவன். எடுத்த காரியமெல்லாம் அவனுக்கு வெற்றியைத் தந்தது. எந்தக் காரியத்திலும் அவனுக்கு மனப் போராட்டம் இருந்ததில்லை. "அப்படிச்செய்யாதே" என்று ஒரு தடவையேனும் அசரீரியாகக்கூடக் காதில் விழுந்ததில்லை. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களும் அவன் விரும்பும் பெண்ணின் முன்புதான் விசுவரூபம் எடுக்கின்றன என்பதற்கு இராவணன் ஓர் எடுத்துக்காட்டு.

இராவணனுடைய வாழ்க்கையை இரண்டு பிரிவாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். ஒன்று: இந்திரஜித்து மரணமடையும்வரை நடக்கும் நிகழ்ச்சிகள். இரண்டு: அதற்குப் பின் வருகின்ற இராவணனுடைய போர் நிகழ்ச்சிகள்.

முதற் கட்டத்தில் இராவணன் தலைமகனாக நின்று சுற்றத்தார்களையும், தலைவர்களையும் போருக்கு ஏவுவதும் அவர்கள் இவனிடம் நீதியை எடுத்துக் கூறுவதும் இவன் சீறி முடுக்குவதும் முக்கியமான அம்சங்கள். இதன் மூலமாக சம்பந்தப்பட்டவர்களோடு இவனுக்குள்ள உறவு நிலைமையும், கொள்கை காரணமாக அவர்கள் மோதி

முரணும்பொழுது ஏற்படுகின்ற போராட்டமும் சோக உணர்ச்சியை உண்டாக்குகின்றன.

இந்த வரிசையில் விபீஷணன், கும்பகர்ணன், இந்திரஜித்து இந்த மூன்று பேரோடும் இராவணன் மோதி முரணுகின்ருன். மூன்றும் மூன்று தினுசு.

இடையிடையே மாலியவான் என்கின்ற கிழட்டுப் பாத்திரம் வந்து இராவணனுக்கு இதோபதேசம் செய்வதும், மாலியவானை மாத்திரம் இராவணன் கடிந்து சீருமல் சரசமாக நடந்து கொள்வதும் அற்புதமான விஷயம்.

இராவணனுடைய சோக வாழ்க்கை யுத்த காண்டத்தில்தான் ஆரம்பிக்கின்றது. தேவாதி தேவர்களும் கைகட்டி நிற்கும் இலங்கையை ஒரு குரங்கு வந்து தீ வைத்தது. எரிந்து கருகிப்போன இலங்கை புகை நாற்றம் அடிக்கின்றது. இராவணனுடைய சரித்திரத்தில் இப்படி ஒரு கறை விழுந்தது கிடையாது. கொள்ளி வைத்த குரங்கோ வெற்றிகொண்டு திரும்பிவிட்டது.

இராவணன் ஆலோசனைக்குச் சபை கூட்டுகிருன். வேகமும், பயங்கரமும் கவிதா லயத்தில் தெறித்து விழுகின்றன. மந்திரி பிரதானிகள், சுற்றத்தார்கள் எல்லோரும் கூடிக் குழுமி விட்டார்கள். அரியேறு போல வந்த இராவணன், சபையை ஏற இறங்கப் பார்த்து ஆசனத்தில் அமர்ந்தான். அரம்பையர்கள் கவரி வீச வாசமாலைகள் ஆடி அசைய அவன் சபையைப் பார்த்துச் சொல்லுகிருன்.

சுட்டது குரங்(கு) எரி சூறை ஆடிடக்
கெட்டது கொடிநகர் கிளைஞர் யாவரும்
பட்டனர் பரிபவம் பரந்த(து) எங்கணும்
இட்டஇவ் அரியணை இருந்த(து) என்னுடல்

ஊறுகின் றனகிண(று) உதிரம் ஒண்ணகர்
ஆறுகின் றிலதனல் அகிலும் நாவியும்

கூறுமங் கையர்நறும் கூந்தலின் சுறு
நாறுகின் றதுநுகர்ந்(து) இருந்தும் நாமெலாம்

இராவணனுடைய மன உளேச்சலேயும் துயரத்தையும் அவனுடைய வார்த்தைகள் வெட்ட வெளிச்சம் ஆக்கு கின்றன.

மந்திரி பிரதானிகள் எல்லோருமே தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்கிருர்கள். ஒவ்வொருவருடைய வார்த்தைகளிலும் அரக்கர்களுடைய வீரமும் மானமும் பிரகாசிக்கின்றன. அதற்கு இப்படி ஒரு பங்கம் வந்துவிட் டதே என்று ஒவ்வொரு குரலும் முனகுகின்றது.

மந்திரி பிரதானிகளின் சுடு சொற்கள் இராவணன் மீதும் விழத்தான் செய்கின்றன. வருத்தத்தின் மிகுதியால் இராவணனுக்குத் தலே நிமிர முடியவில்லே.

இராவணனுடைய சபையில் பேசுகின்ற பாத்திரங் களுக்கெல்லாம் ஒரே குணம், பிரச்சினேயும் ஒன்றே. இந் தக் கட்டத்திலும் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒவ்வொரு முத்திரைகள் விழுந்து விடுகின்றன, ஒரே பிரச்சினேயின் ஒரே மூச்சை இப்படித் தனித் தனி உருவம் கொடுத்து விடுவது சாமான்ய காரியம் அல்ல.

கும்பகர்ணன் நீதியை எடுத்துச் சொன்னுன். இரா வணனுடைய செய்கையைக் கீழ்த்தரமான செயல் என்று கண்டித்தான். கடைசியில் மானத்திற்காகவேனும் போராடத்தான் வேண்டுமென்று முடித்தான்.

“ இன்று போரைத் தொடங்கு, நாளே உதயத்திற்குள் இராமன் இலக்குமணன்—இந்த இருவருடைய சிரசுகளே யும் கையிலேந்தி வருகின்றேன் ” என்று கெக்கலித்தான் இந்திரஜித்து.

விபீஷணன் கலப்படமற்ற நீதியை எடுத்து உபதே சித்தான் ; இராவணனிடம் நயந்து வேண்டினுன் ; சீதையை

விட்டுவிடும்படியாகக் கெஞ்சினுன். சீதையின் தன்மையை அவளே வஞ்சித்த பாவத்தை மனத்தில் படும்படியாக எடுத்துச் சொன்னுன். இப்படி முடிகிறது மந்திரப்படலம்.

கம்பனுடைய காவிய நாடகம் (அயோத்தியா காண்டத்தில்) மந்திரப்படலத்திலே ஆரம்பமாகியது. அதன் முடிவும் (யுத்த காண்டத்தில்) மந்திரப்படலத்திலே ஆரம்பித்தது.

அடுத்தது இரணியன் வதைப்படலம். இது மந்திரப் படலத்தின் வாரிசு. (இராவணனைப்பற்றிய) பின் நாடகங் களுக்கெல்லாம் ஒரு நிலைக்கண்ணுடி ; முன்னேடி.

எதிரி இல்லை என்ற மமதையில் செழித்த இரணியனை யும் இந்த நாராயணனே நரசிம்மாவதாரம் எடுத்து அழித்தான். அதே நாராயணன் இன்று ராமனுக வந்துள் ளான். அவனுடைய மனைவியை அபகரித்து வந்தது தகாத காரியம் என்று விபீஷணன் அதனை எடுத்துச் சொன்னுன்.

அவசர அவசியமான ஆலோசனைக் கட்டத்தில் இவ் வளவு பெரிய நாடக நிகழ்ச்சியை ஒருவன் உபதேசிக்க முடியுமா? இராவணன்தான் பொறுமையோடு இருந்து கேட்டுக்கொண்டிருப்பானு? இங்கே இந்தக் கேள்விகள் எழுகின்றன.

வில்லை நழுவவிட்டுத் தேர்த்தட்டில் சோர்ந்து விழுந்த அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசித்த பகவத்கீதை போன்றிருக்கின்றது விபீஷணனுடைய இரணிய நாடகம்.

இராமனுடைய பெருமையை எடுத்து விபீஷணன் முதலில் சொல்லியது இராவணனுக்குச் சரசமாடுவது போலிருந்தது. சிரிப்பும் கும்மாளியும் உடலைக் குலுக்கி யாட்ட, அவன் தம்பியைப் பார்த்துச் சொல்லுகிருன் :

“ஏதோ உபதேசம் சொல்பவனைப் போல ஆரம்பித் தாய். கடைசியில் பைத்தியக்காரனுக்கும் உனக்கும்

வேற்றுமை இல்லாதபடி நடந்துகொண்டாயே. மானுடர்கள் வல்லமையில் உனக்கு மயக்கமா அல்லது பயமா? அப்பனே, பயப்படாதே.''

இச்சை நல்லன உறுதிகள் இசைக்குவன் என்ருய்
பிச்சர் சொல்லுவ சொல்லினை என்பெரு விறலைக்
கொச்சை மானுடர் வெல்குவர் என்பது குறித்த
அச்சமோ அவருக்(கு) அன்பினே யாவதோ ஐயா?

இராவணன் மேலும் சொல்லுகிருன்:

"ராமனுடைய பெருமையை நீதானப்பா விவரிக்க வேண்டும். அவன் சாமான்யமானவனு? சொத்தை வில்லை முறித்தவன். உளுத்த மரங்களில் ஓட்டை போட்டவன். கூனியின் சூழ்ச்சியால் பட்டத்தைப் பறி கொடுத்து மனைவியையும் இழந்து தவிக்கிறவனை உன்னைத் தவிர வேறு யார் புகழ்வார்கள்?''

ஊன வில்லிறுத்(து) ஒட்டைமா மரத்துளம் போட்டுக்
கூனி சூழ்ச்சியால் அரசிழந்(து) உயர்வனம் குறுகி
யான் இழைத்திட இல்லிழந்(து) இன்னுயிர் சுமக்கும்
மானுடன்வலி நீயலா(து) யாருளர் மதிப்பார்

ஏகாதிபத்திய வெறியோடு ஆணவமும் செருக்கும் இராவணனுடைய பேச்சில் அலைமோதி வருகின்றன. தன் மமதையிலே விளைந்த தெம்பு எதிரிகளை அவ்வளவு அலட்சியப்படுத்த வைக்கின்றது.

இரணியனுடைய சரித்திரத்தை விபீஷணன் சொல்லி முடித்தவுடன் இராவணனுக்கு ஆங்காரம் பீறிட்டுவிட்டது. அவனுடைய கேலியும் கிண்டலும் பறந்தோடிப் பேச்சிலே தீப்பொறி பறக்க புகை சிதறி விளையாண்டது. இராவணன் சொல்லுகிருன்:

"எதிரிகளின்மீது உனக்கு இவ்வளவு உள்ளன்பா? அட மூடமே!''

முன்புற அனையர்பால் நண்பு முற்றின்
வன்பகை மனுசரின் வைத்த அன்பினை
என்புற உருகுதி அழுதி ஏத்துதி
உன்புகல் அவர்பிறி(து) உரைக்க வேண்டுமோ?

"கூட இருந்தே கொள்ளி வைக்கும் பாதகனே, இப்பொழுதே என்னை விட்டு நீங்கிவிடு. அற்பத்தனமாகப் பேசும் உன் வாயை மூடு. தாமதித்தால் உன் உயிரைக் காண முடியாது."

பழியினை உணந்துயான் படுக்கி லேன்உனை
ஒழிசில புகலுதல் ஒல்லை நீங்குதி
விழிஎதிர் நிற்றியேல் விளிதி என்றனன்
அழிவினை எய்துவான் அறிவு நீங்கினுன்

இப்படியாகச் சீறி முடுக்குகிருன் இராவணன். அவனுடைய புத்தியில் நஞ்சு விழுந்து குழம்பிவிட்டது போல இருக்கிறது. அவனுடைய கம்பீரமும் ராஜாங்க தோரணையும் சிதறுண்டு அற்பத்தனம் பளிச்சிட்டுப் பிரகாசிக்கிறது.

விபீஷணன் இராவணனை விட்டுக் கிளம்பிவிட்டான். அவன் இராமனிடம் அடைக்கலம் புகுந்து வாழ்கின்ருன். மூன்று பெரும் பாத்திரங்களில் ஒன்ருன விபீஷணனுடைய சரித்திரம் இப்படி நன்மையை உபதேசிக்க நட்டத்தில் முடிகிறது. தம்பியை இழந்த இராவணன் எள்ளளவேனும் கிலேசப்படவில்லை.

அடுத்தது அங்கதன் தூதுப் படலம். இது பின்வருகின்ற நிகழ்ச்சிகளுக்கு ஒரு தேவதூது. தெளிவான அசரீரிக் குரல்.

இராவணன் அங்கதனை நீ யார் என்று விசாரிப்பதும், அங்கதன் பதில் சொல்வதும் அபாரமாக இருக்கிறது. அங்கதனை இன்னுரென்று தெரிந்த இராவணன், "அட பைத்தியமே. தகப்பனை மறைந்து நின்று கொன்றவனைக்

கும்பிட்டு அவனுக்குத் தூது சொல்ல வந்துவிட்டாயே உன் மாசு இன்றோடு கழியட்டும்.''

சீதையைப் பெற்றேன் நின்னைச்
சிறுவனும் ஆகப் பெற்றேன்
ஏதெனக் கரிய(து) என்றான்
இறுதிநாற்(கு) எல்லை கண்டான்

என்று இராவணன் பசப்புகிறான். அதற்கு அங்கதன் சுடச் சுடப் பதில் சொல்லுகிறான். தூது முறிந்து அங்கதன் திரும்பிவிட்டான்.

இராமன் கேட்க, அங்கதன் பதில் சொல்வதாகக் கதை முடிகிறது.

உற்ற போதலன் உள்ளக் கருத்தெலாம்
கொற்ற வீரன் உணர்த்தென்று கூறலும்
முற்ற ஓதிஎன் மூர்க்கன் முடித்தலை
அற்றபோதன்றி ஆசை அரு(து) என்றான்

இராவணனுடைய விருப்பங்களை எல்லாம் விளக்கமாகச் சொல் என்கின்ற இராமனுடைய கேள்விக்கு அங்கதனுடைய பதில் ஆணித்தரமாக விழுகிறது.

"இராவணனைப்பற்றி வளைத்து வளைத்துப் பேசி என்ன பலன்? அவனுடைய சிரசுகள் அறுபட்டு உருளுகிற வரைக்கும் அவன் வழிக்கு வரமாட்டான்" என்கிறான் அங்கதன்.

யுத்தத்தைத்தவிர வேறு வழியில்லை, இதைப் பாடி வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் தெரியப்படுத்துங்கள். முரசினுடைய பேரொலி திசைகள் செவிடுபட அதிரட்டும் என்ற ஆணையோடு ஆரம்பிக்கின்றது முதற் போர்ப்படலம்.

போர் நிகழ்ச்சிகளைக் கம்பனைப் போலத் தத்ரூபமாக யாராலும் அமைக்க முடியாது.

இரண்டு வரிசைகளையும் நம் கண் முன்னே நிறுத்துவான்; வெற்றியையும் தோல்வியையும் மாறி மாறிப் பொருத்திக் காட்டுவான்; படைகள், சேனுதிபதிகள், போர் நாயன்மார் ஒவ்வொருவருடைய செயல்களும் தனித்தனி வடிவங்களாகப் பிரிந்துவந்து ஒரு கூட்டணியாக ஒன்றுபடும்.

இராமனுடைய ஆணையைக் கேட்டவுடனே இலங்கைக்குள் பாய்ந்துவிட்டன வானரப் படைகள். அங்கே அரக்கர்களுக்கும் வானரப் படைகளுக்கும் நடக்கும் யுத்தம். எது வெல்லுமோ எது தோற்குமோ என்ற நிச்சயமற்ற சூது விளையாட்டாக விளங்குகிறது.

இராவணனுடன் சுக்கிரீவன், அநுமன், இலக்குமணன் இவர்கள் ஒவ்வொருவரும் வந்து போரிட்டு விலகுகிருர்கள். கடைசியில் இராமனும் இராவணனும் போராடுகிருர்கள்.

படைக் கலங்களையும் போர்ச்சாதானங்களையும் இழந்து நிற்கும் இராவணனுடைய பரிதாப நிலையும், அவனைக் கண்டித்து இராமன் இதோபதேசம் செய்து, போருக்கு, இன்று போய் நாளை வா என விடுப்பதும் இந்த நாடகத்தின் சிகரம்.

இராவணனுக்கு இங்கு ஏற்பட்ட அவமான நிலைதான் கடைசிவரை அவனை இராமனுடன் போராட விடாமல் தடுக்கிறது. சுற்றத்தார்களையும் மைந்தர்களையும் மாறி மாறிப் பலி பீடத்தில் தள்ள வைக்கிறது. அவனை ஆணை இடு தலைமகனுக நிலை நிறுத்துகிறது.

குலக்கொடி போல அவனோடு வளர்ந்து வந்த அவனுடைய மானம் இன்றையப் போரில் கருகிச் சாம்பலாகி விட்டது. அது அவன் உள்ளத்தைப் பொசுக்குகிறது. படுக்கை மீது விழுந்து புரளுகிருன் இராவணன். போர்க்

களத்தில் எதிரியின் முன்னே தலை குனிய நின்றதுகூட அவனை உறுத்தவில்லை. இந்த நிலையைத் தெரிந்து கொண்டால்,

> வேல்நகு நெடுங்கண் செவ்வாய்
> மெல்லியல் மிதிலை வந்த
>
> சானகி நகுவள் என்றே
> நாணத்தால் சாம்பு கின்றான்

இந்தக் கட்டத்தில் மாலியவான் வந்து இராவணனிடம் உற்றது விசாரிப்பதும், அவனுக்கு இராவணன் உருக்க மாகப் பதில் சொல்வதும் அபாரமான விஷயம். இரா வணனுடைய மனசைத் தளரவிடாது தாங்குபவனைப் போல மகோதரன் வந்து குதிக்கிறான். அவன் கும்பகர்ண னுடைய வல்லமையை ஞாபகப்படுத்துகிறான். தூர்ந்து போன இராவணனுடைய இதயம் துளிர்விட ஆரம்பிக் கின்றது.

கும்பகர்ணனுக்கு அழைப்பு அனுப்பியாகிவிட்டது. உறக்கத்திலிருந்து கலைந்து எழுந்து வந்தான் கும்பகர்ணன், அண்ணனுடைய காலடிமாட்டில் மலைபோல விழுந்து கிடந்தான். தம்பியை மெதுவாக எடுத்துக் கைப் பிடியாக அழைத்துக்கொண்டு சரிசமமாக உட்கார வைத் துக்கொண்டான். குடங் குடமாக மதுவை ஊற்றி அதை மாமிசத்தோடு ஊட்டினான். கடல் நுரையை ஒத்த தூய்மையான சால்வைகளை அவன் அங்கங்களில் போர்த்தி னான். வெயிலொளி வீசுகின்ற மாணிக்க மாலைகளைப் பூட்டினான்.

ஐராவதத்தோடு அடிபட்டு ஓடிய இந்திரன், அந்த அவசரத்தில் நழுவவிட்ட யானையின் நெற்றிப் பட்டயத் தைக் கும்பகர்ணனுடைய நெற்றியில் வீரப் பட்டயமாகக் கட்டினான்.

மலைபோலவும் கடல் போலவும் விரிந்து பரந்த உடம்பு முழுவதையும் தெய்வ மணங் கமழும் சந்தனத்தால் குழைத்து பூசினுன். மாணிக்க மாலைகளை அணி அணியாகச் சூட்டினுன்.

சிவபெருமான் கொடுத்த கவசத்தைக் கும்பகர்ணனுடைய மார்பில் கட்டினுன்.

கொஞ்சம் கொஞ்சமாக தூக்கம் கலைந்து வருகின்ற கும்பகர்ணன்,முற்றும் கலையாத சொக்கோடு அண்ணனிடம் அதிசயமாகக் கேட்கின்ருன். (இந்த அலங்கார முறையும் இன்றைய நடவடிக்கையும் கும்பகர்ணனுக்கு அதிசயமாக இருக்கின்றன) எனக்குச் செய்யும் இவ்வளவு வரிசைகளுக்கும் காரணம் என்ன என்று, கும்பகர்ணனுடைய இடது புருவமும் தோளும் ஏனே மாறி மாறித் துடிக்கின்றன.

அன்ன காலையில் ஆயத்தம்யா வையும்
என்னகா ரணத்தா லென்(று)இ யம்பினுன்
மின்னின் அன்ன புருவமும் விண்ணினைத்
துன்னு தோளும் இடந்துடி யாநின்ருன்

இராவணனுடைய பதில் மிக்க அலட்சியமாக வெளிவருகின்றது. தம்பிக்கு இன்னும் அலங்காரங்களைச் செய்து கொண்டே பதில் சொல்வது போல இருக்கிறது தோரணை.

" சில குரங்குகளும் மனிதர்களும் நம் இலங்கையைச் சுற்றிச் சண்டை போட்டுக் கிடக்கிருர்கள். சில அரக்கர்களையும் கொன்று விட்டார்களாம். அவர்களுடைய உயிரை எனக்கு உணவாக வைத்திருக்கின்றேன் !"

வானரப் பெருந் தானையர் மன்னுயிர்
கோனகர்ப்புறம் சுற்றினர் கொற்றமும்
ஏனை உற்றனர் நீ அவர் இன்னுயிர்
போன கத்தொழில் முற்றுதி போஎன்ருன்

கும்பகர்ணனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. மண்ணில் வேரூன்றி வானகம் முழுவதும் கொடிவீசிப் படர்ந்த இராவணனுடைய புகழ் இப்படி அநியாயமாக நாசமாகிறதே என அவன் ஏங்கி மயங்குகிருன். அண்ணனிடம் வாய் விட்டுச் சொல்லுகிருன் :

"சீதையை விட்டு விட்டு விபீஷணனை அழைத்து வந்து மரியாதை செய்வதுதான் உத்தமம். இல்லாவிட்டால் நாம் தப்ப முடியாது. இது பொருந்தாவிட்டால் நம் சேனை முழுவதையும் ஒன்றுபடுத்தி ஏவி ஓரே நாளில் ஒரு முடிவுக்கு வந்து விடுவதுதான் பொருத்தம்" என்று சொல்லி முடித்தான்.

இராவணனுடைய சினத் தீயை அது கிளறி விட்டது. அடங்காத கோபத்தோடு இராவணன் சீறுகிருன் :

"மனிதர்களை வணங்கி குரங்குகளுக்குக் கைகட்டி நிற்கும் சேவகம் உனக்குப் பொருந்தும்; உன் தம்பிக்குப் பொருந்தும். இந்த மானங்கெட்ட பிழைப்பு இராவணனுக்கு ஏற்காது. மரியாதையாக எழுந்து போய்விடு.

"மனுஷர்களோடு பக்கபலமாகச் சேர்ந்து வருபவர்கள் எல்லாம் இப்பொழுதே வந்து விடட்டும். இதோ நான் போருக்குப் புறப்பட்டு விட்டேன். இந்த ஆணையை எல்லா இடத்திலும் அறிவித்து விடுங்கள். என்னுடைய படைக் கலங்களையும் ரதத்தையும் கொண்டு வாருங்கள்."

**தருகஎன் தேர்படை சாற்றென் கூற்றையும்**
**வருகஇவ் வானமும் மண்ணும் மற்றவும்**
**இருகைவன் சிறுவரோ (டு) ஒன்றி என்னொடும்**
**பொருகைவெம் போரெனப் போதல் மேயினன்**

---

தேர்படை—தேரையும் ஆயுதங்களையும். கூற்று—ஆணை. வானமும்—வானத்திலுள்ள தேவர்களும். சிறுவர்-ராம லக்குமணர். பொருகை—போருக்கு வரட்டும்.

இராவணனுடைய இந்த ஆவேசத்தைக் கும்பகர்ண னால் பொறுக்க முடியவில்லை. அண்ணனுடைய காலடியில் அப்படியே விழுந்தான். ஒரே ஒரு வார்த்தை எனக் கெஞ்சி மன்றாடினான்.

“எனக்கு ஆகாத விதி வந்து பிடரியில் ஏறிக் கொண்டது. ஆகவே போருக்குப் புறப்படுகின்றேன். போனால் திரும்பி வரமாட்டேன். அப்படித் திரும்பி வரமுடி யாமல் போனாலும் நீ கலங்கவேண்டாம். ஆனால் நான் மடிந்த பின்பேனும் நீ சீதையை ராமனிடம் விட்டுவிடு. அது தோல்வியாகாது. உண்மையான வெற்றி அது ஒன்று தான்.

“தெரிந்தும் தெரியாமலும் நான் செய்திருக்கும் தவறு களை நீ பொறுத்தருள வேண்டும். உன் திருமுக தரிசனம் எனக்கு இன்றோடு முடிந்துவிட்டது. பிரபுவே, இதோ நான் புறப்பட்டு விட்டேன்.”

**இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன**
**குற்றமும் உளஎனில் பொறுத்தி கொற்றவ**
**அற்றதால் முகத்தினில் விழித்தல் ஆரிய**
**பெற்றனென் விடைஎனப் பெயர்ந்து போயினான்**

தம்பியினுடைய இந்தப் பரிதாபக் குரலையும் போக் கையும் இராவணனால் கண்டு சகிக்க முடியவில்லை, அவனு டைய மனத்தை அது குத்திக் குடைந்தது. ஆனால் தன் கொள்கையை மாற்றிக் கொள்ளவும் முடியவில்லை. அதற்கு ஒரு வழியும் தெரியவில்லை. அனாதரவாகப் புறப்பட்டுப் போகும் தம்பியை வைத்தகண் மாறாமல்பார்த்துக்கொண்டே நிற்கின்றான். பொங்கி வருகின்ற அழுகை ரத்தத்தோடு

---

அற்றது—முடிந்து விட்டது. ஆரிய—புண்ணியவானே என்பது போன்ற ஒரு இரக்கச் சொல். பெற்றனென் விடை என—வருகிறேன் என்று சொல்லிக் கொண்டே.

தண்ணீரையும் கொட்டுகிறது. இருபது கண்களும் குழி விழுந்து தடாகங்களாக மாறிவிட்டன.

அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடும் குருதி தேக்கினன்
எவ்வழி யோர்களும் இரங்கி ஏங்கிட
இவ்வழி அவனும்போய் வாயில் எய்தினன்.

கும்பகர்ணன் இராவணனுடைய இதயத்தை முற்றுங் கவர்ந்தவன். அவன் அண்ணனுடைய பெருமையையும் செல்வத்தையும் பூரணமாக உணர்ந்தவன். பக்குவமாக விஷயத்தை எடுத்துச் சொன்னன். ஆனால் அதை ஒப்புக் கொள்ளாத அண்ணனை விபீஷணனைப் போல வெறுத்துப் போக முடியவில்லை. கடமையும் நீதியும் அவன் இதயத்தில் உந்தி அலை மோதுகிறது. உனக்காக நான் போர்க்களத்தில் மாண்டு மடிகிறேன். நான் மடிந்த பின்பேனும் சீதையை விட்டு நன்மையைத் தேடு என்று உருக்கமாக வேண்டு கின்ருன். வேண்டிக்கொண்டே புறப்பட்டு விட்டான். இந்தப் பரிதாபமான சம்பவம் இராவணன் மனத்தை அரட்டிவிட்டது. கைவிட்டுச் செல்லும் தம்பியை அனுதை யாகப் பார்த்துக் கலங்கி அழுகின்ற இராவணனுடைய கண்ணீர்த் துளிகள் சோகத்தை வித்திட்டுச் செல்கின்றன.

மூன்று பெரும் பாத்திரங்களில் இரண்டாவதும், மகோன்னதமானதுமான (கும்பகர்ண) பாத்திரம் இரா வணனை விட்டுப் பிரிந்துவிட்டது. அது இனித் திரும்பி வராது.

அடுத்தது இந்திரஜித்தின் நிகழ்ச்சி. அதற்கு முன் அதிகாயனைப் பற்றிய நிகழ்ச்சியை வைத்து இந்திரஜித்தின் வீரத்தை வேகப்படுத்துகிருன் கம்பன்.

---

நாட்டம்—கண். குருதி—ரத்தம். எவ்வழியோர்களும்—பலதிறப்பட்ட சகல மக்களும். வாயில்—நகர்ப்புற வாசல்

அரக்கர்களுடைய அன்றையத் தோல்வி இலங்கை முழுவதையுமே கலக்கிவிட்டது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் எதிரொலித்து வருகின்ற அழுகுரலோசை (இலங்கை) வீதிகளை எல்லாம் தடுமாற வைக்கின்றது.

இரக்கம், வீரம், சீற்றம், துன்பம் முதலிய பண்புகள் எல்லாம் குழம்பிக் கலவையாக இராவணனுடைய மனத்தை நச்சரிக்கின்றது. சண்ட மாருதத்தால் அலைமேல் அலை வீசும் கடல் போல அவன் மனம் தத்தளிக்கின்றது. அதிகாயன் இறந்து விட்டான். இராவணனே,

**மண்ணினை எடுக்க எண்ணும்**
**வானத்தை இடிக்க எண்ணும்**
**எண்ணிய உயிர்கள் எல்லாம்**
**ஒருகணத்[து]எற்ற எண்ணும்**
**பெண்ணெனும் பெயர எல்லாம்**
**பிளப்பனென்[று] எண்ணும் எண்ணின்**
**புண்ணிடை எரிபுக்[கு] என்ன**
**மானத்தால் புழுங்கி நையும்**

இலங்கை வீதி முழுவதும் ஆணும் பெண்ணும் அழுது கதறுகிறார்கள். தானமாலை புலம்பிக்கொண்டு ஓடி வருகிறாள். மலைச் சிகரங்களில் இடி மழை பொழிவது போல் மார்போடு மார்பாய் அவளுடைய வளையணிந்த கைகள் அடித்துப் புரளுகின்றன. செம்பராகம் போன்ற கூந்தல் சரிந்து கலைய இரத்தக் கண்ணீராக வடித்து ஓடி வருகின்றாள் தானமாலை.

"தேவாதி தேவர்களையும் வெற்றி கொண்டு திரும்பும் புத்திரனைப் பெற்றவள். அவளுக்கு என்ன குறை, புண்ணியவதி என்று வானுலக மாதர்களாலும் வாழ்த்தப் பெற்றேன். அப்படி எல்லாம் வரிசை பெற்ற நான் கையாலாகாத மனிதனுடைய கைப்பாணத்திற்கு என் மகனை இரையாக்கி வாழ்கின்றேன். அட, தெய்வமே."

இந்திரற்கும் தோலாத நன்மகனை ஈன்றுளென்[று]
அந்தரத்து வாழ்வோரும் ஏத்தும் அளியந்தேன்
மந்தரத்தோள் என்மகனை மாட்டா மனுசன்தன்
உந்துசிலைப் பகழிக்கு உண்ணக் கொடுத்தேனே

இனி ராவணனைப் பார்த்துச் சொல்லுகிறாள் :

*உம்பி உணர்வுடையான் சொன்ன உரைகேளாய்
நம்பி குலக்கிழவன் கூறும் நலமோராய்
கும்ப கருணனையும் கொல்வித் தென்கோமகனை
அம்புக் கிரையாக்கி ஆண்டாய் அரசையா

இவ்வளவு வார்த்தைகளுக்கும் இராவணன் சீறுதது மாத்திரம் அல்ல, பதில் கூடச் சொல்ல முடியவில்லை.

துக்கத்தில் மிதக்கும் இலங்கையில் பந்தி பந்தியாக நின்று அரக்கியர்கள் புலம்புவதை என்னவென்று விசாரிக்கின்றான் இந்திரஜித்து. அஞ்சி நடுநடுங்கும் பெண்களால் பதில் சொல்ல முடியவில்லை. தைரியமுள்ளவர்கள் நெஞ்சில் நினைத்ததை வாயில் சொல்வதற்குள் மறந்து விடுகிறார்கள்.

இந்திரஜித்து, தேரேறி வந்து தந்தையைக் கண்டான். கலக்கத்திற்கும் அழுகைக்கும் காரணம் என்னவென்று விசாரித்தான். கும்ப நிகும்பரோடு அதிகாயன் போரில் இறந்துவிட்டான் என்று இராவணன் பதிலுரைத்தான். மிச்சம் சொச்சம் இல்லாதபடி அத்தனைபேரும் போய் விட்டார்களா என்று ஏங்கிக் கொண்டே, கொன்றது யார் யார் என்று விசாரித்தான் இந்திரஜித்து.

அதிகாயனை இலக்குவன் கொன்றான் என்று சொல்லி முடிப்பதற்குள்ளாக, என் தம்பிமாரை எதிரிகள் கொல்ல

* உம்பி—உன் தம்பி விபீஷணன். நம்பிகுலக் கிழவன்—மாலியவான் என்னும் இராவணனுடைய பாட்டன்.

வில்லை. கொலை செய்ய நீ யல்லவா தள்ளிவிட்டாய் என்று பொருமினுன். அட்சய குமாரனைக் கொன்ற அநுமனைப் பிடித்து வந்து உன் கையில் கொடுத்தேன். அவனை அன்றே தீர்த்திருந்தால் கதையே வேறுவிதமாக முடிந் திருக்கும். நீ புத்திர பாக்கியம் இழந்து தவிக்கவேண்டி இருக்க வேறு என்ன நடக்கும் என்று சீறினுன்.

இலக்குமணனுடைய சிரசை அறுத்து அவன் ரத்தத் தைப் பூமாதேவிக்கு அபிஷேகம் பண்ணுவிட்டால் நான் இந்திரனை வென்றவனில்லை என்று சபத மெடுத்துக் கொண்டே போருக்குக் கிளம்பிவிட்டான்.

இலக்குமணனேடு போரிட்டுப் போரிட்டு நாக பாசத்தை வீசினுன்; பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தான். ஒன்றிலும் அவன் கைவரிசை செல்லவில்லை. சீதை போல ஒரு பொய்யுருவம் செய்து அதை அநுமன் முன்பு கொண்டுவந்து வெட்டினுன். பரதன் மேலும் சத்துருக் கனன் மேலும் படை எடுத்துச் சென்று அவர்களை வேரோடு அழிப்பேன் என்று உறுமினுன், மேகத்தின் மறைவிலே பதுங்கி யாகம் வளர்த்தான். கையும் க்ளவுமாக எதிரிகளிடம் அகப்பட்டு விழித்தான். இலக்குமணனுடைய அம்புமாரி உடலைக் கிழித்து ரத்தத்தைப் பெருக்க, தந்தை யிடம் வந்து சீதையை விட்டுவிடு, இல்லாவிட்டால் நீயும் நானும் தப்பிப் பிழைக்க முடியாது என்று மன்ருடினுன். ராவணனுக்கு இதைச் சகிக்க முடியவில்லை. கடைசித் துணையாக இருந்த மகன் கூடக் கைவிட்டு விட்டானே என்ற வருத்தம். இவ்வளவிற்குப் பின் விட்டுத் தொலைக்க முடியாத தன் செயலை வருத்தி அமுக்கக் கலங்கிவிட்டான் இராவணன். அவன் இதயத்தில் சோக உணர்ச்சி பொங்கிக் குமுறுகிறது. மகனைப் பார்த்துச் சொல்கிருன்: ஆங்காரத் தில் வருகின்ற சிரிப்பைப் பேசும்பொழுதும் இராவணனுல் அடக்க முடியவில்லை. "மனிதர்களுக்கு இவ்வளவு பதறி

ERSITY EXTENSION LIB

விட்டாயே, பைத்தியமே, பயப்படாதே, ஒரே வில்லில் இரண்டுபேரை முடித்து வருகின்றேன்.''

இயம்பலும் இலங்கை வேந்தன் எயிற்றிள நிலவும் எய்தப்
புயங்களும் குலுங்க நக்குப் போர்க்கினி ஒழிதி போலாம்
மயங்கினை மனுசன் தன்னை அஞ்சலை வருந்தல் ஐய
சயங்கொடு வருவன் இன்றே மனுசரைத்தனு ஒன்றாலே

"இதற்கு முன் போரில் மடிந்தவர்கள் எனக்கு வெற்றி தேடித் தந்துவிடுவார்கள் என்று நான் எண்ணி விடவில்லை. உண்டு உறங்கி வாழ்கிறார்களே அவர்களும் வாகைமாலை சூடி வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னையும் என் தோள் வலியையும் நம்பித்தான் எந்தக் காரியத்திலும் தலையிடுவது.''

முன்னையோர் இறந்தார் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றார் எல்லாம் வென்றனர் பெயர்வர் என்றும்
உன்னை நீ அவரை வென்று தருதி என்று உணர்ந்தும் அன்றால்
என்னையே நோக்கி யானிவ் நெடும்பகை தேடிக் கொண்டேன்

"மரணத்தை யாராலும் தள்ளிவிட முடியாது. என் அப்பனே! இறவாது நிற்பது புகழ் ஒன்றுதான்.''

வென்றிலன் என்ற போதும் வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளன் அன்றோ மற்றவ் இராமன் பேர் நிற்கும் ஆயின்
பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ பொதுமைத் (து) அன்றோ
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதி உண்டோ

மேலும் மேலும் உன்னிடத்தில் நான் என்னத்தைப் பேச, நீ சௌகர்யமாகப் படுத்துத் தூங்கு. யுத்தத்திற்கு இதோ நான் கிளம்பிவிட்டேன் என்று புறப்பட்டான். இந்திர ஜித்தால் தந்தையின் துயரத்தைத் தாங்க முடியவில்லை. அவன் காலடியில் விழுந்து "பொறுத்துக் கொள், பொறுத்துக்கொள். யுத்தத்திற்கு நானிருக்க நீ ஏன் போக வேண்டும். நான் போரில் மாண்ட பிறகேனும் நான் சொன்னபடி நடந்து தப்பிப் பிழை" என்று புறப்பட்டு விட்டான்.

இலக்குமணனோடு அதி உக்கிரமாகப் போரிட்டான். காட்டாத விஞ்சைகளை எல்லாம் காட்டிப் பார்த்தான். அந்தர மார்க்கமாகத் தலை சுழலக் கடைசியில் கவந்தக் கூத்தாடி மண்ணில் விழுந்து புரண்டது அவனது சடலம்.

இராவணனிடம் தூதுவர்கள் வந்து விஷயத்தைச் சொன்னார்கள். உடைவாளை விசிறி எறிந்து போர்க்களம் நோக்கி ஓடி வந்தான் இராவணன். பேயும் பிசாசும் அவனைப் பின் தொடர்ந்து ஊளையிட்டன. காகங்களும் கழுகுகளும் கரைந்து கரைந்து அவனை வட்டமிட்டன. விண்ணும் மண்ணும் அலுத்துச் சலிக்க அவன் கூப்பாடு போட்டான். 'ஓ'வென்று கதறினான்.

**துஞ்சி னைய்கொல் துணைபிரிந் தேன்எனும்**
**வஞ்ச மோஎனும் வாரலை யோஎனும்**
**நெஞ்சு நோவ நெடுந்தனி ஆகினேன்**
**அஞ்சினேன் என்று அரற்றுமங் கோர்தலை**

பத்துத் தலைகளும் ஏககாலத்தில் பத்து விதமாகப் புலம்பிக் கதற அவன் போர்க்கள முழுவதையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டான். பிணத்தோடு பிணமாக மகன் மீது விழுந்து துயரத்தைக் கொட்டினான்.

---

துஞ்சினைய்கொல்—அப்பனே நீ இறந்து விட்டாயா. வாரலையோ—வரமாட்டாயா. அரற்றும்—இப்படியாக அழுது புலம்பினான்.

"உன் மனைவிமார்கள் வந்து என் கணவன் எங்கே, எங்கே என்று விசாரித்தால் அவர்களோடு நான் சேர்ந்து அழவா? அடமகனே, இதற்காகவா எமனையும் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டினேன்.

கந்தர்ப்பர் இயக்கர் சித்தர் அரக்கர்தம் கன்னிமார்கள்
சிந்தொக்கும் சொல்லினுருன் தேவியர் திருவின் நல்லார்
வந்துற்றெம் கணவன் தன்னைக் காட்டென்று மறுகி வீழ்ந்தால்
அந்தொக்க அரற்ற வோநான் கூற்றையும் ஆடல் கண்டேன்

தேவர்களை எல்லாம் கட்டி உருட்டி எண்ணிய காரியமெல்லாம் சித்தியாகக் கண்டு மகிழ்ந்தேன். கண்ணே, ஒருத்தி காரணமாக எனக்குச் செய்யவேண்டிய கடமைகளை உனக்கு நான் செய்யவா?

சினத்தொடும் கொற்றம் முற்றி இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை ஒருத்தி நீரால்
எனக்குநீ செய்யத் தக்க கடன் எலாம் ஏங்கி ஏங்கி
உனக்கு நான் செய்வ தானேன் என்னின் யார் உலகத்து உள்ளார்

நாதியற்ற சீவன்போல இராவணன் கதறிக் கரையும் பொழுது மண்டோதரியின் அழுகுரலும் கேட்கிறது. சீதை காரணமாக வல்லவா என் சிங்கக் குட்டி இப்படி அனியாயமாக மடிந்துவிட்டான் என்று அவள் கதறினுள். அப்படியே கைவாளைச் சுழற்றிக்கொண்டு சீதையை நோக்கி ஓடி வருகின்றுன். மகோதரன் வந்து தடுக்கின்றுன். "காலகேயர்களுடைய சிரசுகளை உருட்டி திசையானைகளின் கொம்புகளை அறுத்தெறிந்த உன் வீரவாள் ஒரு பெண்ணுடலைத் தீண்டும்பொழுது நாணத்தால் பின்வாங்காதா?"

தெள்ளரும் கால கேயர் சிரத்தொடும் திசைக்கை யானை
வெள்ளிய மருப்புச் சிந்த வீசிய விசயத் தோள்வாள்

வள்ளிய மருங்குல் செவ்வாய் மாதர்மேல் வைத்தபோது
கொள்ளுமோ ஆவி தானே நாணத்தால் குறைவதல்லால்

இராவணன் அப்படியே வாளைத் தரையில் கிடத்திவிட்டான். என் மகனைக் கொன்றவர்களுடைய சிரசுகளை அறுத் தெறிந்து வராவிட்டால் இலங்கை வருவது கிடையாது என்று போருக்குப் புறப்பட்டுவிட்டான்.

என்னலும் எடுத்த கூர்வாள் இருநிலத்[து] இட்டு மீண்டு
மன்னவன் மைந்தன் தன்னை மாற்றலார் வலியால் கொண்ட
சின்னமும் அவர்கள் தங்கள் சிரமும்கொண்டன்றிச் சேர்கேன்
துன்னரும் தயிலத் தோணி வளர்த்துமின் என்னச் சொன்னான்

இந்திரஜித் தன் மரணத்தோடு இராவணனுடைய வாழ்க்கை அசந்துவிட்டது. உள்ளீடற்றுப் போன அவனுடைய வாழ்க்கை சாரமற்ற வெறும் சண்டு. முதல் நாள் போரோடு யுத்தத்தை மறந்துவிட்ட அவனுடைய கடைசிப் போரைக் கம்பன் சாவதானமாகவும் மேதா விலாசத்தோடும் முடிக்கிறான். போர்க்களத்தில் அவமானப்பட்டு வந்த காரணத்தால் இதுவரை சுற்றத்தார்களையும் நண்பர்களையும் மாறி மாறிப் போருக்கு ஏவிக்கொண்டிருந்தான். கடைசிக் கட்டத்திலும் அப்படிக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பக்குவமாக உபயோகித்துப் பார்க்கிறான். நாணிக் குழைந்து போன அவனது மானத்திற்கு இது ஒரு உருவம் கொடுப்பதோடு இராவணனைப் பூரணப்படுத்தியும் காட்டுகிறது. நடந்து திரியும் இமாசலம் போல் ஒவ்வொரு காரியத்திலும் உணர்ச்சிகொண்டு நிமிர்ந்து நின்ற இராவணன் இப்பொழுது சாதாரணமானவர்களிடத்திலும் அடக்க ஒடுக்கத் தோடு நடந்துகொள்ளுகிறான். கம்பீரம் உள்ளே குமுறினாலும் அவனது குரலின் ஒவ்வொரு சுரமும் தாதிழந்து தான் பேசுகிறது. உதாரணமாக, மூலபலச் சேனாதிபதிகள்

இராவணனுடைய பாதங்களில் பூப்போட்டு வணங்கி நிற்கிறார்கள். அவர்களைப் பார்த்து இராவணன் க்ஷேமம் விசாரிக்கிறான்.

அனையர் யாவரும் அருகு சென்று அடிமுறை வணங்கி
வினையம் மேவினர் இனிதின் அங்கிருந்தேன் வேலை
நினையும் நல்வரவாகநும் வரவென நிரம்பி
மனையும் மக்களும் வலியரோ என்றனன்மறவோன்*

இந்திரஜித்தின் மரணத்தில் இராவணன் எவ்வளவு சோக பாத்திரமாக மாறிவிட்டான் என்பதை இந்தப் பாடல் அளந்து காட்டுகிறது. படைத் தலைவர்களை வரவழைத்துக் கம்பீரமாக ஆணையிட்டு முடுக்கும் இராவணன்தான் இப்பொழுது அவர்களை உட்காரவைத்துக் குடும்பத்தின் க்ஷேம லாபங்களை விசாரிக்கின்றான்.

இராவணன் யுத்த சன்னத்தனாகிப் புறப்பட்டான். பிரபஞ்சம் முழுவதும் தவிடு பொடியாகி உதிர்ந்தாலும் அம்புகள் அழிந்து குறையாத தூணியை எடுத்துக் கட்டினான். "தேரைக் கொண்டுவா" என்று கட்டளை இட்டான்; அதுவும் வந்து சேர்ந்தது. சுவர்க்க மத்திய பாதலங்களை எடுத்து அடுக்கி வைத்தாலும் தன் கூம்பு மரத்தில் சொருகி வைத்திருக்கும் குஞ்சம் என்று எண்ணி ஒரு சிமிட்டாக் கொடுத்துச் செல்லக் கூடியது அந்தத் தேர். இராவணன் நினைத்த நினைத்த மண்டலங்களில் எல்லாம் சென்று குதிக்கக் கூடியது அந்தத் தேர்.

அகழி வேலையைக் காலத்தை அளக்கர்நுண் மணலை
நிகழும் மீன்களை விஞ்சையை நினைப்பதென் நின்ற
இகழ்வில் பூதங்கள் இறப்பினும் இறுதிசெல்லாத
புகழெனச்சரம் தொலைவிலாத் தூணியும் பூட்டி

---

*வினையம் மேவினர் - இராவணனுடைய குறிப்பை எதிர்பார்த்து. நிரம்பி - வாய் நிறையச் சொல்லி. வலியரோ - சௌக்கியம்தானே.

வருக தேரென வந்தது வையமும் வானும்
உரக தேயமும் ஒருங்குடன் இவரினும் உச்சிச்
சொருகு பூவன்ன சுமையது துரகம் இன்றெனினும்
நிருதர் கோமகன் நினைத்துழிச் செல்வதோர் இமைப்பின்

மந்திர ஜபங்களை முடித்துவிட்டு, தான தருமங்களையும் செய்துவிட்டு, வந்த தேரில் ஏறி நின்றான். ரிஷி கணங்களும் தேவ குழாமும் அஞ்சிப் பதுங்கியது ஆச்சர்யமில்லை. புலன்களையும் மனசையும் தம் வசப்படுத்தி இச்சைகளில் அவிந்து போன முனிவர்கள்கூட அவன் போர்க்கோலக் காட்சியில் நடுங்கிவிட்டார்கள்.

அவனுடைய தேர் போர்க்களம் நோக்கிப் பறந்தோடி வந்தது. "இன்று சீதை தன் வயிற்றில் அடித்து அடித்துப் புரளவேண்டும். அல்லது மண்டோதரி அப்படி அழுது மடியவேண்டும். இரண்டில் ஒன்று இன்று நடக்கும். ஆம், இன்றே நடக்கும்.'' அவன் உள்ளுக்குள்ளேயே குமுறினான்.

அவன் தேர், போர் அரங்கத்தின் நடு நாயகமாக வந்து நின்றது. சேனாவியூகங்கள் சாரை சாரையாக வழிவிட்டு விலகின.

"யுத்தம் சமீபித்து விட்டது. முடிவும் அப்படியே'' என்று எண்ணிய மாத்திரத்தில் இராவணனுக்குப் புன்முறுவல் பூத்தது. அந்த ஆனந்த உணர்ச்சியில் தனுசை லேசாக வளைத்தான். அண்டங்கள் குலுங்கின. அதல பாதலம் சுழன்றது. அதுமட்டுமா; அந்த வில்லோசையின் முழக்கத்தில் தெய்வலோகப் பெண்டுகளும் ராட்சஸ மங்கைகளும் தாலியைத் தடவித் தடவிப் பார்த்தார்கள்.

நணித்து வெஞ்சமர் என்பதோர் உவகையின் நலத்தால்
திணித்தடங்கிரி வெடித்துகச் சிலையை நாண் தெரித்தான்
மணிக் கொடுங்குழை வானவர் தானவர் மகளிர்
துணுக்க முற்றனர் மங்கல நாண்களைத் தொட்டார்

ராமனை எதிர்த்து இராவணன் போர் புரிய வரும் பொழுது மகோதரன் வந்து தடுக்கிறான். "ராமனை நான் தொலைத்துவிடுகிறேன். நீ வானரச் சேனையை முடுக்கித் தொலை" என்று கெஞ்சுகிறான். இராவணனும் சம்மதிக் கின்றான்.

பாய்ந்து வருகின்ற மகோதரன், அம்பு மழையை ராமன் மீதும் அவன் படைக்கலங்கள்மீதும் விதைத்தான். அவன் ஆரவாரத்தில் விண்ணும் மண்ணும் கிடுகிடுத்தது. இவை களைக் கண்ட ராமன் புன்முறுவல் பூத்தான். சில அம்பு களை அவன்மீது தொடுத் தேவினான். வார்த்தை வேறு செயல்வேறாக மகோதரனுடைய தலை மண்ணில் விழுந்து உருண்டது.

அசனிஏ[று] இருந்த கொற்றக் கொடியின் மேல்
அரவத் தேர் மேல்
குசையுறு பாகன் தன் மேல் கொற்றவன்
குவவுத் தோள் மேல்
விசையுறு பகழி மாரி வித்தினன்
விண்ணி னேடும்
திசைகளும் கிழிய ஆர்த்தான் தீர்த்தனும்
முறுவல் செய்தான்

வில்லொன்றால் கவசம் ஒன்றால் விறலுடைக்
கரம்ஓர் ஒன்றால்
கல்லொன்று தோளும் ஒன்றால்
கழுத்தொன்றால் கடிதின் வாங்கி
செல்லொன்று கணையால் ஐயன்
சிந்தினன் செப்பி வந்த
சொல்லொன்றாய்ச் செய்கை ஒன்றாய்த்
துணிந்தனன் அரக்கன் துஞ்சி

இதைக்கண்ட இராவணனுடைய ரதம் ராமனை நாடி நெருங்கியது. ராமனுக்கும் இராவணனுக்கும் கடும் போர்

நடந்தது. போராடிப் போராடி இரண்டு பேரும் அலுத்துப் போனார்கள். இராவணன் கையிலிருந்த ஆயுதங்களை யெல்லாம் உபயோகித்து இழந்து விட்டான். தன்னந்தனியாக நின்ற ராவணன் மீது ராமனுடைய கோதண்டம் மழை போல் அம்பை வர்ஷித்தது. இராவணனுடைய பொன் மேனி சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டுக் கீழே விழுந்தது.

மஞ்ச ரங்கிய மார்பினும் தோளினும்
நஞ்ச ரங்கிய நாவினும் கண்ணினும்
வஞ்சன் மேனியை வார்கணை அட்டிய
பஞ்ச ரம்மென லாம்வகை பண்ணினன்

பின்னும் ஒரு பாணத்தை ராமன் பிரயோகித்தான். அது இராவணனுடைய தவ வலிமைகளை எல்லாம் தின்று அவனுடைய உயிரையும் குடித்து ஓடிவிட்டது.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடு உலகனைத்தும் செருக்கடைந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர் பருகிப் புறம் போயிற்றி
ராகவன் தன் புனிதவாளி

இராவணன் இறந்தவுடன் அவன் மனைவி மண்டோதரி மேலே விழுந்து புலம்பித் துடிக்கிறாள். "கைலயங்கிரியைத் தூக்கி எறிந்த திருமேனியா இப்படி லட்சோப லட்சம் கண்களாகத் துளைக்கப்பட்டுப் புழுதியில் விழுந்து புரள வேண்டும்? சீதையைத் தேடியா அல்லது இராவணனுடைய ஜீவனைத் தேடியா இப்படித் துளைத்திருக்கிறது இந்த அம்பு?"

வெள்ளெருக்கம் சடைமுடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த ஆறே
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையுள் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி

இராவணன், ஐராவதத்தின் சப்பையை ஒடித்து அதன் கொம்புகளைப் பொடிப் பொடியாக உதிர்த்தவன். ஆதி சேடன் தலையைப் பிதுக்கி ரத்தினங்களைக் கக்க வைத்தவன். எமனையும் வாயுவையும் ஒரே சிண்டில் முடிந்து குரங்காட்டம் ஆட்டியவன், அஷ்ட கஜங்களின் கொம்பு களை அறுத்தெறிந்தவன். சிவபெருமானுடைய ரிஷப வாகனத்தை முடுக்கித் துரத்திக் கருடனுடைய ஒரு சிறகை ஒடித்துக் கீழே போட்டவன்.

கைலயங்கிரி மலையைச் செந்தூக்காகத் தூக்கி ஒரு குலுக்குக் குலுக்கினான். குபேர பட்டணத்தைக் கொள்ளை யடித்துப் பொன்னையும் மணியையும் கொண்டுவந்து அம் பாரம் அம்பாரமாகக் குவித்தான். கைவலிமை உள்ளவர் களை எல்லாம் அவற்றை அள்ளிக்கொண்டு போகக் கட்டளை இட்டான். ஆன்று அவிந்துபோன மகரிஷிகளையும் துள்ளித் திரியும் சிங்கக் குட்டிகளையும் விலங்கிட்டுச் சிறையி லடைத்தான். போக பாக்கியங்களில் மூங்கிச் சுகித்த பூலோக இந்திரர்களையும் காட்டானைகளையும் ஒரு தாம்பிலே கட்டி இறுக்கி மண் தரையில் புரட்டி எடுத்தான். தேவேந்திர பதியையும் அளகாபுரியையும் மாறி மாறித் தீ வைத்துப் பொசுக்கினாலும் அவன் நெஞ்சிலே உள்ள சினத் தீ மாத்திரம் ஆறுது, அவியாது.

அவன் சுழித்து நோக்கும்பொழுது தேவாதிதேவர் களுக்கும் குலை நடுங்கும். அமைதி நிறைந்த வேதரிஷி களின் வதனங்களில் கண்ணீர் வடியும். அவன் விரும்பி நோக்கும்பொழுது விண்ணும் மண்ணும் புன்முறுவல் பூத்துக் குலுங்கும். தேவ கன்னிகைகளின் உடலெல்லாம் புளகாங்கிதத்தால் கிளு கிளுக்கும். நீலமணி விளக்குப் போன்ற அந்தச் சின்னஞ் சிறு நயனங்கள் ஆனந்தத்தால் துள்ளிப் புரளும். முத்தாரம் தாங்கிய ராட்சஸப் பெண்டு களின் மார்புகள் பெருமிதத்தால் விம்மித் துடிக்கும். கரும்பு வில்லை எறிந்துவிட்டு வந்த மன்மதன் போலவும், மானுட அங்கங்களை ஏந்தி வந்த மலை போலவும் தேவபுருஷன் போலவும் அவன் காட்சி அளிப்பான். அறிவினுடைய எல்லையையே ஒரு முழம் உயர்த்திவிட்ட தம்பியை (விபீஷணனை) அநியாயமாகத் துரத்தினன். பாசத்தையும் பரிவையும் சமுத்திரம்போலத் தேங்கவைத்து அதைக் கண்ணீராகக் கொட்டிய தம்பியை (கும்பகர்ணனை) "யுத்தத் திற்கு அஞ்சி ஒடுங்குகிருயே மானங் கெட்டவனே" என்று வெருட்டினன்.

சாவதைத் தவிர வேறு வழி இல்லை என்று சொல்லிப் போன அதே தம்பியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் சிந்தினன்.

தானமாலை புழுவாய்த் துடித்துப் புரண்டாள். "மனிதன் கையில் மக்களை இழந்துவிட்ட உனக்கு அரசியல் வேறு கேடா?" என்று இடித்து இடித்து அழுது புரண்டாள். அத்தனைக்கும் கலங்காத குன்றுபோலத் தலைகவிழ்ந்து கிடந்தான். ஆங்காரமும் சோகமும் அவன் நெஞ்சை அடைத்து அழுத்தின.

பலவகைப்பட்ட மாயப் போர்களை எல்லாம் செய்து வந்த மகன், அலுத்து வந்த ஒரே ஒரு மகன், "போனது போகட்டும், இப்பொழுதேனும் சீதையை விட்டு விடு"

என்று கெஞ்சினுன். "உடம்பைக் கீழே போட்டாலும் போடுவேனே தவிரச் சீதையை விடமாட்டேன். உயிரும் உடலும் மானத்தைக் காட்டிலும் உயர்ந்ததல்ல, நீ போய் உறங்கடா உறங்கு, நானல்லவா போர் செய்து வெல்ல வேண்டும்" என்று சோக உணர்ச்சியில் பொங்கி ஆரவாரித்தான். நாசகாலத்தில் எதுவுமே செல்லுபடியாகாது என்ற முடிவுக்கு வந்த இந்திரஜித்து மரணத்தைத் தவிர வேறு வழி இல்லே என்று போர்க்களம் வந்து முடிந்தான். இராவணனுக்கும் அந்த வம்சத்திற்கும் அந்தரங்க ஜீவனுக விளங்கிவந்த இந்திரஜித்து போகும்பொழுது தந்தையை மாறி மாறிப் பார்த்துக் கண்ணீர் சிந்தினுன். இராவணன் அதைக் கண்டு கலங்கினுன்.

மக்களும் சுற்றமும் தன்னேப் பிரிந்து பிரிந்து மடிவது இராவணனுக்கு வருத்தத்தைத் தந்தது. சோகத்தைப் பெருக்கியது. சீதையை விட்டுவிட்டால் ஒன்றுமே அழியாது என்பது அவனுக்கும் தெரியும். ஆனுல் அது ஒன்றைத்தான் அவனுல் செய்ய முடியவில்லே. இப்படி லகுவாகக் கழித்து விடக் கூடிய ஒன்றைக் கழித்து விடாமல் இழக்க வேண்டாத பெருமைகளே எல்லாம் இழந்து கலங்காமல் கலங்குவதுதான் சோக உணர்ச்சி. அந்தச் சோக உணர்ச்சிக்கு உதாரண புருஷன் போல இராவணன் விளங்குகிறுன்.

யுத்த காண்டத்தில் வீர புருஷனுகவும் சோக பாத்திரமாகவும் தோன்றி நிற்கின்ற இராவணன் இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் அசையாது நிற்கும் மகத்துவத்தை அவனேப்பற்றிய ஆரம்ப (மூக்கறுபட்ட சூர்ப்பனகை இராவணனேச் சந்தித்து நடந்ததைக் கூறும்) நாடகத்தின் மூலம் பார்க்கவேண்டும்.

இராவணன் சபை கூட்டி வீற்றிருக்கிறுன். வீரர்களும் மன்னர்களும் தலே கவிழ்ந்து நிற்கிருர்கள். தேவர்களும் முனிவர்களும் நாணிக் குழைந்து தோன்றுகிருர்கள். இந்திர

னுள்ளிட்ட தேவதாதாக்கள் எல்லாம் அஞ்சி நடுங்கிய பெண்களைப் போல அசந்து திரிகிறார்கள். இரண்டொரு கன்னிப்பெண்கள் மாத்திரம் பணிப் பெண்களாக அங்கும் இங்கும் உலவுகிறார்கள். பிரபஞ்சம் முழுவதுமே சப்த நாடியும் ஒடுங்கிக் கிடக்கிறது.

இந்த வேளையில் அறுபட்ட மூக்கோடும் நெஞ்சோடும் அவனுடைய காலடியில் வந்து புரளுகிறாள் சூர்ப்பனகை. தங்கையின் அலங்கோலத்தைக் கண்ணுற்ற இராவணனுக்கு மீசைகள் துடிக்கின்றன. வாயிலும் நாசியிலும் சீறி வருகின்ற உயிர்ப்பு சுற்றிலும் அனலெழுப்புகின்றது. இருபது உதடுகளையும் கடித்துக் கொண்டே, பற்களையும் நறநறவென்று மென்று கொண்டே, இடி முழங்குவது போல,

> கடித்தகதிர் வாளெயிறு மின்கலுள மேகத்(து)
> இடித்தஉரும் ஒத்துரறி யாவர் செயல் என்றான்

சூர்ப்பனகையோ,

> மானுடர்த டிந்தனர் வாளுருவி என்றாள்

மனிதர்கள்தான் என்ற வார்த்தை செவியை வந்து தொடுவதற்குள்ளாக அவன் ஆங்காரத்தில் சிரித்தான். அது எட்டுத் திசையும் எதிரொலித்தது. ஜ்வலிக்கும் கண்கள் தீப்பொறி சிந்தின. சும்மாயிருக்கும் பொழுதா இந்தக் காரியம் செய்தார்கள்? விபரமாகச் சொல்'' என்று கர்ஜித்தான்.

> பொய்தவிர் பயத்தைஒழி புக்கபுகல் என்றான்

" அரக்கர்களை அழிக்க வேண்டுமென்றே அவர்கள் வந்திருக்கிறார்கள். வேறு என்னத்தைச் சொல்ல ?'' என்று முடித்தாள் சூர்ப்பனகை.

> வேறுமெனும் நுங்கள்குலம் வேரொடும் அடங்கக்
> கோறுமென முந்தை ஒரு சூளுறவு கொண்டார்

இந்த வார்த்தைகளைக் கேட்ட, இராவணனுக்கு உள்ளங் கொதித்தது. அவமானம் அவன் பெருமைகளை இடித்துச் சரித்தது. "இவ்வளவு பழியை உண்டாக்கியவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். பழியேற்றுக் கொண்ட நானோ உயிரை வைத்துக் கொண்டிருக்கின்றேன்? அதுமாத் திரமா?"

வாளுமுள ஆழிவிடம் உண்டவன் வழங்கும்
நாளுமுள தோளுமுள நானுமுளன் அன்றோ

மேலும் சொல்லுகிறான், மனத்தைப் பார்த்துச் சொல்லு கிறான். "புதிதாகப் பழி வந்து விட்டதே என்று கலங்காதே மனமே, எவ்வளவு பழி வந்தாலும்."

புத்துற(வு) உறப்பழி புகுந்ததென நாணித்
தத்துறுவ(து) என்னைமன னேதளரல் அம்மா
எத்துயர் உனக்குள(து) இனிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள்பல அன்றே

ஏகாதிபத்திய வெறியும் அடங்காத ஆணவமும் இராவணனு டைய வார்த்தைகளில் முழங்குகின்றன. அவன் சொல்லிலே உள்ள கொதிப்பு அவனை மாத்திரம் அல்ல, அவனைச் சுற்றி உள்ளவர்களையும் இலங்கை முழுவதையும் தகிக்கிறது.

"குற்ற மில்லாமலா அவர்கள் இந்த அவமானம் பண்ணினார்கள்?" என்று மேலும் பொருமுகிறான் இரா வணன். காரணம் இல்லாமல் இல்லை. சீதை என்று ஒரு பெண் அவர்களோடு இருக்கிறாள். அவள் பேரழகில் லயித்துப் போன நான், அவளை உன் வசப்படுத்தலாமே என்று எடுத்துவர முயற்சித்தேன். அந்த வேளையில் இலக்குமணன் வாளை உருவி என்னை மானபங்கப்படுத்தி விட்டான்." என்று சூர்ப்பனகை விபரமாகச் சொல்லு

கிருள். சீதையின் தெய்வீக அழகை விஸ்தாரமாக எடுத்துப் பேசுகிருள். தங்கையின் வார்த்தையில் மதிபிழந்துபோன இராவணன்,

**கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்ற**
**உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான்**
**கொற்றம்**
**அரனையும் கொண்ட காமன் அம்பினுல் முன்னைப் பெற்ற**
**வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான்**

போர்க்கள நிகழ்ச்சியில் சமுத்திரம் போலத் தத்தளிக்கின்ற இராவணனுடைய சோக வாழ்க்கைக்குச் சூர்ப்பனகை சந்திக்கின்ற ஆரம்பமும் மண்டோதரி வந்து கதறுகின்ற முடிவும் சிரஞ்சீவித்துவம் அளிக்கின்றன.

இராவணன் கங்கு கரையற்ற அழகோடு கூடிய ஒரு சோக சித்திரம். வீரமும் மானமும் அலைமேல் அலை வீசிப் பொங்குகிற சமுத்திரம் போன்றது. அவனுடைய வாழ்க்கை ஆயிரமாயிரம் நரம்புகளைக் கொண்ட ஒரு பேரியாழ், சீதையின் மென் தளிர்க் கரம் படுந்தோறும் படுந்தோறும் அது நவ நவமான நாதசுரங்களை எழுப்பும். ராமாயணத்திற்கே மூல புருஷனுக விளங்குகிற இராவணன் சீதை இல்லாவிட்டால் இல்லை.

# இந்திரஜித்து

கவிச் சக்கரவர்த்தி கம்பன் தன் இராமாயண காவியத்தில் நாடகப் பண்புடன் சித்திரித்துள்ள கட்டங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது, இராவண குமாரன் இந்திரஜித்து வந்து செல்லுகின்ற கட்டமே. இந்த நாடகம், தன்னிகரற்ற ஒரு வீரனை மையப் பொருளாக வைத்து பாசம், வீரம், வெற்றி, தோல்வி முதலிய சகல பண்புகளையும் சுற்றிச் சூழ ஊடாட விடுகின்ற ஒரு பிரபஞ்சம். இதில் வருகின்ற பாத்திரங்கள் எல்லாம் பழையனவாக இருந்தாலும், ஒவ்வொரு பாத்திரமும் கேந்திரமான கெடுபிடியான கட்டங்களில் உலாவுகிறது. வாழ்வா, மரணமா என்கின்ற வாள் முனைப் போராட்டத்தில் ஒவ்வொரு ஜீவனும் அலை மோதுகின்றது. கம்பனுடைய செல்வப் படைப்புபோல இந்த நாடகம் விளங்குகிறது. கண்ணும் கருத்துமாக அவனால் வனையப்பட்ட நாடகம் இது.

தர்மத்தோடு தர்மமும், அதர்மத்தோடு அதர்மமும் இங்கே மோதி முரணுகின்றன. தர்மமும் அதர்மமும் அந்தப் பெரு வீரனாகிய இந்திரஜித்தின் பேராற்றலுக்கு ஈடாக முடியாமல் சலித்து விடுகின்றன. இங்கே நிகழ்ச்சிகள் மலைமலையாகக் குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஆரம்பம், நடுவு, முடிவு என்ற பண்புகளால் தொடரப்பட்டுப் பூரணப்படுகின்றது.

இந்திரஜித்து நிகரில்லாத பெருவீரன். இராவண வமிசத்தின் கொழுகொம்பு. இம்பு இடை இல்லாமல்

கீழும் மேலும் மறையும்படியாக அவன் சரக்கூடம் போடு வான். அவன் சங்கநாதம் செய்து ஆர்ப்பரித்தால் வானர வெள்ளம் சிந்திச் சிதறும்; இராமனும் இலக்குமணனும் திகிலடைவார்கள். அவன் அணிவகுப்பதும் தேரேறி வருவதும் மோகனமானவை. தேரிலிருந்து கீழே குதித்து கெக்கலித்தாலும், அந்தரத்தில் தாவித் தோள்புடை தட்டி னும் பயங்கரமாக இருக்கும். இந்த நாடகத்தின் ஒவ்வொரு அடிக்கும் விண்ணும் மண்ணும் மிதிகற்கள். அசுரத்தனமாகத் தொடரப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஜீவகளை நிரம்பப்பெற்றது. ஒன்றை ஒன்று சங்கிலித் தொடர்போலப் பின்னி பிணைந்த ஒரு பெரு நாடகம் இது. இந்திரஜித்தினுடைய வாழ்க்கை அவனுக்குச் சோகத்தைத் தேடி கொடுக்கிறது. அவனுக்கு மாத்திரமா, அரக்க வமிசம் முழுவதுமே இந்திரஜித்தின் வாழ்க்கை சோக சித்திரமாகப் பரிணமிக்கின்றது. இந்திரஜித்தின் வாழ்க்கை யோடு இராவணனுடைய வாழ்க்கையும் அடங்கி விடுகிறது. இந்திரஜித்தின் மரணத்தில் இராவணன் பூரணமான சோக பாத்திரமாக மாறிவிடுகிருன். தனக்கும் தன் வமிசத் திற்கும் தீராத சோகத்தை அளிக்கின்ற இந்திரஜித்தின் வீர வாழ்க்கை விரிவு நிரம்பியது. அவனது படைக்கலப் பெருமைகளும், மாயப்போர் வலிமைகளும் அரக்க வமிசத்தின் உயிர்நாடி.

அவனது போராட்டங்களும், வெற்றி தோல்விகளும் விரிவு நிரம்பியவை.

அதிகாயன் இறந்ததைக் கேள்விப்பட்டவுடன், தேரேறிப் புறப்படுகின்ருன் இந்திரஜித்து. “என் தம்பியைக் கொன் றவனைக் கொல்லாமல் திரும்பமாட்டேன்” என்று சபத மிட்டுச் செல்லுகின்ருன்.

வானர வீரர்களைச் சிதைத்து இலக்குமணனுடன் பெரும் போர் நடத்துகிருன். இலக்குமணனையும் அனு

மனுள்ளிட்ட வானர வீரர்கள் எல்லோரையும் நாக பாசத்தால் கட்டித் தரையில் உருட்டி விடுகிருன்.

பிறகு, வெற்றிக் களிப்போடு வீடுவந்து சேருகிருன். இருளில் ஒளிபடர விட்டு, கருடன் வந்து அவர்களைக் காப்பாற்றி விடுகிறது. வானர முகாமிலிருந்து பெருத்த ஆரவாரம் கிளம்புகிறது. இராமனை எண்ணிக் கொண்டிருக்கும் சீதையும், சீதையை எண்ணிக் கொண்டிருக்கும் இராவணனையும் தவிர மற்ற எல்லோரும் இலங்கையில் அயர்ந்து தூங்குகிருர்கள். இடிமுழக்கம்போல வானரக் கும்மாளி டமாரமடிக்கிறது. அதைத் தாங்க முடியாமல் இந்திரஜித்தைத் தேடி வருகின்ருன் இராவணன்.

இருளின் செம்பாக வேளை. பணிப் பெண்கள் வழி விட்டு ஒதுங்கி நிற்கிருர்கள். தந்தையைக் கண்டு எழுந்து வணங்கவும் முடியாமல் களைப்படைந்து கிடக்கிருன் இந்திரஜித்து. தந்தைக்கும் மகனுக்கும் இடையே சோக மயமான சம்பாஷணை நடக்கிறது.

தூதுவர்கள் வந்து விஷயத்தைச் சொல்லுகிருர்கள். இராவணன் பேய்ச் சிரிப்புச் சிரிக்கிருன். "திருமாலும், தானும் என் அம்புகளுக்குப் புறமுதுகிட்டு ஓடியதை அதற்குள்ளாகவா மறந்து விட்டான் இந்தக் கருடன்? என் மகன் போட்ட பாச வலையை அறுத்தெறியவுமா அவனுக்குத் தெம்பு வந்து விட்டது?" என்று கொக்கரிக்கிருன்.

"இதனுல் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. மகனே, அஞ்சாதே, அவர்களை உன்னுடைய அம்புகள் தான் கொன்ருெழிக்க வேண்டும். இன்று அடைந்த தோல்வியால் அவர்கள் நாளை உன்முன் வில் பிடிக்கவே கூசுவார்கள்" என்று இராவணன் சொல்லுகிருன்.

"ஈண்டது கிடக்க; மேல்மேல்
இயைந்தவா(று) இசைய எஞ்சி

மிண்டவர் தம்மைக் கொல்லும்
வேட்கையே வேட்கும் அன்றே.
ஆண்டகை நீயே ! இன்னும்
ஆற்றுதி அரும்போர் !" எனருன்.
"காண்டலும் நாணும்" என்ருன்
மைந்தனும் கருத்தைச் சொன்னுன்.

"என்னுடைய போர்க் களைப்பை இன்று ஆற்றிக் கொள்ளுகிறேன். பிரம்மாத்திரப் பிரயோகத்தால் நாளை வெற்றியுடன் திரும்பி விடுகிறேன். உன் துயரங்கள் எல்லாம் நாளையோடு கழிந்துவிடும்" என்ருன் இந்திரஜித்து.

"சரி" என்று சொல்லி இராவணன் சென்று விட்டான்.

"இன்ருெரு பொழுது தாழ்ந்தென்
இகல் பெரும் சிரமம் நீங்கி
சென்ருெரு கணத்தின் நாளை
நான் முகன் படைத்த தெய்வ
வென்றி வெம் படையினுல் உன்
மனத் துயர் மீட்பேன்" என்ருன்;
நன்றென அரக்கன் போய்த்தன்
நளிமலர்க் கோயில் புக்கான்.

இந்த இரண்டு பாடல்களும் இந்தப் படலத்தின் அதிசயமான முத்தாய்ப்புக்கள். போர் நிகழ்ச்சிகளும், வெற்றி தோல்விகளும் ஒவ்வொரு இடத்திலும் நடப்பது போலச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்தப் படலத்தில் வந்து போகின்ற கருடனும் அபாரமான பாத்திர சிருஷ்டி.

இந்திரஜித்து களைப்பாறும் வரைக்கும் சேனைத் தலைவர்களும், மகரக்கண்ணனும் தொடர்ந்து போர் செய்கிருர்கள். படைத் தலைவர் வதைப் படலம், மகரக்கண்ணன் வதைப் படலம் ஆகிய இரண்டும் இந்திரஜித்து நாடகத்தின் விஸ்தாரமான இடைநிலைக் காட்சிகள்.

அடுத்தது பிரம்மாத்திரப் படலம். இந்திரஜித்து, தன் தந்தையை வந்து சந்திப்பது, போர்க் கோலம் பூண்டு புறப்படுவது, அணிவகுப்பு—ஒவ்வொன்றும் அவசர அவசர மாக நடந்தேறுகிறது. வேகத்தின் உச்ச நிலைகளைச் சொற்களும் சந்தங்களும் அளந்து நிறுத்துகின்றன. போரின் அதிசயமான நிலைமைகளை எல்லாம் கவிதைகள் அகண்டாகாரமாகச் சித்தரிக்கின்றன. மாய உருக்கொண்டு பிரம்மாத்திரத்தைப் பிரயோகிக்கின்றான் இந்திரஜித்து. இலக்குமணன் உள்ளிட்ட எல்லோரும் மயங்கி உருண்டு விட்டார்கள்.

இந்திரஜித்து தந்தையை வந்து பார்த்தான். வெற்றியை எடுத்துச் சொன்னான்.

இராமனும் விபீடணனும் புலம்பிக் கதறுகிறார்கள்.

இராட்சஸப் பிணங்களை எல்லாம் கடலில் தூக்கி எறியும்படி கட்டளை இட்டுவிட்டு சீதைக்குப் போர்க்கள நிகழ்ச்சிகளைக் காட்டி வரும்படி கட்டளையிடுகிறான் இரா வணன். இது பிராட்டி களங் காண் படலத்தில் கூறப் படுகிறது.

அனுமானை ஒரு வகையாக எழுப்பி அவன் மூலம் மருந்து மலையைக் கொண்டு வரும்படி ஏற்பாடு நடக்கிறது, அந்தப் பக்கம். அது அப்படியே நடந்தேறுகிறது. இதைச் சித்தரிப்பதுதான் மருந்து மலைப் படலம். அனுமானால் கொண்டு வரப்பட்ட சஞ்சீவி மலையால் இராட்சஸர்களும் உயிர் பெற்று எழுந்துவிடக் கூடாதே என்பதற்காகத் திட்டமிட்டுச் செய்ததைப் போலுள்ளது பிராட்டி களங் காண் படலம். பிராட்டியைக் களங்காண ஏற்பாடு செய்ய நினைத்தே இராட்சஸப் பிணங்களைக் கடலில் தூக்கி எறிந்து விட்டார்கள்.

இந்த இரண்டு படலங்களும் நாடக முறையில் அபார மாக இல்லாவிட்டாலும் கதைத் தொடர்ச்சியிலும் கவிதா வெறியிலும் தலைசிறந்து நிற்கின்றன; அத்துடன் இந்திர ஜித்துவின் இன்னொரு தாக்குதலுக்கு இடை நிலையாகவும் விளங்குகின்றன. வெற்றியின் கிறுகிறுப்பில் அமிழ்ந்து போன இராவணன் களியாட்டத்திற்கு ஏற்பாடு செய்து அதில் கலந்து கொள்கிறான். வரப் போகின்ற நாச காலத்திற்கு அபசகுனம்போல இருக்கிறது அக்களி யாட்டம்.

நாட்டிய வெறியில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான் சஞ்சீவி மலையால் உயிர் பெற்று எழுந்து அவர்கள் ஆரவா ரிக்கும் பேரோசை கேட்கிறது.

இராவணன் சபையைக் கூட்டிச் சீறுகிறான். இது மாயா சீதைப் படலம். வழக்கம்போல மாலியவான் புத்திமதி சொல்லுகிறான். யார் கேட்பது?

இந்திரஜித்து தன் அந்தரங்க ஆலோசனையைச் சொல்லுகிறான்: "சீதையைப்போல ஒரு பொய்யுருவம் செய்து அதை அவர்களுக்கு முன்னே நான் இழுத்துக் கொண்டுபோய் வெட்டுகிறேன். பின்பு அயோத்திமேல் படை எடுத்துப்போவதாக ஏமாற்றி மறைந்துகொள்ளு கிறேன். அவர்கள் உடனே பின்வாங்கி விடுவார்கள். சீதையே இறந்து போனாளே, இனி யுத்தம் செய்து என்ன பலன் என்று அவர்கள் எண்ணிவிடுவார்கள். மேலும் அயோத்தி சென்று தாயையும் தம்பிமாரையும் நான் வதைப் பதாக எண்ணி உடனே அவர்கள் அயோத்தி போய்விடு வார்கள். அதற்குள்ளாக நான் ஒரு யாகத்தைச் செய்து படைக் கலங்களைப் பெற்றுவிடுகிறேன். உண்மையை அறிந்து அவர்கள் மறுபடி வந்தாலும் அந்த ஆயுதத்தால் அவர்களை எளிதாக வென்றுவிடலாம்."

இதற்கு இராவணன் உடனே சம்மதித்துவிடுகிறன். இந்திரஜித்து பொய் உருவச் சீதையை அனுமனுக்கு முன்பாக வெட்டி வீழ்த்துகிறன். அயோத்திமீது படை எடுத்துப் போவதாகவும் ஏமாற்றி, மறைவாக யாகம் செய்யப் புறப்பட்டுவிட்டான்.

வஞ்சனையின் ரகஸ்யங்களை எல்லாம் இந்தப் படலம் நன்றுகச் சுட்டிக் காட்டுகிறது. அனுமனுடைய கதறலும், அவன் இந்திரஜித்திடம் கெஞ்சுவதும் அற்புதமாக இருக்கின்றன. இராமன் முன்னிலையில் அனுமான் அழுது புரளுகிறன். விஷயத்தை அறிந்து இராமன் துக்கிப்பதும், இலக்குமணன் சீறுவதும், விபீஷணன் இவைகளைப் "பம்மாத்து" என்று முடிவு கட்டுவதும், இந்திரஜித்தினுடைய திருட்டுத்தனங்களை நிரூபிப்பதும் நாடகத்தின் சாதாரணப் போக்குகள்.

கவிதைகள் மந்த கதியோடுதான் நடக்கின்றன. நாடகத்தின் போக்கோ மெதுவானது. ஆனுல் பின்னுல் வரக்கூடிய நிகழ்ச்சிகளுக்கும், வேக நிலைகளுக்கும் இது அடித்தளம்.

இனி அடுத்து வருவது நிகும்பலைப் படலம். விபீடணனுடைய யோசனையின் பேரில் இலக்குமணனும், வீரர்களும் இந்திரஜித்தைத் தேடிப் பிடிக்கிறுர்கள். இலக்குமணனுடைய அம்புகள் இந்திரஜித்தினுடைய உடலைக் கிழித்து இரத்தத்தை ஆருகப் பெருக்குகிறது. மாய உருக்கொண்டு இலங்கைக்கு மறைந்துவிட்டான் இந்திரஜித்து.

இந்திரஜித்துவிற்கும் அனுமானுக்கும் நடக்கின்ற சம்பாஷணை ஹாஸ்ய ரசனையோடு வீரத்தைச் சுட்டுகிறது. இந்திரஜித்துவிற்கும் விபீடணனுக்கும் நடக்கும் சம்பாஷணை தர்மா தர்மப் பிரச்னையை அலசி ஆராய்கிறது. இரண்டு சம்பாஷணைகளும் இந்தக் கட்டத்தின் உயிரான அம்சங்கள்.

தேரை இழந்து, இரத்தத்தை சிந்திய வண்ணம் தந்தைக்கு முன்னே வந்து நிற்கிறுன் செல்வக் குமாரன். அவனுடைய உடம்பும் அவயவங்களும் நடுங்குகின்றன. இராவணன் நடந்ததை விசாரிக்கிருன். அழாக் குறை யாகச் சொல்லுகிருன் மைந்தன். அடுத்தது இந்திரஜித்து வதைப் படலம்.

"என்னுடைய மாயைகளை எல்லாம் உன் தம்பி அவர் களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான். இலக்குமணன் என் அம்புகளை எல்லாம் தடுத்து நொறுக்கிவிட்டான்.

"சூழ்வினை மாயை எல்லாம்
உம்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி
வெகுளியா லெழுந்து வீங்கி
ஆள்வினை ஆற்றல் ஆற்ருன்
அமர்த்தொழிற் புக்கு நின்ருன்;
தாழ்விலாப் படைகள் மூன்றுந்
தொடுத்தனென் தடுத்து விட்டான்"

"என்னுடைய அம்புகள் வானத்தையும் மண்ணையும் ஊடுருவி வந்தாலும் இலக்குமணனை வலம் வந்து வணங்கு கின்றன. ஏதோ குலப்பழி போன்ற இந்த நாசத்தில் நம்மால் தப்பிக்கவே முடியாது போலிருக்கிறது.

"நான் யுத்தத்திற்குப் பயப்படவில்லை. நீயும் நானும் தப்பிப் பிழைக்கவேண்டுமானுல் சீதையை விட்டுவிட வேண்டியதுதான். சீதையை விட்டுவிட்டால் இன்ருேடு யுத்தமும் முடிந்துவிடும். நாமும் உயிர்கொண்டு வாழ முடியும்."

"ஆதலால் அஞ்சினேன் என்
றருளலை; ஆசைதானச்

சீதைபால் விடுதி யாயின்
அனையவர் சீற்றந் தீர்வர் ;
போதலும் புரிவர் ; செய்த
தீமையும் பொறுப்பர் ; உன்மேல்
காதலால் உரைத்தேன் " என்ருன்,
உலகெலாங் கலக்கி வென்ருன் "

இந்த வார்த்தைகளை இராவணனல் பொறுக்க முடியவில்லை. குத்தலும் பக்கவெட்டும் நிறைந்த கொடுஞ்சொற்களை அள்ளி எறிந்துவிட்டான் இராவணன்,

" பேதமை உரைத்தாய் மைந்த !
உலகெலாம் பெயரப் பேராக்
காதை யென் புகழினேடு
நிலைபெற, அமரர் காண
மீதெழு மொக்கு ளென்ன
யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ ?
இருபது திண்டோளுண்டால் !"

" வென்றிலன் என்ற போதும்,
வேதம் உள்ளளவும் நானும்
நின்றுளன் அன்ருே, மற்றவ்
இராமன் பேர் நிற்குமாயின் ?
பொன்றுதல் ஒரு காலத்தும்
தவிருமோ ? பொதுமைத்தன்ருே ?
இன்றுளார் நாளை மாள்வார் ;
புகழுக்கும் இறுதியுண்டோ ?"

" உன்னேடு நான் ஏன் இவ்வளவு பேசவேண்டும் ? நீ உன் இருப்பிடத்திற்கு போ. இரவும் பகலும் நன்ருகக் களைப்பாறித் தூங்கு. சரீரத்தில் புகுந்து முனை முறிந்து

போன அம்புகளை எல்லாம் முள்வாங்கி வைத்து எடு. நான் இதோ போருக்குப் புறப்படுகிறேன்.''

இதைச் சொல்லிவிட்டு எழுந்துவிட்டான் இராவணன்.

இந்திரஜித்தால் இதைக் கேட்கச் சகிக்கவில்லை. "தேரைக் கொண்டுவா, தேரைக் கொண்டுவா'' என்று கூப்பாடு போடுகின்றான்.

"சொல்லி என் பலவும்? நீ நின்
இருக்கையைத் தொடர்ந்து, தோளில்
புல்லிய பகழி வாங்கிப்
போர்த் தொழிற் சிரமம் போக்கி,
எல்லியுங் கழித்தி'' யென்னா
எழுந்தனன்; எழுந்து பேழ்வாய்
வல்லியம் முனிந்தாலன்னான்
"வருக தேர் வருக'' என்றான்.

அதர்மமே வடிவான இரண்டு மாபெரும் பாத்திரங்கள் நீண்டகாலமாக ஒன்றுபட்டு ஒத்துழைத்துக் கடைசி முனையில் இப்படிப் பேதப்படுகின்றன. இந்த சோக சித்திரத்தை இப்படிச் செஞ் சொற்களால் சிறை செய்து தேக்குகின்றான் கம்பன். ஒவ்வொரு சொல்லும் சோக நாதத்துடன் கமகம் கொடுத்து அலறுகிறது.

தந்தையின் காலில் விழுந்து வணங்கினான் இந்திரஜித்து. குற்றத்தைப் பொறுக்கும்படி மன்னிப்புக் கேட்கிறான். "நான் தொலைந்த பின்பேனும் நல்லதைச் செய்'' என்று வேண்டிக் கொண்டான். தேரேறிப் புறப்பட்டு வந்தான்.

எழுந்தனன்; தந்தை தன்னை
இணை அடி இறைஞ்சி, "எந்தாய்!
ஒழிந்தருள் சீற்றஞ் சொன்ன
உறுதியைப் பொறுத்தி; யானே

கழிந்தனென் என்ற பின்னர்
நல்லவாக் காண்டி " யென்று
மொழிந்தனன் ; தெய்வத் தேர் மேல்
ஏறினான் ; முடியலுற்றான்.

இலங்கையின் வீதி வழியாகத் தேர் ஓடி வருகின்றது. தன் படைக்கலங்களை எதிர்ப்பட்டோருக்கெல்லாம் அள்ளி வழங்குகிறான். தந்தையை மாறி மாறிப் பார்த்துக் கண்ணீர் சிந்துகிறான். அவனுடைய தேர் வாயு வேகத்தில் வருகிறது.

படைக்கலம், விஞ்சை, மற்றும்
படைத்தன பலவும் தன்பால்
அடைக்கலம் ஆகத் தேவர்
அளித்தன எல்லாம் வாங்கி,
கொடைத் தொழில் வேட்டோர்க் கெல்லாம்
கொடுத்தனன் ; கொடியோன் தன்னைக்
கடைக்கணா னோக்கி நோக்கி
கண்ணினீர் கழுலப் போனான்.

இலங்கையிலுள்ள இராட்சஸர்கள் அத்தனைபேரும் இந்திரஜித்தைச் சூழ்ந்து கொண்டார்கள். " உன்னை விட்டு நாங்கள் பிரியமாட்டோம்; உன்னோடேயே நாங்களும் செத்து மடிகின்றோம் " என்று சூழ்ந்து கொண்டார்கள். அவர்களை எல்லாம் இந்திரஜித்து தேற்றுகிறான். அரசனுக்குத் துணையாக இருக்கும்படி அவர்களை வேண்டிக் கொள் கின்றான்.

அதி வேகமாகப் பறந்து செல்கிறது அவனது தேர்.

" இலங்கையின் நிருதர் எல்லாம்
அழிந்தனர் ; விரைவின் எய்தி,
விலங்கலந் தோள் ! நின்னைப்
பிரிகலம் விளிதும் " என்று

வலங் கொடு தொடர்ந்தார் தம்மை
 " மன்னனைக் காமின் ; யாதும்
கலங்கலிர் ; இனிமேற் சென்று
 மனிசரைக் கடப்பல் " என்றான்.

வணங்குபவர்களையும் வாழ்த்துபவர்களையும் அவனுடைய தேர் கடந்து செல்லுகிறது. இவன் வடிவழகை எண்ணி வாய் உலர்ந்து போன மக்களையும் அது கடந்து செல்லுகிறது. இள மங்கையரின் கடைக்கண் பார்வைகள் என்னும் சரக்கூடங்களை எல்லாம் ஊடுருவிச் செல்லுகிறது அந்தத் தேர்.

வணங்குவார், வாழ்த்துவார், தம்
 வடிவினை நோக்கித் தம்வாய்
உணங்குவார், உயிர்ப்பார், உள்ளம்
 உருகுவார், வெருவலுற்றுக்
கணங்குழை மகளிர் ஈண்டு
 இரைத்தவர் கடைக்கணென்னும்
அணங்குறை நெடுவேல் பாயும்
 அமர் கடந்தரிதிற் போனான்.

ஓடி ஒளிந்த இந்திரஜித்தை இன்னும் காணவில்லையே என்று கவலை கொண்டுள்ள இலக்குவன் காதில் அந்தத் தேரோசை விழுகிறது.

ஏயினன் இன்னனக,
 இலக்குவன், எடுத்த வில்லன்,
சேயிரு விசும்பை நோக்கி,
 " வீடண ! தீயோனப்பால்
போயினனாதல் வேண்டும் ;
 புரிந்திலன் ஒன்றும் " என்பான்,
ஆயிரம் புரவி பூண்ட
 தேரின் பேரரவங் கேட்டான்!

இந்திரஜித்தின் கடைசிக் கட்டம் காம்பீர்ய சுதியில் ஆரம்பிப்பதை இப்பொழுது பார்த்தோம். இவனுடைய முடிவு வரைக்கும் இதே காம்பீர்ய சுதியை வளர்த்துக் கொண்டு வருகிருன் கம்பன்.

இந்தக் கடைசிப் போரைக் கம்பன் அளவு கடந்த சாவ தானத்துடன் நடத்திக் காட்டுகிருன். போர் வரிசைகளை எல்லாம், அதன் ரகஸ்யங்களை எல்லாம் காட்டிக் காட்டிக் களைத்துப் போன வீரனை இதற்கு மேலும் பயங்கரம் நிறைந்த போர் வீரனுகச் சித்தரிப்பதென்பது மிக மிகச் சிரம மான காரியம். ஆனல் கம்பனுடைய அதி மேதைத்தன்மை போரின் காம்பீர்யங்களை எல்லாம் மலை மலையாக இதற்கு முன்பு கொட்டி விட்டாலும், இந்த இடத்திலும் புதுமை நிறைந்த முறைகளை வகுக்கின்றது. தாங்க முடியாத பயங்கர உணர்ச்சிகளைப் படைப்பிக்கின்றது.

போரின் பயங்கரமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்றபடி பயங்கரமான கதிகளையும் அவனது சொல்லாற்றல் வகுக் கின்றது. ஒவ்வொரு சின்னஞ்சிறு காட்சியும் நம் கண் முன்னே நிலைத்து நின்று அச்சத்தை எழுப்புகிறது. போராடிப் போராடிக் களைத்துப் போன ஒரு பெரு வீரனை, ஆத்மானு பாவக் கட்டத்தில் புத்துருவம் பெற்று வருகின்ற ஒரு வீரனை, இப்படி அகண்டாகாரமான போராட்டத்தில் ஈடுபடுத்துவது என்பது கம்பனுல்தான் முடியும்.

இந்திரஜித்தின் தேரோட்டத்திலிருந்து ஆரம்பிக்கின்றன யுத்த நிகழ்ச்சிகள்.

இலக்குமணனுக்கும் இந்திரஜித்துவிற்கும் நடக்கின்ற பெரும் போரில் பிரபஞ்சம் முழுவதும் அடங்கி விட்டது. எவனுடைய அம்பு மழை இது என்று யாராலும் நிச்சயித்துச் சொல்ல முடியாதபடி அம்புக்கூட்டம் வானை நிரப்பி விட்டது. சிரமத்தின் மேல் சிரமங்களைத் தாங்கி இந்திரஜித்

தினுடைய பாகனையும் தேரையும் அழித்து விடுகிருன் இலக்குமணன்.

தேரழிந்து போனுலும் அதன் தட்டுகளில் உள்ள படைக் கலங்களை வாரி வாரி மழைபோலப் பொழிகின்ருன் இந்திரஜித்து. இலக்குமணன் அதையும் சிதைத்துவிட எண்ணி விண்ணிடைக் குதித்துக் கெக்கலிக்கின்ருன். ஆரவாரம் திசைகளைக் கிழிக்கின்றது. மூல முடிச்சற்று மூன்று லோகங்களும் தறி கெட்டுச் சுழலுகின்றன.

அழிந்த தேர் தட்டி னின்றும்
அங்குள்ள படையை அள்ளிப்
மொழிந்தனன் ; இளைய வள்ளல்
கணைகளால் துணித்துப் போக்க,
செழிந்திரு வகையில் விண்ணை
முட்டினுன் ; உலகம் மூன்றும்
கிழிந்தன என்ன ஆர்த்தான் ;
கண்டிலார் ; ஓசை கேட்டார்.

இந்திரஜித்து ஆகாயத்தில் தான் தங்கி இருக்கிருன் என்பதை அவனது கல்மாரியே மெய்ப்பிக்கிறது, இலக்குமணனது அம்பு மழை உச்சி முழுவதையும் ஊடுருவுகின்றது. மேகத்தின் பின்புறம் இருந்து இரத்தம் ஒழுகுவதால் வானவெளி முழுவதும் இரத்தப் பெருக்காக விளங்குகிறது. இந்திரஜித்தினுடைய வில்லை வெட்டி வீழ்த்தாத வரைக்கும் அவனுடைய தோள்களைத் தரையில் கிடத்த முடியாது என்று இலக்குமணன் அஸ்திரப்பிரயோகம் செய்கின்ருன்.

கலை அருத் திங்கள் அன்ன
வாளியால் கையைக் கொய்தான்
விலை அரு மணிப் பூணேடும்
வில்லொடும் நிலத்து வீழ

அவனுடைய கை அறுந்து தோளில் கட்டப்பட்டுள்ள வாகு வலயங்களோடும் பிடித்த வில்லோடும் தரையில் வந்து விழுந்தது.

சண்ட மாருதத்தால் நிலைதவறி விழுந்த இந்திரதனுசு மேகத்தோடு தரைமீது படிந்துறங்குவதுபோல இருந்தது கைப்பிடியோடு விழுந்து கிடக்கின்ற தனுசு.

வேகவான் கடுங்கால் ஏற்ற
முற்றும் போய் விளிந்த நாளின்
மாகவான் தடக்கை மண்மேல்
விழுந்தது மணிப்பூண் மின்ன
மேகம் ஆ காயத்திட்ட
வில்லொடும் வீழ்ந்த(து) என்ன.

இந்திரஜித்தின் வலது புஜம் மண்ணோடு புரண்டு துடிக்கின்றது. இடிக் கூட்டம் போல கெக்கலித்துக் கொண்டு அவன் இறங்கி வருகிறான். "சிவபெருமான் கொடுத்த இந்தச் சூலத்தால் உன்னைச் சிதைக்காமல் நான் மடியமாட்டேன்" என்று இலக்குமணனை நோக்கிக் கர்ஜிக்கின்றான்.

காலங் கொண்(டு) எழுந்த மேகக்
கடுமையான், "செம்மை காட்டும்
ஆலங் கொண்(டு) இருந்த கண்டத்(து)
அமரர்கோன் அருளில் பெற்ற
சூலங் கொண்(டு) எறிவல்" என்னாத்
தோன்றினன்; "பகையில் தோற்ற
மூலங் கொண்(டு) உணரா நின்னை
முடித்தன்றி முடியேன்" என்றான்.

சண்ட மாருதமாய் இடிக் கூட்டமாய் ஊழித் தீயாய் போர்க்களம் முழுவதும் சஞ்சரிக்கின்றான் இந்திரஜித்து.

இலக்குமணனுக்கு முன்பு ரூபபேதம் கொண்ட எமன் போல வந்து நிற்கிருன். இலக்குமணனுல் இதைப் பொறுக்க முடியவில்லே.

காற்றென, உரும் ஏ(று) என்ன,
கனலென, கண்ட நாள் உற்ற
கூற்றென உருவு கொண்டு
குறுகிய(து) என்ன, கொல்வான்
தோற்றினன் ; அதனேக் காணு
' இனித் தலே துணிக்கும் காலம்
ஏற்ற(து)' என்(று) அயோத்தி வேந்தற்(கு)
இளேயவன் இனேய செய்தான்.

இலக்குமணன் தொடுத்து விட்ட அம்பு இந்திர ஜித்தைத் தலேவேறு, உடல்வேருகத் துணித்துவிட்டது. அந்தரத்தை நோக்கித் தலே போகிறது ; உடம்போ தரையில் விழுந்துவிட்டது. மின்னலும் இடியும் உள்ளுக்குள்ளேயே குமுற கதிமாறி விழுந்த காளமேகம் போல உடம்பு விழுந்து விட்டது. இடைவெளியின்றி அம்புகள் புகுந்து உடம்பு அம்பருத்தூணி போல விளங்குகிறது. கைப் பிடித்த சூலக்கட்டுத் தளரவில்லே.

அற்றவன் தலேமீ(து) ஓங்கி,
அண்டமுற்(று) அணுகா முன்னம்
பற்றிய சூலத் தோடும்
உடல்நிறை பகழியோடும்
எற்றிய கால்க் காற்ருன்
மின்னெடும், இடியினேடும்
சுற்றிய புயல் வீழ்ந்தென்ன
வீழ்ந்தது சோரன் யாக்கை.

வானத்தின் உச்சிவரை சென்ற சிரசும் திரும்பி விட்டது. மகர குண்டலங்கள் இலங்க செவ்வானம்

போன்ற கூந்தல் கலைந்துபடர அவன் சிரசு மண்ணில் வந்து விழுந்தது. பல ஒளி மண்டலங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெரு மண்டலம்போல விளங்குகிறது சிரசு.

விண் தலத்து இலங்கு திங்கள்
இரண்டொடு மின்னு வீசும்
குண்டலத் துணைக ளோடும்
கொந்தளக் குஞ்சிச் செங்கேழ்ச்
சண்டவெம் கதிரோன் செக்கர்த்
தழலொடும், மருவித் தாம
மண்டலம் விழுந்த(து) என்ன
விழுந்தது தலையும் மண்மேல்.

மரண பயத்தின் உச்சாணிகளைச் சொற்களும் சந்தங் களும் துல்லியமாக அளந்து காட்டுகின்றன. ஒவ்வொரு சொல்லும் சோக உணர்ச்சியை விரித்துப் பெருக்குகின்றது. அரக்க வமிசத்தின் நாயகன் இராவணன். இராமா யணத்தின் அதிநாயகனுகவும் அவன்தான் விளங்குகின்ருன். ஆனுல் கம்பனே இராவணனுக்குச் சமதையாக, அவனினும் ஒரு முழம் உயர்ந்தவனுக, இந்திரஜித்தைப் படைத் திருக்கிருன்.

பாத்திரங்களைத் தனித்தனியாக நிறுத்தி ஒன்றை விட ஒன்றை உயர்த்திக்கொண்டு போவதில்தான் நாடகத்தின் ஜீவசுரம் விரிவாகப் பேசும். இந்திரஜித்தின் போராட்டங் களும், அவன் வெற்றி தோல்விகளும் எண்ணில் அடங் காதவை. சந்தர்ப்பங்களையும் நிகழ்ச்சிகளையும் பெருவாரி யாக உண்டுபண்ணி ஒவ்வொரு முனையிலும் உணர்ச்சியை வெள்ளப் பெருக்காகப் பாய்ச்சுகிருன் கம்பன்.

இந்திரஜித்து வெற்றியோடு வந்து தந்தையுடன் பேசுவது, பேசிக்கொண்டிருக்கும் பொழுதே வெற்றி, தோல்வியாக மாறிவிடுவது, அங்கே சோக மயமான

சம்பாஷணையை உண்டாக்குவது, அதற்கு உரிய சூழ்நிலையை, கால இடத் தகுதிகளை அப்பொழுதே ஏற்படுத்தி வருவது, மீண்டும் மீண்டும் போருக்குச் செல்லுவது இவை எல்லாம் கம்பனுடைய சாதனைகளில் கூட பிற இடங்களில் காண முடியாதவை.

கையும் களவுமாகயாக சாலையில் பிடிபட்டு, தேரைப் பறிகொடுத்து இரத்தம் சிந்தி வழி காட்ட இந்திரஜித்து தந்தைமுன் வந்து நிற்பது நினைக்க நினைக்கப் பயங்கரம் நிறைந்த காட்சி.

தந்தையினுடைய கொள்கையில் ஈருடலும் ஓருயிருமாய் இதுநாள் வரைக்கும் ஒத்துழைத்த இந்திரஜித்து, கடைசி முனையில் "இராமனை நான் வெல்ல முடியாது. நீ சீதையை விட்டு விடு" என்று சொல்லுவது சோக நாடகத்தின் உச்ச நிலையாய் விளங்குகிறது.

தந்தைக்குத் தானும் தனக்குத் தந்தையுமே இவ்வுலகத்தில் துணையாக விளங்கி வந்து, கடைசியில் ஒருவரை ஒருவர் முரணி விலகிவிட்டார்கள். முதலில் ஒரே கொள்கையை உடைய இரு பெரும் பாத்திரங்களை விஸ்தாரமாக நடமாட விட்டான். ஒன்றுக்கொன்று ஆஸ்பதமாகவும் ஒத்துழைக்க விட்டான். பாசமும் பக்தியும் படர்ந்து பரவி உச்ச நிலை எய்தியதும் அவர்களைப் பிரித்துவிடுகின்றான் கம்பன். பிரிவென்றால் மறுபடியும் வந்து ஒன்று கூடுகிற பிரிவல்ல. இந்தக் கேந்திரக் கட்டத்தில் இரண்டு உள்ளங்களும் தம் உணர்ச்சிகளை மழை போலக் கொட்டுகின்றன. இரண்டு பாத்திரங்களும் நம் அனுதாபத்தைத் தனித்தனியாகக் கவர்ந்து விடுகின்றன.

மயக்கமும் துடிதுடிப்பும் நிறைந்த சூழ்நிலையில் இந்திரஜித்து கொண்டுவரப்படுகிறான். கோபாவேசம் கொப்பளிக்க அவன் சொல்லுகிற ஒவ்வொரு சொல்லும் அவனைத்

தத்ரூபமாக நம்முன் படைத்துவிடுகிறது. இந்த எடுப்பு நிலை அசாதாரணமானது மாத்திரமல்ல; இந்த நாடகத்திற்கு ஆசாரவாசலாக விளங்குவதும் அதுதான். இந்திரஜித்தின் முடிவு நிலை, அவனுடைய பெரு வீரத்துக்கு ஒரு முத்தாய்ப்பு. அவனுடைய மரணத்தைக் கண்டு இராமன் புளகாங்கித மடைந்து கிளுகிளுப்பது முத்தாய்ப்புக்கு மேல் முத்தாய்ப் பாக விழுகின்றது. எதிரிகளுடைய ஆரவாரத்தை அளவு கோலாக வைத்து இந்திரஜித்தின் மரணத்திலுள்ள ஜீவரகஸ் யத்தை அளந்து காட்டுகிறுன் கம்பன். இந்த இரண்டு முறைமைகளும் நினைக்க முடியாதவை. நாடகத்தின் அதி அற்புதமான பண்புகள்.

நாடகத் தலைவனின் சோக நிலைக்கு ஆதார பூர்வமாக இருப்பது அவனுடைய பெருமைகளும் சம்பந்தப்பட்டவர் களோடு அவனுக்குள்ள உறவு நிலைகளும்தான். இந்தப் பெருமைகளும் உறவுகளும் எந்த அளவில் விஸ்தார மாகவும் அழுத்தமாகவும் அமைந்திருக்கின்றனவோ அந்த அளவில் அமைந்திருக்கின்றன. சோக உணர்ச்சியை உண்டாக்கும் அவனுடைய முடிவும் மனக் கலக்கமும் இந்திரஜித்தினுடைய பெருமையையும் உறவையும் ஒரு சில வரிகளில் பிரமாதமாக, பூரணமாகச் சிந்தித்து விடுகின்றன. கம்பனின் சொற்களில், இந்திரஜித்தின் மகோன்னதமான இயல்புகள் வலசாரி இடசாரி சுற்றுகின்றன.

இந்திரஜித்தைக் கம்பன் உருவாக்குகின்ற முறையே ஒரு தினுசு. இராவணனுக்குச் சமதையாக அவனிலும் உயர்ந்தவனுகக்கூட இந்திரஜித்தைக் கம்பன் படைத்து விடுகிறுன் என்று கூறினேம். காவியத்தின் ஏகநாயகனுக்கு சமதையாக அவனினும் உயர்ந்தவனுக ஒரு பாத்திரத்தை உண்டாக்குவது சாமான்ய விஷயமல்ல. பொதுவாக அவ் விதம் செய்வதால் நாடகம் முழுவதுமே உலைந்து சரிந்து விடக் கூடும். ஆனல் கம்பனுடைய கைராசியால்

நாடகம் அளவிட முடியாத பெருஞ் சிறப்பைப் பெற்று விட்டது.

ஏகத் தலைவனை ஒட்டி ஒரு பாத்திரத்தை உண்டாக்க வேண்டுமானால் அந்தப் பாத்திரத்தின் ஆரம்ப நிலை, அது காலடி எடுத்து வைக்கின்ற இடம், சூழ்நிலை முதலிய ஒவ்வொரு விஷயமும் அதற்குத் தக்க முறையோடு அமைய வேண்டும்.

*இந்திரஜித்தின் ஆரம்பப் பிரவேசமே ஒரு அலாதியாக இருக்கிறது. முதல்நாள் போரில் இராவணன் அவமானப் பட்டு வந்து கிடக்கின்றான். கும்பகர்ணனுடைய கதையும் முடிந்துவிட்டது. அதிகாயன் முதலிய குமாரர்களும் இப்பொழுது இறந்துபோனார்கள். இலங்கை வீதி முழுவதும் ஒரே அழுகுரல். இந்திரஜித்திற்கு விஷயம் இன்னதென்றே புலப்படவில்லை. ஏதோ ஒரு அசாதாரண சம்பவம் நடந்து விட்டது என்று இராவணனை வந்து விசாரித்தான். இராவணன் சொல்லுகிற வார்த்தைகளை இந்திரஜித்துவினால் பொறுக்க முடியவில்லை. பல்லை நற நறவென்று கடித்துக் கொண்டே ஆகாயத்தைப் பார்க்கிறான்.. அவனை அறியாமல் அவன் வாய் ஒரு வார்த்தையைச் சொல்லிவிடுகிறது. அவனுடைய இரண்டு கண்களும் நெருப்பு மண்டலமாகக் கனிந்துவிட்டன.

**சொல்லாத முன்னம் சுடரைச்**
**சுடர் தூண்டு கண்ணன்**
**பல்லால் அதரத்தை அதுக்கி**
**விண் மீது பார்த்தான்;**
**"எல்லாரும் இறந்தனரோ!"**
**என ஏங்கி நைந்தான்**

---

*இதே மாதிரியான சூழ் நிலைதான் சுந்தர காண்டத்தில் இந்திரஜித்து போருக்குப் புறப்படும்போது கொடுக்கப்பட்டது.

வல்லாளரை எண்ணில் விரற்கு
முன் நிற்கும் வீரன்.

அதிகாயனையும் மற்றவர்களையும் "ஆர் கொன்றவர்" என்று கர்ஜிக்கிருன் இந்திரஜித்து. இராவணன் பதில் சொல்லுகிருன். இந்திரஜித்தினுடைய ஒவ்வொரு அங்கமும் துடிப்பெடுக்கின்றது. அவனுடைய பேச்சு வெறிகொண்டு சீறுகிறது; "அதிகாயனையும் மற்றவர்களையும் அவர்களா கொன்ருர்கள்?"

"கொன்ருர் அவரோ கொலை
சூழ்கென நீ கொடுத்தாய்"

பின்னும் சொல்லுகிருன்: "மனிதர்களுடைய வலிமையைத் தெரிந்திருந்தும் என்னை நீ ஏன் போருக்கு அனுப்பவில்லை?" இந்திரஜித்தினுடைய மனப்புழுக்கம் பெருமூச்சாக வந்து தீச் சுவாலை வீசுகிறது.

"வன் தானையர் மானுடர்
வன்மை அறிந்து, மன்ன!
என்ருனும் எனைச் செல
ஏவலை இற்ற(து)?" என்ன
நின்ருன் நெடிதுன்னி
முனிந்து நெருப்புயிர்ப்பான்.

"இலங்கையை அழித்து அட்சய குமாரர்களை எல்லாம் வதைத்த குரங்கைப் பிடித்துக் கொண்டுவந்து உன் முன்னே நிறுத்தினேன். அவனைத் தூதுவன் என்று சொல்லி அவன்மீது கருணை காட்டினுய். வெற்றி அடைய வேண்டுமே, தப்பிப் பிழைக்கவேண்டுமே என்ற யோசனை எள்ளளவும் கூட உன்னிடம் இல்லை. வரிசை வரிசையாக மக்களைப் பலிபீடத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கிருய். அவர்களும்.........

அக்கப் பெரியோனை,
நிலத்தொ(டு) அரைத்துளானை
விக்கல் பெருதூதுவன்
என்று விளம்பி விட்டாய்
புக்கத் தலை எய்த
நினைந்திலை ; புந்தி இல்லாய்!
மக்கள்த் துணை அற்றனை ;
இற்ற(து) உன் வாழ்க்கை '' மன்னோ.

இராவணனுடைய தவறுகளை எடுத்துரைத்து அவனிடம் இப்படிக் கோபப்படுவது இந்திரஜித்து ஒருவன்தான். இராவணனிடம் இந்த வார்த்தைகளை இந்திரஜித்து ஒருவனுல்தான் சொல்ல முடியும்.

இந்திரஜித்தினுடைய பெருமையை அவன் இறந்ததைக் கண்டு இராமன் ஆனந்திப்பதின்மூலம் கம்பன் முடிப்பதில் அது பூரணத்திற்கும் பூரணமாகிவிடுகிறது.

அங்கதன் இந்திரஜித்தினுடைய தலையை எடுத்துக் கொண்டு வருகிருன். அனுமனுடைய தோளிலேறிக் கொண்டு பின்னுல் வருகிறது இளையவனுடைய பவனி. இந்திரஜித்தின் தலையைப் பார்த்ததும் இராமனுக்குக் கிறுகிறுத்துவிட்டது. உள்ளமும் உடலும் பூரித்துச் சொல்கிருன் :

"என்னுடைய பழியும் சிறுமையும் எப்பொழுது நீங்கும் என்று ஏங்கிக்கொண்டு கிடந்தேன். அது இன்ருேடு கழிந்துவிட்டது. சுக்கிரீவ, இந்திரஜித்தினுடைய தலையை நீ எடுத்து வந்துவிட்டதால் இனி நான் தலை நிமிர்ந்து திரிய முடியும்.........

*எல்லிவான் மதியின் உற்ற
கறைஎன, என்மேல் வந்து

* எல்லிவான் மதி—பிரகாசமும் சிறப்பும் நிரம்பிய சந்திரன். அகம் புலம்புகின்றேன்—மனவேதனை கொண்டு வாடுகின்றேன். துவக்கு அற்று—துன்பம் நீங்கி.

புல்லிய வடுவும் போகா(து)
என்றகம் புலம்பு கின்றேன்
சொல்லிய தருமம் நல்கத்
துவக்கற்றுத் துயரம் தீர்ந்தேன் ;
செல்வமும் பெறுதற்(கு) உண்டோ ?
குறை இனிச் சிறுமை யாதோ ?

1 " தென்றலை ஆழி சூழ்ந்த
திண்மதில் இலங்கை காக்கும்
புன்றலைக் கள்வன் பெற்ற
புதல்வனை இளவல் வீழ்த்த
வன்தலை எடுத்து நீ முன்
வருதலால் வான ரேச !
என்தலை எடுக்கல் ஆனேன் ;
இனிக் குடை எடுப்பேன் " என்றான்.

இலக்குமணனைக் கட்டிக்கொண்டு இராமன் ஆனந்தக் கண்ணீர் பொழிகின்றான். ஆனந்த வெறியில் தம்பியினுடைய ஒவ்வொரு அவயவத்தையும் பார்த்துப் பார்த்து மகிழுகின்றான். சுற்றி நிற்பவர்களையும் பார்த்து மகிழுகின்றான்.

2 வன்புலம் கடந்து மீளும்
தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயனம் என்னும்
தாமரை சொரியும் தாரை

---

1 தென் தலை ஆழி—தென் மகா சமுத்திரம். வானரேச—குரங்குகளின் தலைவனாகிய அங்கதனே.

2 வன் புலம்—போர்க்களம். நயனம்—கண். தாரை—கண்ணீர், என்பு—எலும்பு. யார் அது ஓர்வார்—அதை யார் இன்னதென்று வரையறுத்துச் சொல்ல முடியும்.

அன்புகொல்! அழுகண்ணீர் கொல்!
ஆனந்தவாரியே கொல்!
என்புகள் உருகிச் சோரும்
கருணை கொல்! யார(து) ஓர்வார்?

*தலையினை நோக்கும்; தம்பி
கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும்; நின்ற
மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தம்பி
செங்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும்
உரைத்திலன் களிப்புக் கொண்டான்

இந்திரஜித்தினுடைய வாழ்க்கையை எவ்வளவு விஸ்தரிக்கவேண்டுமோ அவ்வளவு விஸ்தரித்துவிட்டான் கம்பன். இந்திரஜித்தைக் கம்பன் நடத்துகிற விதத்திலிருந்து ஒவ்வோரிடத்திலும் அவன்மீது நமக்கு அனுதாபம் பிறக்கிறது. இந்திரஜித்தினுடைய நாடகம் ஒரு இமர்சலம். அதனுடைய கொடு முடிகளும் அடிவாரங்களும் கணக்கற்றவை.

---

*கொற்றவை தழீஇய பொற்றோள்—வெற்றி மங்கை தழுவிய பொன்தோள். மாருதி—அனுமான்.

# நகைச் சுவை

கலைகள் ஒவ்வொன்றும் ஆனந்தத்திலிருந்து உண்டாகின்றது. கவியும் அப்படித்தான், கவிஞனுடைய உணர்ச்சி ஆனந்தமாகப் பொங்கி வருகிறபொழுது உருவத்தைப் பெறுகிறது. கவியில் எந்த உணர்ச்சி பாவம் உருவெடுப்பினும் அவைகளுக்கு ஆதாரமாக இருப்பது ஆனந்த உணர்ச்சி. ஆனந்த உணர்ச்சியிலிருந்து உண்டாவது நகைச் சுவை. கோபப்படவேண்டிய இடத்தில் கோபம், துக்கப்படவேண்டிய இடத்தில் துக்கம், சிரிக்கவேண்டிய இடத்தில் சிரிப்பு எல்லாவற்றையும் ஒரு பாத்திரம் வெளிப்படுத்தவேண்டும். எந்த ஒரு பண்பை எடுத்தாண்டாலும் பாத்திரத்தின் குறிக்கோளுக்குப் பக்க பலமாகவே அது அமையவேண்டும். உதாரணமாக இராமாயணத்தில் வரக்கூடிய முக்கியமான பாத்திரங்கள் எல்லாம் சோக பாத்திரங்களாகவே வளர்ந்து முடிகின்றன. ஆனாலும் அதே பாத்திரங்கள் எத்தனையோ இடங்களில் சந்தோஷமாகவும் கலகலப்பாகவும் நடந்துகொள்கின்றன. துன்ப உணர்ச்சியில் உழன்றுகொண்டிருக்கும் வேளைகளில்கூட பொருள் சூழ்நிலை இவைகளை உத்தேசித்து மிருதுவாகவும் நயமாகவும் நடந்துகொள்கின்றன. இந்த நடவடிக்கைகள் கிண்டலும் கேளிக்கையும் பரிணமித்து நம்மைக் குலுங்க வைக்கின்றன.

நகைச்சுவையாக ஒரு விஷயத்தைக் கையாளுவது என்பது வாள்மேல் நடப்பதற்குச் சமானம்.

நகைச்சுவை உண்டாகின்ற இடமும் அதனுடைய முடிவும் ஸ்திரமற்றவை. இதன் காரணமாக நகைச்சுவை பொறுப்பற்றுப் போவதோடு பல இடங்களில் கேவல மாகவும் அருவருப்பாகவும் மாறிவிடும். ஆகையினுல்தான் நகைச்சுவையை அதன் கீழான தன்மைக்கு வழுவ விடாமல் ஒரு பிரச்னையைச் சுட்டிக் காட்டவும், தீவிரமாக விளக்கவு மேகையாளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிக் கையாளுவது மிகவும் கடினமான செயல் என்றும் சொல்லப்படுகிறது.

நமது முன்னேர்கள் பக்தி, காதல், சோகம், வீரம் உள்ள ஒவ்வொரு கட்டங்களையும் ஹாஸ்ய ரசனை மூலமாக விளக்கி இருக்கிருர்கள். மாணிக்கவாசகர், முத்தொள்ளா யிரத்தார் முதலிய கவிஞர்களும் ஒரு சில சங்க காலப் பாடல்களும் இதற்கு எடுத்துக்காட்டு. தங்களைப்பற்றித் தாங்களே பாடும் சீட்டுக் கவிகளிலும் பிறரைத் தாக்கிப் பாடும் வசை கவிகளிலும் புலவர்கள் கையாண்ட நையாண்டிக்கு அளவே கிடையாது.

ஹாஸ்ய ரசனையை வெறும் அலங்காரத்திற்கு மாத்திர மில்லாமல் கலாமணங் கமழக் கையாண்டு வெற்றி கண்ட தும் கம்பர் ஒருவர்தான். அவருடைய ஹாஸ்ய ரசனைதான் கைக்கடங்காத பிரச்னைகளை வளைத்து மடக்கும். மனத்தி லுள்ள அருவருப்பையும் கேவலத்தையும் துடைத்தெறிந்து விட்டு அங்கே மங்களகரமாகக் கம்பீரத்தை ஏற்றி வைப் பதும் அவருடைய ஹாஸ்ய ரசனைதான்.

சோம்பலையும் சொக்கையும் முறித்துச் சிறிது சிரிக்க வைப்பது மாத்திரமல்ல, படிக்குந்தோறும் கௌரவத்தையும் பெருமையையும் கொடுப்பதுதான் கம்பருடைய ஹாஸ்ய ரசனை. இதற்கு உதாரணமாக ஒரு விஷயத்தைப் பார்ப்போம்.

இராமனிடத்தில் சூர்ப்பனகை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் எதை எதையோ சொல்லிவிட்டாள். தன்னுடைய அழகைப் பற்றியும் புனிதத்தைப்பற்றியும் தன்னுடைய சாம்ராஜ்ய விரிவைப்பற்றியும் அவள் எடுத்துரைத்தாள். தன்னைக் கைப்பிடியாக ஏற்றுக்கொண்டால் அவைகளெல்லாம் உனக்கு உடைமையாகும் என்றும் அறிவுறுத்தினள். எல்லாவற்றையுங் கேட்டுக் கேட்டுப் பதில் சொல்லிவந்த இராமன் மொத்தமாக ஒரு விஷயத்தைச் சொல்லுகிருன்.

"நாட்டை விட்டுக் காட்டுக்கு நான் அடி எடுத்து வைத்த வேளை ரொம்ப ரொம்ப நல்லவேளை. இவ்வளவு பாக்கியங்களும் நான் வீட்டிலிருந்தால் கிடைக்குமா? இராட்சதர்களுடைய கிருபா கடாட்சம், உன்னுடைய பேரழகு, உனக்கும் உன் அண்ணனுக்கும் உள்ள சாம்ராஜ்ய போகம் எல்லாமே நான் காட்டிற்கு வந்ததாலல்லவா கிடைத்தன? நான் காட்டிற்கு வந்த பாக்கியமே பாக்கியம்.

" நிருதர்தம் அருளும் பெற்றேன்
நின்னலம் பெற்றேன் நின்னொ(டு)
ஒருவரும் செல்வத் தியாண்டு,
உறையவும் பெற்றேன் ஒன்ருே
திருநகர் தீர்ந்த பின்னர்,
செய்தவம் பயந்த(து) என்னு
வரிசிலை வடித்த தோளான்
வாளெயி(று) இலங்க நக்கான் "

மேலே குறிப்பிட்ட பாடல் இராமனுடைய மனோநிலையைத் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டுகின்றது. அவளுடைய கள்ளத்தனத்தையும் குறுகுறுப்பையும் சகிக்க முடியாமல் கரைகடந்து வருகின்ற ராமனுடைய சிரிப்புணர்ச்சியை அடக்கமாகப் பிடித்துக் காட்டுகிறது.

"அயோத்தியை விட்டு நீங்கியதின் அருமை இப்பொழுதல்லவா தெரிகிறது? என்னுடைய தவப்பெருமை இப்பொழுதல்லவா தன்னுடைய வரிசைகளைக் கைநீட்டிக் கொடுக்கிறது. "திருநகர்தீர்ந்த பின்னர் செய்தவம் பயந்த தென்னு" என்கின்ற அடி ஹாஸ்ய ரசனையைப் பதட்டமில்லாமலும் பக்குவமாகவும் பிடித்துக் காட்டுகிறது. நிற்க, இந்த நேரத்தில் சீதை வந்து சேருகிருள், அவளுடைய அழகையும் தெய்வப் பொலிவையும் கண்டு அதிசயித்து விட்டாள் சூர்ப்பனகை. "இவள் இவனுக்கு மனைவியாக இருக்கவேண்டும், இல்லாவிட்டால் என்னைப்போல இடையிலே வந்து சேர்ந்தவளாக இருக்கவேண்டும். எப்படி இருந்தாலும் இவளைச் சொந்தமாக வைத்து அனுபவித்துக் கொண்டிருப்பவன் என்னையா கண்ணெடுத்துப் பார்க்கப் போகிருன், இருந்தாலும் இவனை நான் விடப்போவதில்லை" என்று எண்ணிக்கொண்டே இராமனிடம் கீழ்க்கண்டவாறு சொல்லுகிருள். அவளுடைய ஒவ்வொரு சொல்லும் நம்மை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறது.

"ஐயோ, இதோ வருகிருளே இவள் ஒரு அரக்கி. மாயையான காரியங்களையும் வஞ்சனைகளையும் செய்வதில் கைதேர்ந்தவள். உன்னை நோக்கி வருகின்றுளே என்று எனக்குப் பயமாக இருக்கிறது. இவளுடைய அலங்காரமெல்லாம் வெறும் பொய் வேஷம். இவளைப் பார்க்கப் பார்க்க என் குலை நடுங்குகிறது. இவளிடமிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

*"வருமிவள் மாயம் வல்லள் வஞ்சனை அரக்கி நெஞ்சம்*
*தெரிவிலள் தேருந் தன்னை சீரியோய் செயல் இற்(று)அன்ருல்*
*உருவிது மெய்யதன்ருல் ஊன் நுகர் வாழ்க்கையாளை*
*வெருவின னெய்திடாமல் விலக்குதி வீர என்ருள்"*

வஞ்சனையிலும் மாயையிலும் கை தேர்ந்தவளாகிய சூர்ப்பனகையே சீதையைப்பற்றி இப்படிச் சொல்லும்

பொழுது நம்மை அறியாமல் சிரித்துவிடுகிறோம். சூர்ப்ப னகையினுடைய மனக் கிலேசத்தையும் பரிதாபத்தையும் கம்பனுடைய ஹாஸ்ய பாணி துலக்கிக் காட்டுகிறது. விரச மாகவும் அருவருப்பாகவும் முடியக்கூடிய ஹாஸ்ய ரசனை கம்பனுடைய மேதைத்தன்மையால் கலைமணங் கமழு கிறது. வேறு வேறு வகைப்பட்ட இரண்டு பாத்திரங் களையும் மோதவிட்டு அவர்களுடைய மனச் சேஷ்டைகளை நிலைமைகளை ஒரு உருவப்படுத்திச் சித்தரிக்கின்றது. இந்தச் சித்தரிப்பே குறிப்பிட்ட பாத்திரங்களையும் நிகழ்ச்சி களையும் பூரணமாக விஸ்தரித்துக் காட்டும் சாதனமாகவும் மிளிருகிறது.

காதல் சித்திரத்தை, அதுவும் பொருந்தாத காதல் சித்திரத்தை விரசமில்லாதபடி இவ்வளவு லகுவாகவும் ஞாய உணர்ச்சியோடும் முடித்துவிட்டான். அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் நகைச் சுவையோடுதான் வெடித்து வருகிறது. அந்த நகைச் சுவைதான் பாத்திர வளர்ச்சி யையும் கதைப் போக்கையும் விஷயதத்துவத்தையும் ஒன்று போல இப்படி இழைத்துக் காட்டியது; இராமனைக் கண்டு தூண்டிவிடப்பட்ட சூர்ப்பனகையின் காதல் உணர்ச்சி அவிந்து விடவில்லை. அவன் எவ்வளவு மறுத்துரைத்தும் மூக்கறுபட்ட பின்புகூட அவளுடைய ஆசைத்தீ அவிந்துவிட வில்லை. கண்ணீரிலும் அழுகையிலும் அது மடைதிறந்து பொங்கி வந்தது. இராவணனிடத்து சூர்ப்பனகை தன் னுடைய மன நிலையைச் சவிஸ்தாரப்படுத்தினாள். ஓட்டோடு ஓட்டாக அவன்மீது தனக்குள்ள ஆசைகளை எல்லாம் வலியுறுத்தி வந்தாள். சீதையினுடைய பேரகில் மயங்கி விட்ட இராவணனுக்கு அது உரைக்கவில்லை. சீதை யினுடைய அழகிலும் ஆசையிலும் தலை கிறங்கி வருகின்ற இராவணனுக்கும் தன் குறிக்கோளுக்கும் ஒரு முத்தாய்ப்பு வைக்கின்றாள் சூர்ப்பனகை. "இந்த உலகமெல்லாம்

கைகூப்பித் தொழும்படியாக, உன் பெரும் பாக்கியங்களுக் கெல்லாம் ஒரு அர்த்தம் உண்டாகும்படியாக சிதையை நீ அடையவேண்டும். அவளை உனக்கு உடைமையாக்கிக் கொள்ளவேண்டும். (இந்த முயற்சியில் ஈடுபட்ட) என்னை அவமானப்படுத்திய இராமனை என்னிடத்தில் ஒப்புவித்து விடு. அதுதான் உன்னுடைய புயவலிமையை உலகத் தாருக்குத் தெளிவு படுத்தும்.

" மீன் கொண்டூடும் வேலை மேகலை உலகம் ஏத்த
தேன் கொண்டாடும் கூந்தல் சிற்றிடைச் சீதை என்னும்
மான் கொண்டூட நீஉன் வாள்வலி உலகம் ஏத்த
யான் கொண்டோடும் வண்ணம் இராமனை ந் தருதி
என்பால் "

இராவணனுடைய புயவலிமையை உலகத்தாருக்குத் தெளிவுபடுத்த இராமனை இவளிடத்தில் பிடித்துத் தர வேண்டுமாம். குண்டுக்கண்டமாக அவனைக் கட்டிப் போட்டு விதவிதமாக விளையாண்டு அவனுக்குரிய தண் டனைகளை எல்லாம் கொடுத்து விடுவாள். தமையனிடத் திலே தங்கை பேசுவதற்குத் தகுதியற்றது அவளுடைய சொற்கள். ஆனல் அதே சொற்களை விரசமில்லாமல் செதுக்கிக்கொண்டு வந்து அவளுடைய மனக் குமுறலின் பிரதிநிதியாக விளையாடவிட்டு விட்டான் கம்பன். கைக் கடங்காத மனவேதனையைச் சொல்லின் மூலமாக இப்படித் தேக்கி விடுவதும் ஹாஸ்யமாகிறது.

சூர்ப்பனகையின் செய்கையும் சொல்லும் நம்மிடம் இரக்க உணர்ச்சியையே சுரக்க வைக்கிறது. அருவருப் பையும் கேவலத்தையும் செதுக்கி விட்டது.

தங்கையின் வார்த்தைகளைக் கேட்டு விரகதாபம் அடைந்த இராவணன் புலம்புவதும், தங்கையை அழைத் துத் தன் உருவெளித் தோற்றங்களை எல்லாம் அவளிடம் காட்டி இதுதான் சீதையா என்று மயங்குவதும், எதையும்

பொறுக்க முடியாமல் அவன் மறுகுவதும் அவனுடைய மன வேதனையைப் பெருக்கிக் காட்டுகின்ற தெளிவான ஹாஸ்ய சித்திரங்கள்.

வீரம், சோகம் இவைகளின் உச்ச ஸ்தாயிகளிலே எல்லையற்ற பெருவீரர்களைச் சஞ்சரிக்க விடவேண்டும். பைத்தியக் காரத்தனத்தாலோ, பைத்தியக்காரத்தனம் என்று எண்ணுவதாலோ தன்னோடு மோதுகின்ற பாத்தி ரத்தின் போக்கை அலட்சியமாக்கி இதை உல்லாசப்படுத்த வேண்டும். பொறுக்க முடியாத ஆத்ம வேதனையில் விரிகின்ற இந்த உல்லாச உணர்ச்சிதான் ஹாஸ்ய ரசனை யின் உச்சிக்கட்டம். இந்த ஹாஸ்ய ரசனை வெற்றியடைந்து விட்டால் எவ்வளவு புனிதமாக இருக்குமோ அவ்வளவு கேவலமாகிவிடும் அது உருப் பெருது சிதறி விட்டால்.

தன்னை மறைவிலிருந்து அம்பு வீசியவன் இராமன் என்று தெரிந்தவுடன் வாலியின் உள்ளத்தில் ஆங்காரம் பொங்குகிறது. பிரபஞ்ச முழுவதுமே திசைமாறிச் சுழலு வதுபோல அவன் கண்ணைக் கட்டுகிறது. என்ன பிழை யைக்கண்டு தன்மீது இராமன் அம்பு எய்தான் என்பது அவனுக்கு விளங்கவில்லை, அவனுடைய ஆங்காரமெல்லாம் வில்லிலும் சொல்லிலும் ஒழுக்க நெறியை நையாண்டி பண்ணுகிறது. “ அரச நீதி என்பது வாழையடி வாழையாக உங்களால் பயிரிடப்பட்டு வந்த சிரஞ்சிவித்துவம். அந்த மறவாத ஞானத்தை எப்படியப்பா நீ தவற விட்டாய். மனைவி யைப் பறிக்கொடுத்தவனுக்கு இதுவெல்லாம் ஞாபக மிருக்கவா செய்யும்?

“ கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித்தோர்கட்(கு) எல்லாம்
ஓவியத்(து) எழுத ஒண்ணு
உருவத்தாய் உடைமைத் தன்றே

ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தின் அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்பு
திகைத்தனை போலும் செய்கை"

என்று கேட்கின்றான். ஆறித் தணியாத வெஞ்சினத் தீதான் இப்படி நகைச் சுவையாகக் கிளம்புகிறது. உயிருக் குயிரான உன்னுடைய தேவியே உன்னை விட்டுப் பிரிந்து போன பின்பு இந்த அரசியல் நீதி பிரிந்து விட்டதிலா ஆச்சரியமிருக்கிறது என்று வாலி கிண்டிக் காட்டும்பொழுது இராமனுடைய தவறுதலில் ஏற்பட்ட பரிதாபம் மாத்திரமல்ல, வாலியினுடைய உள்ளக் கொதிப்பு, ஏறி வருகிற உல்லாசமும் தெரிகிறது. வாலியினுடைய ஒவ்வொரு சொல்லும் நீறு பூத்த நெருப்பு. இராமனுடைய அம்பு நெஞ்சைத் துளைத்து இரத்தத்தைக் கக்குகிறது. வாலியோ அவனை "ஓவியத்தெழுத ஒண்ணா உருவத்தாய்" என்று அழைக்கிறான். தன்னுடைய ஒழுக்க நெறி, கைப்பிடித்த மனைவி என்கின்ற இரண்டு கண்களையும் பறிகொடுத்து விட்டாயே என்று குத்திக்காட்டி விட்டுத்தான், உன்னைப்போல (மேனி) அழகானவன் உண்டா என்று கேட்கின்றான் வாலி.

இராமனுடைய சந்தர்ப்ப வசமான தவறுதலைக் குத்திக் காட்டுவதற்கும் வாலியினுடைய பேராற்றலைச் சுட்டிக்காட்டுவதற்கும் இந்த ஹாஸ்யரசனை துலாம்பரமான ஒரு விளக்கு. உணர்ச்சியின் உச்சஸ்தாயியில் பீறிட்டு வருகின்ற இந்த ஹாஸ்ய ரசனை எள்ளளவு விலகிவிட்டால் போதும். அனல் கக்குகிற கோபமாக மாறிவிடும். இல்லாவிட்டால் தாங்க முடியாத துக்கத்தின் கண்ணீர் வெள்ளமாக மாறிவிடும்.

குரங்கு செய்த அனியாயத்தைத் தாங்க முடியாமல் முகம் சுழிக்கின்ற இராவணனுடைய போக்கு, சிரிப்பும் கும்மாளியுமாகத்தான் அடி எடுத்து வைக்கிறது. விபீஷணனுடைய இதோபதேசமும் மாற்ருருடைய வலிமையை

நிறுக்கின்ற அவனது மதிப்பீடும் இராவணனை ஒரு உலுக்கு உலுக்குகின்றன. அடிவயிற்றிலே கோபத்தை விதைத் தாலும் அண்ணனுடைய இருபது தோள்களையும் குலுக்கிச் சிரிப்பூட்ட வைக்கின்றது. தம்பியினுடைய சொற்களை உதா சீனம் பண்ணி ஆணித்தரமாகத் தெறித்து விழுகின்றன இராவணனுடைய சொற்கள். அது ஒவ்வொன்றுமே வீரத் திற்கு முத்திரை போட்டுக் காட்டும், கேளிக்கை வகைகள். இராவணனுடைய உயர்வையும் இராமனுடைய தாழ்வையும் ஒரு சேர சித்தரித்து விளையாடுகின்றது இராவணனுடைய பதில்.

நாக பாசக் கணை தவிடுபொடியாகி விட்டதைக் கேட்ட இராவணன் அது கருடனுல்தான் என்பதைக் கேட்ட வுடன் கைதட்டிப் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லும் உணர்ச்சியின் உச்ச வரம்புக்கு எல்லைக்கல். அந்த எல்லையற்ற எல்லையிலிருந்துதான் ஹாஸ்ய ரசனை சஞ்சாரம் பண்ணுகிறது.

இதே மாதிரியாக இராமாயணத்திலுள்ள ஒவ்வொரு பாத்திரமும் கிண்டலிலும் கேளிக்கையிலும் போட்டி போட்டு முன்னேறும். சிரிக்கவிட்டு வேடிக்கை பார்ப்ப தல்ல கம்பனுடைய ஹாஸ்ய ரசனை. பாத்திரங்களை ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்திற்கு முன்னேற்றிக் காட்டும் அது.

இராமாயணம் முழுவதுமே நகைச்சுவையாக நடமாடி வருவது அனுமான் ஒருவன் தான். எந்த விஷயத்தை யாரிடத்தில் வேண்டுமானுலும் அவன் உல்லாசமாகத் தான் வெளியிடுவான். அவ்வளவு அபூர்வப் பிறவி அனுமான்.

ஒரு கணத்தை ஒரு யுகமாகக் கழித்துக் கொண் டிருக்கிற அவசர நிலைமையிலும் சரி, நாலுபக்கமும் சரக் கூடம் கட்டித் தன் குரல் வளையை நெரிக்க வருபவனிடமும்

சரி தன்னுடைய பதிலைக் கிண்டலும் கேளிக்கையுமாகத் தான் அவன் வெளியிடுவான். இடத்திற்கும் தன்மைக்கும் தகுந்தாற்போலத் தானாக மாறிவரும் அவனுடைய ஹாஸ்யப் போக்கு.

விஷயத்தைப் பக்குவப் படுத்தி அதை உயர்வோடும் உணர்ச்சியோடும் வெளிப்படுத்துவதில் அனுமானுக்கு இணை வேறு யாருமே கிடையாது. பதட்டமில்லாமலும் தடையில்லாமலும் அடி எடுத்து வருவதுதான் அவனுடைய வாக்கு. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஹாஸ்ய ரசனை அடக்க ஒடுக்கமாகப் பொருந்தி இருக்கும். போர்க் களத்தின் மத்தியில் எதிரிகளின் மாயங்களைச் சந்தி சிரிக்கச் செய்யும் இவனுடைய பேச்சு. எதிராளிகளின் வீரங்களை எல்லாம் தலைகுனியச் செய்யும். குத்தலும் பக்கவெட்டும் நிறைந்த சொற்களின் மூலமாக எதிரிகளை இவன் சித்திர வதை செய்வதற்கு ஈடே கிடையாது.

ஒரு சில உதாரணங்களை இங்கே பார்ப்போம்.

இந்திரஜித்தைப் போர்க்களத்தில் வைத்து அவன் மானத்தை வாங்குகிற கட்டம்தான் அது. இந்திரஜித்தினுடைய திருட்டுத்தனங்களாலும் மாயப் போர்களாலும் அனுமானுக்கு நேர்ந்த தொல்லைகள்தான் அதிகம். நாக பாசம், பிரம்மாத்திரம் முதலிய துன்பங்களை எல்லாம் கடந்த பின்பு, சீதையைப்போல ஒரு பொய்யுருவம் செய்து தனக்கு முன்பே அதைச் சித்திரவதை செய்தான் இந்திரஜித்து. உண்மையைத் தெரியாத அனுமான் அழுது புரண்டான். கெஞ்சிக் கூத்தாடினான். ஒன்றும் நடக்கவில்லை. சீதையைக் கொன்று விட்டுப் பரதன்மேல் படையெடுத்துப் போவதாகவும் சொல்லி மறைந்து போனான் இந்திரஜித்து. பரதனையும் சுற்றத்தார்களையும் தாய்மார்களைக்கூட வெட்டி வீழ்த்தப் போவதாக அவன் சொல்லிப்போனான். அனு

மானுடைய துக்கம் எல்லே கடந்து விட்டது. அழுது புரண்டு வந்து இராமனிடத்தில் விஷயத்தைச் சொன்னுன்.

எல்லோருமே கலங்கி விட்டார்கள். விபீஷணன் மாத்திரம் இந்திரஜித்தினுடைய மாயங்களேச் சொல்லித் தேற்றினுன். மாற்றுருவங்கொண்டு இலங்கை சென்று திரும்பி வந்த விபீடணன் சீதை முன்போல அங்கு இருக்கின்ருள் என்பதைத் தெரிவித்தான். இந்திரஜித்து சொன்னவை அனைத்தும் வஞ்சனை என்பதை நிச்சயப் படுத்தினுன். ஆனுல் ஏதோ ஒரு காரியத்தில் ஈடுபடவே இந்த வஞ்சனைகளே எல்லாம் விதித்திருக்கிருன் என்றும் அவனேத் தேடிச்சென்று போர் புரிவதே நலம் என்றும் இல்லாவிட்டால் அவன் மூலம் ஆபத்து வருவது திண்ணம் என்றும் விபீஷணன் சொல்லி முடித்தான்.

விபீஷணன் பின்பு அனுமனும் இலக்குமணனும் இந்திர ஜித்தைத் தேடிப் போகிருர்கள்.

யாககுண்டலங்களுக்கு மத்தியில் மந்திரம் ஓதிக் கொண்டு நிற்கின்ருன் இந்திரஜித்து. அனுமானுக்கு மேகநாதனைக் கண்டவுடன் சிரிப்பைத் தாங்க முடியவில்லே. அவனுடைய லீலா விநோதங்கள் எல்லாம் அலேஅலேயாகக் கிளம்பி விடுகிறது. இந்திரஜித்தின் கொடுமைகளே அனுபவித்து அனுபவித்துக் காய்த்துப்போன அனுமனுடைய நெஞ்சு அவனேப் பரிவாக அழைக்கிறது. இந்திரஜித்தின் கேவலமான தன்மைகளே அனுமனுடைய ஒவ்வொரு சொல்லும் அம்பலப்படுத்துகிறது. குத்தலும் பக்கவெட்டும் பீறிட்டு வந்து இந்திரஜித்தை மர்மத்தில் தாக்குகிறது.

அனுமான் சொல்லுகிருன் :

“அப்பா, இந்திரஜித்து! உன்னே மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். என்னுடைய ஒரு வார்த்தைக்குச் செவி சாய்த்தருள வேண்டும். சீதையை வெட்டி வீழ்த்து

வதாகப் பயமுறுத்தினயே அந்தக் காரியம் பூர்த்தியாகி விட்டதா? தந்தை அனுப்பிய சேனையோடு அயோத்தி நோக்கிப் புறப்பட்டாயே அந்தக் காரியம் முடிந்து விட்டதா? பொய்யும் வஞ்சனையும் ஒன்று இரண்டா, இலட்சோப லட்சம்!

" நானுனை இரந்து கூறும்
நயமொழி ஒன்று கேளாய்
சானகி தன்னை வாளால்
தடிந்ததோ தனதன் றந்த
மானமேற் சேனை யோடும்
வடதிசை நோக்கி மீது
போனதோ கோடி கோடி
வஞ்சமும் பொய்யும் வல்லாய் "

பிரளயகாலச் சமுத்திரம்போலச் சக்கர வியூகம் கட்டிப் பரதன் உன்னை எதிர்த்திருப்பானே. அங்கே நடந்த அதிசயங்கள் என்னென்னப்பா?

பரதனுடைய வில்லோசை ரீங்காரித்திருக்குமே. அதை நீ கேட்கவில்லையா? பரதனையும் சுற்றத்தார்களையும் வென்று திரும்பியது எப்பொழுது? வேள்விக்கு ஆயத்தம் செய்தது எப்பொழுது? எல்லாம் சத்காரியங்களாகத்தான் நடக்கின்றன?

" தடந்திரைப் பரவை என்ன
சக்கர வியூகம் புக்கு
கிடந்தது கண்ட துண்டோ
நாணொலி கேட்டி லாயோ
தொடர்ந்து போய் அயோத்திதன்னை
கிளையொடுந் துணிய நூறி
நடந்ததெப் பொழுது வேள்வி
முடிந்ததே கருமம் நன்றே "

"பரதனிடம் சென்று உன் வில் வித்தையைக் காட்டி இருக்கிருய். அதுவும் வெற்றி மாலை சூடித் திரும்பிவிட்டாய். என்ன அதிசயமடா, அதிசயம். விரிந்து பரந்துள்ள இவ்வுலக முழுவதையும் பரதன் பாதுகாக்கிருனும். அவனுடைய தோளின் பரப்பை நாகேந்திரனுடைய சிரவணத்திற்கு ஒப்புவமை சொல்லுகிருர்கள். எல்லாம் அதிசயந்தான்."

ஏந்தகன் ஞால மெல்லாம்
இனிதுறைந் தியற்கை தாங்கும்
பாந்தளிற் பெரிய திண்டோள்
பரதனைப் பழியிற் றீர்ந்த
வேந்தனைக் கண்டு நீநின்
வில்வலங் காட்டி மீண்டு
போந்ததோ வுயிருங் கொண்டே
யாயினும் புதுமை யன்றே

"அது சரி போகட்டும். அங்கு சத்துருக்கன் என்ற ஒரு சிங்கக் குட்டி உண்டே, அவனை நீ சந்தித்தாயா? தசரத னுடைய கடைசிக் குமாரன் அவன்.

அம்பரத் தமைந்த வல்வில்
சம்பரன் ஆவி வாங்கி
உம்பருக்(கு) உதவி செய்த
வொருவனுக்(கு) உதயஞ் செய்த
நம்பியை முதல்வ ரான
மூவர்க்கு நால்வ ரான
தம்பியைக் கண்டு நின்றன்
தனுவலங் காட்டிற் றுண்டோ

"அதெல்லாம் போகட்டும். நடந்ததைப் பேசுவதால் ஆவது ஒன்றுமில்லை. உன்னுடைய வஞ்சனைகளுக்கு இன்று முற்றுப்புள்ளி வைத்து விட்டோம். தீப்பொறி சிந்து கின்ற அம்புகள் உடல் முழுவதும் குறுக்கும் நெடுக்குமாகச்

சொருக, காது வழியாகவும் கண் வழியாகவும் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு இலங்கையில் ஒளிகின்ற உன்னால் இனி யாகத்தீ வளர்க்க முடியாது.

"நாக பாசங்களானாலும் சரி, தேவாதி தேவர்களின் முத்திரைபோட்ட ரகஸ்யப் படைகளானாலும் சரி, எதைப் பிரயோகிக்க விரும்பினாலும் தங்களுக்குத் தடையே கிடையாது. தங்களுடைய படைக்கலங்களுக்கு நாங்கள் ஒதுங்கி வாழ்ந்ததெல்லாம் போதும். போர்க்களத்தின் மத்தியில் கூற்றுவன் வந்து நிற்கிறான்.

"உங்களுடைய தவ வலிமைகளேயோ கைதேர்ந்த வஞ்சனைகளேயோ நாங்கள் எப்பொழுதும் குறைத்து மதிப்பிட்டது கிடையாது; ஆனால் எமனுடைய வரவை யாரால் தடுக்க முடியும்?

தீயொத்த வயிர வாளி
உடலுறச் சிவந்த சோரி
காயொத்த செவியி னூடுங்
வாயினுங் கண்க ளூடும்
பாயப்போ யிலங்கை புக்கு
வஞ்சனை பரப்பச் செய்யும்
மாயப்போ ராற்ற லெல்லா
இன்றொடு மடியு மன்றே

பாசமோ மலரின் மேலான்
பெரும்படைக் கலமோ பண்டை
ஈசனார் படையோ மாயோன்
நேமியோ யாதோ விண்ணும்
வீசநீர் விரும்பு கின்றீர்
அதற்குநாம் வெருவிச் சாலக்
கூசினேம் போதும் போதுங்
கூற்றினார் குறுக வந்தார்

வரங்கணீர் உடைய வாறும்
மாயங்கள் வல்ல வாறும்
பரங்கொள்வான் வரிவிற் றெய்வப்
படைக்கலம் படைத்த வாறும்
உரங்களும் நின்ற தன்றே
யும்மைநா முயிரி னேடும்
சிரங்களைத் துணித்து மென்னக்
கண்டது திறம்பி னுமோ

"சிவன், திருமால், பிரமன் யார் வந்து உனக்கு உதவி செய்தாலும் சரி, யாருடைய மறைவில் நீ ஒதுங்கி நின்றாலும் சரி மரணத்தை உன்னால் விலக்க முடியாது. உனது இடக் கண்களும் தோள்களும் துடிக்கின்றனவா, இல்லையா? அதுவே போதும்.

"உன்னைக் கொன்று தீர்ப்பதாகச் சபதம் எடுத்துக் கொண்ட இலக்குமணன் அதோ காத்து நிற்கின்றான். உன் சேனைகளை எல்லாம் சின்னா பின்னமாக்கி உன்னை எதிர் நோக்கி நிற்கின்றான். அவனுடைய வில்லின் டமாரம் உன்னுடைய இந்த யாக வேள்விக்கு தேவ கீதமாக விளங்கும்!

"இன்னுமா நீ நேரத்தைப் போக்குகிறாய்? இலக்கு மணனுடைய வில்லோசை உன்னை வருந்தி அழைக்கிறது. தேவர்கள் எல்லாம் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு காத்துக் கிடக்கிறார்கள். ஒரு கணநேரம் இப்பொழுது ஒரு யுகம் மாதிரி அப்பா.

விடந்துடிக் கின்ற கண்டத்
தண்ணலும் விரிஞ்சன் தானும்
படந்துடிக் கின்ற நாகப்
பாற்கடற் பள்ளி யானும்
சடந்துடிக் கிலராய் வந்து
தாங்கினுஞ் சாத றிண்ணம்

இடந்துடிக் கின்ற துண்டே
இருத்திரோ வியம்பு வீரே

இந்திரஜித்தின் காரியங்களை எல்லாம் தாங்க முடியாமல் மயங்கி உளைந்த அனுமான்தான் கிண்டலும் கேளிக்கையும் கொண்டு விளையாடுவது.

நினைத்த மாத்திரத்தில் மண்டை வெடிபட்டுப் போகின்ற நிகழ்ச்சி, அந்தகாரமான சூழ்நிலை. இதற்கு மத்தியில் அனுமானுடைய வார்த்தைகள் தெளிவையும் உல்லாசத்தையும் அள்ளி எறிகின்றன.

இந்திரஜித்தினுடைய ஒவ்வொரு பொய்யையும் சவிஸ்தாரமாக அவனிடமே சொல்லி மானத்தை வாங்குவதும், அவனை நடைப்பிணமாகவே பாவித்துப் போருக்கு அழைப்பதும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்திரஜித்தினுடைய ஒவ்வொரு காரியத்தையும் அனுமான் குத்திக் காட்டுவதும் நாடக இலக்கியத்திலேயே ஒரு புதுசு.

இந்திரஜித்தினுடைய வஞ்சனைகளையும் ஏமாத்துகளையும் எத்தனை பாணியில்தான் அவன் குத்திக் காட்டுகிருன். யாக குண்டங்களின் மறைவில் ஒண்டுகின்ற அவனை எவ்வளவு பரிவாகப் போருக்கு அழைக்கிருன். ஒவ்வொன்றிலும் ஒரு புதுமை.

## பக்தி

மகாவிஷ்ணு ஒரு காலத்தில் நாரதரிடம் கடன் பட்டிருந்தார். கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஒரு தவணையும் குறிப்பிட்டிருந்தார். தவணையில் கடனைக் கொடுக்க முடியாவிட்டால் தன்னையே கொடுத்து விடுவ தாகவும் வாக்களித்திருந்தார். கடன் தொகையோ மகா விஷ்ணுவின் எடைக்கு எடையான தங்கக்கட்டி.

தவணைக்காலமும் வந்து விட்டது. ஆனால் விஷ்ணு பெருமானிடம் தங்கக் கட்டிதான் கிடையாது. நாரதரோ கணத்திற்குக் கணம் அரட்டுகிறார். விஷ்ணுவை கூட்டிக் கொண்டு போய்விடுவதாக வேறு பயமுறுத்துகிறார்.

பார்த்தாள் சத்தியபாமை. விஷ்ணுவைத் தராசின் ஒரு தட்டில் உட்கார வைத்துத் தன் நகை முழுவதையும் மறு தட்டில் எடுத்து வைத்தாள். தராசின் முள்ளோ இம்மி அளவேனும் அசையவில்லை.

அந்த வேளை ருக்மணிதேவி அங்கு வந்து சேர்ந்தாள். விஷயத்தை விசாரித்தாள். விஷ்ணுவை ஒருமுறை வலமாக வந்து வணங்கிவிட்டு ஒரு துளசி இலையை நகைத்தட்டில் வைத்தாள் அவ்வளவுதான்.

நகைத் தட்டு தரையையே தொட்டு விட்டது. விஷ்ணு உட்கார்ந்திருந்த தட்டோ அந்தரத்தில் தொங்கியது.

புராணக் கதை இப்படி முடிகிறது. பக்தியின் தன்மை யையும் பெருமையையும் தெளிவாகச் சொல்லுகிறது.

தற்காலத்தில் பக்தியை வளர்ப்பதற்காக எத்தனையோ மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. ஆனால் மேடைக்கு உள்ளும் வெளியும் என்ன பேசிக்கொள்கிறார்கள் ?

நேற்றுச் சாப்பிட்ட உணவு வகைகள். இன்றையச் சமையலின் தரம். பிரயாணத்தில் ஏற்பட்ட சிரமபரிகாரங்கள். வாகனாதிகளின் தாரதம்மியங்கள் இவைகளைப் பற்றிய விமரிசனங்கள்தான் பிரமாதமாக இருக்கும்.

முந்தின வருடத்து லாப நஷ்டங்களும், இவ்வருட வியாபாரத்தின் சாதகபாதகங்களும் மெள்ள மெள்ள முணுமுணுத்துக் கடைசியில் அம்பலம் ஏறுவதும் உண்டு.

சும்மா இருக்கிற வேளைகளில் கூட நம்முடைய சின்னஞ்சிறு இதயங்கள் இறைவனை நினைத்து ஏங்குகின்றன. ஆனால் மகாநாட்டிற்கு முன்னும் பின்னும் இறைவனை அடியோடு மறந்து விடுகின்றன. வேண்டாத காரியங்களில் விழுந்து விழுந்து அவை உழலச் செய்கின்றன.

பக்தி மகாநாட்டில் நல்ல மனிதர்களுக்குப் பணச் செலவும் அப்பாவிகளுக்குச் சிரமமுந்தான் மிச்சம்.

வெள்ளிப் பணத்தின் சலசலப்பு ஒலிக்கோ கரன்ஸி நோட்டின் சொரசொரப்பு நாதத்திற்கோ இறைவன் கட்டுப்படுவது கிடையாது. பணத்தைக் கொடுத்து இறைவனை விலைக்கு வாங்க முடியாது. சஞ்சலமற்ற இதயத்தைக் கொடுத்தால்தான் அவனை வாங்க முடியும்.

இதை அப்பர் சுவாமிகளும் தெரிந்திருக்கிறார். தெளிவாகவே தெரிந்திருக்கிறார். அவருடைய தெளிந்த அனுபவம் தமிழ்ப் பாஷையின் கவிதையாக வெளிவருகிறது. எப்படி ?

கரவாடும் மனத்தகத்தே
கலவாதானைக்—கரவிலார்பால்

விரவாடும் பெருமானை
விடைஏறும் வித்தகனை "

வஞ்சனையும் சஞ்சலமும் உள்ள இதயம் எவ்வளவு தான் இறைவனை வேண்டி நின்றாலும், இறைவன் அதைக் காலால் எட்டி உதைத்துவிடுவான். ஆனால் அமைதியான இதயமோ இறைவனைத் தேடாமலிருந்தாலும் சரிதான், இறைவனே அதைத் தேடிவந்து கலந்துகொள்வான் என்று அப்பர் சுவாமிகள் சொல்லுகிறார்.

அவர் மேலும் சொல்லுகிறார்:

இறைவனுடைய கையில் அணையாத ஒரு ஜோதி உண்டு. அந்த ஜோதியின் மூலம் நல்ல இதயத்தைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்கு ஒரே ஆனந்தந்தான். சடாபரமும், அதிலுள்ள பாம்பு (அரவு)ம் ஆடும்படியாக அவன் கூத்தாடுவான். கூத்தாடிக் கூத்தாடி அந்த இதயத்திற்குள் பக்குவமாக நுழைந்து கலந்துவிடுவான்.

பிறகு அவனை அந்த இடத்தைவிட்டுக் கிளப்பவே முடியாது.

அரவாடச் சடைதாழ
அங்கையில் அனல்ஏந்தி
இரவாடும் பெருமானை
என்மனத்தே வைத்தேனே

இராவடும் பெருமான்—நல்ல இதயத்தை இறைவனே நேரில் வந்து பிச்சை கேட்பான். நிரந்தரமாகத் தங்கத்தான்.

கரவாடும் மனத்தகத்தே
கலவாதானைக் கரவிலார்பால்
விரவாடும் பெருமானை
விடைஏறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
அங்கையினில் அனலேந்தி

இரவாடும் பெருமானை
என்மனத்தே வைத்தேனே

அப்பர் சுவாமிகளுடைய பாட்டில் உண்மையும் தெளிவும் பிரகாசமாகத் தெரிகிறது.

தெளிவு ஊறி ஊறி வலுவடைந்துவிட்டால் உறுதி தானாகவே வந்து விடும்.

மனிதர்களுடைய குணாதிசயத்தை—அதிலும் ஏதென்ஸ் நகரத்துக் கனவான்களுடைய—இயல்பைத் தெளிவாகத் தெரிந்திருந்த காரணத்தால்தான் சாக்ரட்டீஸால் நஞ்சைக் குடித்துவிட்டுக் கோப்பையை அமைதியாகக் கீழே வைக்க முடிந்தது.

நாமும் சாக்ரட்டீஸை உறுதியான உள்ளம் படைத்தவர் என்று புகழுகிறோம்.

மகமது நபியின் இரண்டாவது மனைவி நபியிடம் கீழ்க்கண்டவாறு கேட்டாள்:

"என்னை நீங்கள் மனப்பூர்வமாக நேசிக்கிறீர்களா?"

நபி—"இல்லை. நான் மனப்பூர்வமாக நேசிப்பது என் முதல் மனைவியைத்தான். காரணம் அவளால்தான் நான் சொல்கிற ஒவ்வொரு உண்மையையும் ஏற்றுக் கொள்ள முடிந்தது."

இந்தவிதமாக நபி சொல்லியதற்கு எவ்வளவு துணிவு இருந்திருக்க வேண்டும். அவ்வளவு துணிவும் உள்ளத்தின் தெளிவிலிருந்து பிறந்ததுதான்.

நம்முடைய அடியார்களுக்கோ தெளிவில் குறைவில்லை, துணிவிலும் குறைவில்லை.

காரைக்கால் அம்மையாருடைய பாடலைப் பார்த்தாலே போதும். துணிவென்பதற்கே பக்திதான் ஆதி வித்தோ என்று சொல்ல நேரிடும்.

அவர் சொல்கிறுர் :

ஒன்றே நினைந்திருந்தேன்
ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன உள்ளத்தின்
உள்ளடைத்தேன்......

அடடா! அந்த ஒன்றுதான் எது? இதோ,

......ஒன்றே (அக்)
கங்கையான திங்கள்க்
கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கைஆன்கு ஆளாம்அது

"நான் என்பதும் எனது என்பதும் உண்மையில் அவனும் அவனுடையதுமே தான். இதை மிச்சம் சொச்சம் இல்லாமல் தெரிந்து கொண்டேன். தெரிந்துகொண்டு என்னையே இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டேன். இது ஒன்றைத்தான் என்னுல் செய்ய முடிந்தது" என்று காரைக்கால் அம்மையார் சொல்லும் பொழுது நமக்கே பக்தி உண்டாகி விடுகிறது.

பக்தி துணிவை எப்படி வெளியிடுகிறது. அந்தத் துணிவிற்குத் தமிழ் எப்படி வடிவம் கொடுக்கிறது என்பது கவியில் கிடக்கிறது.

உண்மை புலப்படப் புலப்படத் தெளிவு பிறக்கும். தெளிவு பிறக்கப் பிறக்கத் துணிவு ஏற்படும். தெளிவும் துணிவும் இணைந்து கலந்து விட்டால் இதயம் நிறைய ஆனந்தம் பொங்கி வழிந்துவிடும். ஆனந்தம் ஏற்பட்டு விட்டால் பேதா பேதம் மறைந்து விடும். எல்லாம் அவனே, அவன் செயலே என்கின்ற இன்பப் பெருக்கு இதயத்தை முக்கி முக்கிக் கரைத்துவிடும்.

பட்டினத்து அடிகள் இந்த ஆனந்தத்தை எப்படி வெளியிடுகிருர் என்று பார்ப்போம்.

"நம்முடைய உடம்பைப்பற்றிச் சொல்ல வேண்டுமானுல் ஆருத புண் என்றுதான் குறிப்பிட வேண்டும். மூடமுடியாத ஒன்பது பொந்துகளோடு கூடிய இந்தப் புண்ணிலே (உடலிலே) உள்ள கட்டிகளுக்கும் கழலைகளுக்கும் எண்ணிக்கை உண்டா, இதை ஆற்றுவதற்குத் தான் சஞ்சீவி உண்டா?

ஒன்றே ஒன்று உண்டு. அதைப் பட்டினத்தாரே சொல்லட்டும்,

ஒடுவிழுந்து சீழ்ப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்து நானறிந்து கொண்டேன்—கடுஅருந்தும்
தேவாதி தேவன் திருஒற்றி ஊர்த்தெருவில்
போவார் அடியின் பொடி

'இறைவனை நாடிச் செல்லும் அடியவர்களின் பாத தூளியே போதும் முத்தியைத் தருவதற்கு. பட்டினத்தாருடைய இதயம் நமக்கு நன்ருகத் தெரிகிறது. அந்த இதயத்தில் பாகுபாடே கிடையாது. ஆனுல் பக்தி, தெளிவு, உறுதி இம்மூன்றும் வேண்டிய மட்டும் இருக்கிறது. அவர் இதயத்தில் உள்ள ஆனந்தமோ நம்முடைய நாவிற்கு வந்து விடுகிறது.

## 2

ரசிகமணி டி. கே சி. யிடம் மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் உட்கார்ந்தால் போதும். இலக்கியம், கலை,

---

ஒடு-கட்டி. கடுஅருந்தும்-விஷத்தை அள்ளி உண்ட, போவார்-அடியவர்கள், பொடி-புழுதி.

தத்துவம், விஞ்ஞானம், சமூகம் முதலிய ஒவ்வொரு துறைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். இதுவரை கண்டும் கேட்டும் இராத பல அதிசயங்களையும் நுட்பங்களையும் ஒவ்வொரு துறைகளிலிருந்தும் அவர்கள் எடுத்துக் கொடுப்பார்கள்.

உண்மை என்பது சிறிய விஷயத்திலிருந்து பெரிய விஷயம் வரை ஒவ்வொரு துறைகளிலும் நம்முடைய இதயத்தைப் பொறுத்தவரை தலைகீழாகக் கிடக்கிறது. அதைப் பக்குவமாகவும் ஜாக்கிரதையாகவும் திருப்பிப் போடுவதுதான் ரசிகமணியின் தொழில். தாங்கமுடியாத வியப்பும் மகத்துவமும் நிறைந்த இந்தக் காரியத்தை ரசிகமணியின் எளிமையான ஆனல் உறுதிசெறிந்த வார்த்தைகள் எப்படியோ சாதித்து விடுகின்றன.

ரசிகமணி சமயத்தைப்பற்றியும் அடிக்கடி சொல்வார்கள்.

அவர்கள் சமயத்தைப்பற்றி எடுத்துச் சொல்வது,

"ஒரு தங்கக் கட்டி, ஒரு வெள்ளிக் கட்டி, ஒரு இரும்புத் துண்டு இவைகளைச் சோதித்துப் பார்த்தால் அணு என்பதுதான் மிஞ்சும். அணுவில் தங்க அணு, வெள்ளி அணு, இரும்பு அணு என்கின்ற வித்தியாசமே கிடையாது. ஒன்று இரண்டு மூன்று முதலிய எண்ணிக்கை வேறுபாடு அணுச் சேர்க்கையிலும் ஏற்பட்டுப் பொருள்களை வடிவத்திலும் குணத்திலும் வித்தியாசப்படுத்துகின்றன. உதாரணமாக, தங்கத்தின் அணுச்சேர்க்கையிலும் வெள்ளியின் அணுச் சேர்க்கையிலும் எண்ணிக்கை வேறுபட்டது தான். ஆனல் தங்கத்தின் அணுவும் வெள்ளியின் அணுவும் வேறுபட்டது அல்ல.

"அணுக்களைப் பிரித்துப் பார்த்தால் கட்டுக்கடங்காத சக்தியும்-ஜோதியும், இயக்கமும்தான் இருக்கின்றது. எல்

லாம், ஒரு சக்தியே. விவரித்துச் சொல்ல முடியாத இந்த மாபெரும் சக்தியே கோடான கோடி அண்டங்களில் உள்ள கோடான கோடி சராசரங்களையும் விளைவித்தது.

"எங்கும் நிறைந்த சக்தியை என்ன என்று சொல்வது. இறைவன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் ஒவ்வொரு பொருளிலும் இறைவன் நிறைந்திருக்கிறன் என்று சொல்லக்கூடாது. ஒவ்வொரு பொருளுமே இறைவன்தான். இறைவனைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது."

இந்தவிதமாக ரசிகமணி சமயத்தைப்பற்றிச் சொல்வார்கள்.

"உண்மையின் ஆணிவேராக உள்ள இந்தத் தத்துவத்தை இப்படி இயல்பாகச் சொல்லத் தமிழ்தான் ஏற்றது" என்றும் அவர்கள் சொல்வார்கள்.

அவர்கள் மேலும் சொல்வார்கள். இறைவனுடைய பேருள்ளத்தில் ஆனந்தக் கனவுகள் உண்டாகிக்கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு கனவும் ஒவ்வொரு தத்துவமாக (பொருள்) வடிவெடுத்து வருகின்றது. அவைகளின் தணியாத வருகைதான் நம்முடைய கண்களுக்குத் தோற்றம், இருப்பு, மறைவு என்று தெரிகின்றன. ஒவ்வொரு செயலும் நம்முடைய கண்களைக் கட்டி மறைக்கின்ற (இறைவனுடைய) செப்படி வித்தைதான்"

ரசிகமணி இப்படிச் சொல்லிவிட்டு,

*"*தில்லை மூதூர் ஆடிய திருஅடி*
*பல்லுயிர் தோறும் பயின்றனன் ஆகி*"

என்ற மாணிக்கவாசகருடைய பாடலையும் பாடிக் காட்டுவார்கள். உண்மையும் அதனால் ஏற்படுகிற பக்தியும்

---

திருவடி-இறைவனுடைய பேரருள்.

சேர்ந்து நம்மை உருக்கிவிடும். எல்லாம் மூன்று அல்லது நான்கு நிமிடங்களில்தான்.

ரசிகமணி சொல்வதிலிருந்துதான் சமயம் லகுவானது, தெளிவானது என்று தெரியவருகிறது.

சாக்ரட்டீஸின் கொள்கை உச்சி முதல் உள்ளங்கால் வரைத் தத்துவத்தால் பின்னப்பட்டது. ஆனாலும் அது ஒரு சமயமாக இயங்க முடியவில்லை. ஏசுநாதருடைய உபதேசங்களோ தத்துவத்தை அப்புறப்படுத்தி விட்டுக் கவர்ச்சிக்கரமான மானிட நீதியை மாத்திரம் எடுத்துச் சொல்லியது. சைவ சமயமோ விஞ்ஞான பூர்வமான உண்மையை உள்ளடக்கமாகக் கொண்டது. மானிட சமூகத்தின் நிரந்தரமான ஆனந்தத்தைக் குறிக்கோளாகக் கொண்டது.

கோவில்களிலுள்ள கண்டாமணிகளும், நந்தா விளக்குகளும் எப்படியோ பக்தியை உண்டாக்கி விடுகின்றன. கோபுரங்களோ நம்முடைய சிறுமையை நமக்குக் கௌரவமாக எடுத்துக் காட்டுகின்றன.

நாதசுரமோ நம்முடைய ஆணவத்தை நாம் கழற்றி விட்டால் நமக்கும் இறைவனுக்கும் தூரமே இல்லை என்பதை மௌனமாக விளக்கிக் காட்டுகிறது. கோலப் பொடிகளும் மதில் சுவரிலே போடப்பட்டுள்ள காவிப்பட்டைகளும் மானிட வாழ்க்கையிலே விசிறி எறியப்பட்டுள்ள அழகையும் ஆனந்தத்தையும் திரட்டிக் கொடுக்கின்றன.

மதில் சுவரின் உச்சிமுதல் தேவாலயத்தின் ஒவ்வொரு இடத்திலும் கம்பீரமாக வீற்றிருக்கும் நந்தியோ (காளை) நம்முடைய வாழ்க்கையும் இறைவனுடைய வாழ்க்கையும் வெவ்வேறு வகைப்பட்டதல்ல என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

தேவாலயத்திலுள்ள ஒவ்வொரு அம்சத்திலும் மனிதச் செயலின் நுட்பத்தையும் வேலைப்பாட்டையும் கண்டு

கொள்ளலாம். அதேபோல மனித வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் சமயத்தின் புனிதமான அழகையும் பெருமையையும் புரிந்து கொள்ளலாம்.

சமயம் என்பது மானிட ஜீவன்களும் இறைவனும் ஒன்று சேர்ந்து ஆனந்தப்பட ஏற்பட்ட அரிய சாதனம். வாழ்க்கையும் சமயமும் இந்தவிதமாக இணைந்து பிணைந்த காரணமாகத்தான் ஜீவனும் ஆனந்தமும் நிலைத்து நிற்கின்றது.

கவிதைகளோ சமயத்திற்கு அழியாத புகழையும் பெருமையையும் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன.

கவிதைகளை நம்மால் உணர முடிகிறபோது சமயமே கவிதைக்காக ஏற்பட்டதுதானோ என்று சொல்லத் தோன்றுகிறது.

அதனால்தான் எதற்கும் கட்டுப்படாத இறைவன் கவிதைக்கு மாத்திரம் கட்டுப்பட்டுக் கிடக்கிறான் என்று முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

கவிதையின் மூலமாகத்தான் உண்மையான சமய ஞானத்தைப் பெறமுடியும் என்று சொன்னால் குற்றம் இல்லை.

இறைவனே கவிதைக்கு உள்ளே ஒளியும் பொழுது தான் மகிமையையும் விஸ்வரூபத்தையும் பெற்றுக் கொள்கிறான் என்று சொன்னாலும் குற்றம் இல்லை. மாணிக்க வாசகருடைய பாடல்களில் ஒன்றைப் பார்க்கலாம்.

மாணிக்கவாசகர் நான் எனது என்கின்ற மயக்கத்திலிருந்து விடுதலை பெற்றவர். அதாவது இறைவனோடு கலந்த நிலையில் உள்ளவர். அப்படியானால் அவருடைய ஆனந்தத்திற்கு வரம்பு இருக்க முடியுமா ?

கயல் மாண்ட கண்ணிபங்கன்
கலந்(து) என்னை ஆண்டலுமே
அயல் மாண்(டு) அருவினைச்சுற்
றமும் மாண்(டு) அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள
வாசகம் மாண்(டு) என்னுடைய
செயல் மாண்ட ஆபாடித்
தெள்ளேணம் கொட்டேமோ

கயல் மாண்ட கண்ணி பங்கன்-உமாதேவியின் கண்கள் வாளை மீனைப்போல இப்படியும் அப்படியும் பிறழக் கூடியவை. அந்த உமாதேவி (சக்தி)யைத் தன்னுள் ஒரு பகுதியாக அடக்கிக் கொண்டவர் சிவபெருமான். அந்த இறைவன் என்னை எப்படியோ கூடிக்குலாவி விட்டான். அவ்வளவுதான்.

அயல் மாண்டு-என்னைச் சுற்றி ஒரு சூழ் நிலையும் அதனால் ஏற்படும் பாதிப்பும் இருந்ததே அது ஒழிந்து விட்டது.

அருவினைச் சுற்றமும் மாண்டு-நல்வினை தீவினை என்ற செயல்களும் அதன் விளைவுகளும் என்னை விட்டு விலகி விட்டன. அவனியின் மேல் மயல் மாண்டு-இந்தப் பிரபஞ்ச நிகழ்ச்சிகளில் இயல்பாக உள்ள ஆசையும் மயக்கமும் எப்படியோ என்னை விட்டு நழுவி விட்டன.

கடைசியில் மிஞ்சியது வார்த்தைதான் அதுவும் நின்று விட்டது. என்னுடைய செயல் என்ற பேதமை உணர்ச்சி ஒன்று இருந்ததே அதுவும் போய்விட்டது. அடடா! இறைவன் ஒருவன்தான். அவனோடு நான் கலந்துவிட்டேன். எங்கும் ஒரே ஆனந்தம்தான்.

இந்தப் பாட்டை ஒரு குத்துக்கல் கேட்டாலும் சரி. அதுவும் ஆனந்தப்பட்டுக் குதித்துவிடும். உத்சாகம் பாடலில்

கரைபுரண்டு ஓடுகிறது. விளையாட்டு வெறியாகி அதுவும் தாங்க முடியாத வெறியாகப் பாடலில் தத்தளிக்கிறது.

ஆனந்தத்தையே வேரோடு பிடுங்கிக் கொண்டு வருகிற இந்தப் பாடலைப் பல நபர்கள் தங்கள் துக்கத்தை வெளியிடுவதற்காகவும், கசப்பைக் கக்குவதற்காகவும் புலம்பி ஒப்பாரி வைப்பதைப் பார்த்திருக்கிறோம்.

எல்லாம் பக்த சிரோமணிகள்தான்; பக்தி வளர்ச்சிக்கும் பிரச்சார மேடைகளில்தான். மாணிக்கவாசகருடைய பாடல்கள் ஆனந்தத்தோடு இறைவனுடைய இயல்பை வெளியிடவந்த சாசனங்கள். உன்னதமான சாதனங்கள்.

ஆனால் மாணிக்கவாசகருடைய பாடல்கள்தான் முக்கியமாக அழுகைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஒரு பொருள் எவ்வளவுக்கு எவ்வளவு மேலானதாக இருக்கிறதோ, அது அவ்வளவுக்கு அவ்வளவு அவமானப் படுத்தப் படுகின்றது. இதை யாரிடம் சொல்ல; கடவுளே சமயத்தைக் காப்பாற்றுவீராக!

# அதிசயத்திலா ஆங்காரம்!

சர்க்கரை அபூர்வமான உணவு. நம்முடைய பலகார வகைகள் பலவற்றில் அது கலந்து வியாபித்துவிட்டது.

காப்பிக்குச் சர்க்கரை இல்லாவிட்டால் ருசி இருக்குமா ? அது போலத்தான் ஹல்வா, ஜிலேபி, மைசூர்ப் பாகு ஒவ்வொன்றிலும் சர்க்கரை ஊடுருவி நின்று ருசி தருகிறது.

உப்புமாவோடும் வாழைப் பழத்தோடும் சர்க்கரையைச் சேர்த்துக்கொண்டால் அதன் ருசியே தனி.

குழந்தை பிறந்த வீடுதோறும் பழத்தோடு சர்க்கரையையும் சேர்த்துக் கொடுக்கிறார்கள். சர்க்கரையாலாகிய பாயாசத்தின் மீது மேலும் ஒரு கரண்டிச் சர்க்கரையைப் போட்டு விடுகிறார்கள். பழனி ஆண்டவனுடைய பஞ்சாமிர்தத்திலிருந்து லாலாக்கடை லட்டுகள் வரை ஒவ்வொரு பண்டத்தின் தலையிலும் சர்க்கரையைத் தூவி விடுகிறார்கள்.

எல்லாம் சர்க்கரையை அனுபவிக்கிற முறையிலிருந்து உண்டானவை.

கரும்பிலிருந்து சர்க்கரையை எப்படி உற்பத்தி செய்கிறார்கள் என்பது அதிசயமான காரியம். விவசாயிகள் எப்படிப் பயிரிடுகிறார்கள் என்பது அதைவிட அதிசயமான காரியம்.

ஆனால் பள்ளிக்கூடங்களில் இந்த அதிசயம் ஒன்றும் கிடையாது. சர்க்கரையைப் பற்றிய பாடங்கள் வந்தால் அங்கு ஜாவாவும் கியூபாவும் தான் வந்து நிற்கும். வருடத்திற்கு எங்கு எங்கு எத்தனை லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி பண்ணப்படுகிறது என்பது கணக்கு ரூபத்தில் வந்து போகும்.

குழந்தைகளினுடைய தோலைப் பிரம்பால் உரிப்பது போதாதென்று சில ஆசிரியன்மார்கள் கரும்பாலும் உரித்து விடுகிறார்கள்.

இனித் தமிழைப் பார்ப்போம். அமிழ்து என்கிற வார்த்தைதான் திரிந்து திரிந்து தமிழ் என்று ஆகிவிட்டதாகச் சொல்கிறார்கள்.

ஆனால் மாணவர்களிடம் தமிழைப்பற்றிக் கேட்டாலோ அது நஞ்சு, வேம்பு, நாகப்பாம்பு என்றுதான் சொல்லுகிறார்கள்.

இப்படி அவர்கள் சொல்லக் காரணம் என்ன? முதலாவது, நாலாடியார் என்பதை எடுத்துக்கொள்வோம். நாலடியாரில் பல உண்மைகள் சொல்லப்பட்டன. எல்லாம் நமக்குத் தெரிந்த சாதாரண உண்மைகள்தான். ஆனால் அவற்றைக் கவி வந்து வெளியிடுகிற தோரணை இருக்கிறதே அது நம்மால் செய்ய முடியாத ஒரு காரியம்.

செய்ய முடியாத இந்தச் செயலும் அதிசயமும் துலங்க வேண்டுமானால் பாட்டைப்பாட வேண்டும். பாடிப்பாடி அனுபவிக்க வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் இது நடைபெறுகிற காரியமா? அங்கே மாணவர்களிடம் கேட்கிறார்கள்.

“நாலடியார் கீழ்க்கணக்கைச் சேர்ந்ததா?”

“நாலடியாரைப் பாடியது யார், அவர்(கள்) நாலடியாரைப் பாடக் காரணம் என்ன?”

“நாலடியார் என்று அதற்கு ஏன் பெயர் வந்தது?”

இப்படிப் போதித்தால் மாணவர்கள் நஞ்சு என்று சொல்லாமல் தமிழை வேறு என்னவென்று சொல்வார்கள். அடடா! அதிசயம் விளைய வேண்டிய இடத்தில் ஆங்காரம் அல்லவா விளைந்துவிட்டது.

## 2

உண்மை என்பதைத் தெரிந்துவிட்டால் எது நல்லது எது கெட்டது என்கிற வித்தியாசம் மறைந்துவிடும்.

அழிக்க எண்ணிய ஒவ்வொரு காரியத்தையும் ஆசீர்வதிக்கவே தோன்றும். உண்மையை அறிந்தவர்களுக்குத்தான் ‘பெரியவர்கள்’ என்று சொல்வது. தேவர், வானவர், உம்பர், ஞானி என்று உபசரிப்பது எல்லாம் அத்தகைய பெரியவர்களைத்தான்.

பெரியவர்களுக்குத்தான் அறிவுக்கண் என்பதாக ஒன்றுண்டு. அது மூடுவதும் கிடையாது. விழிப்பதும் கிடையாது. அதனுல்தான் தேவர்கள் எப்பொழுதும் கண்ணிமை மூடமாட்டார்கள் என்று சொல்வது. தர்மமும் அதர்மமும் பின்னிக்கிடக்கும் இந்த உலக விவகாரங்களில் அந்தப் பெரியவர்களின் இதயம் கலக்காது. இந்த உலக விவகாரத்தைக் கடந்த நிலையில்தான் அவர்கள் இதயம் சென்று கலக்கும். அதனுல்தான் தேவர்களுடைய பாதங்கள் பூமியில்படாது என்று நயமாகச் சொல்லி இருக்கிறது.

அப்பேர்ப்பட்ட பெரியவர்களின் நட்பைச் சம்பாதிப்பதில் எல்லோரும் போட்டி இடுவது இயல்புதானே.

இனி நாலடியார் பாடலைப் பார்க்கலாம்.

பெரியர் பெரு நட்புக் கோடல் தாம் செய்த
அரிய பொறுப்பர் என்(று) அன்ருே—அரியரோ
ஒல்லென் அருவி உயர்வரை நன்னட
நல்ல செய்வார்க்குத் தமர்."

"நல்ல செய்வார்க்குத் தமர்" என்பது அபூர்வமான உண்மை. அதை நம்முடைய நாவு சொல்லிச் சொல்லிப் பழக வேண்டும் என்பது கவிஞருடைய ஆசை. அப்படியானல் அதற்குத் தனியான ஸ்தானம் அல்லவா கொடுக்கவேண்டும். அதற்காக எடுத்த விஷயத்தை "அரியரோ" என்பதோடு முடித்து ஒதுக்கிவிட்டு மூன்ருவது வரியில் பாண்டியனை அழைக்கிருர். அப்படி அழைப்ப தன் மூலமாக "நல்ல செய்வார்க்குத் தமர்" என்பது தனியான ஸ்தானத்தில் விழுந்து விடுகிறது. இப்படி முடித்துக்காட்டுவது கவிதையின் அதி நுட்பமான செயல்.

பாண்டியனுடைய பூமியில் மலைகளும் குன்றுகளும் ஏராளமாய் இருக்கின்றன. அருவிகளும் 'சோ' வென்று" விழுந்து கொண்டே இருக்கின்றன. அவற்றை அற்புதமாக அனுபவித்திருக்கிருர் கவிஞர். "ஒல்லென் அருவி உயர் வரை நல்நாட" என்று அழைப்பதிலிருந்து அது நன்ருகத் தெரிகிறது.

*　　　*　　　*

இனி வேருெரு பாடலைப் பார்ப்போம்.

---

கோடல்—பெறுதல்; அரிய—குற்றம்; நல்ல செய்வார்க்கு—கெட்டவர்களுக்கும் நன்மையையே செய்யும் பெரியவர்களுக்கு; தமர் அரியரோ—நண்பர்கள் பெருகுவது ஆச்சரியம் அல்லவே, இயல்புதானே.

பிரபு ஒருவர் இருந்தார். அவரிடம் யாரும் எதையும் வாங்கி வந்தது கிடையாது. எச்சிற் கையால் காக்காய் விரட்டாத பேர்வழி அவர். பிரபு மூன்ருவது மாடியில் இருந்தார். பிரபுவை அவசரமாகப் பார்க்கவேண்டும் என்று கீழே ஒருவன் துடிக்கிறன். காவல்காரனே விடமாட்டேன் என்று விரட்டுகிறன். வந்த ஆசாமி காவல்காரனிடம் கெஞ்சினன். கூத்தாடினன். பிரபு இருக்கும் இடத்திற்கும் வந்துவிட்டான்.

பிறகு தன் பையிலிருந்த கடுதாசியைப் பிரபுவிடம் நீட்டினன். பிரபு படித்துப் பார்த்தார். பெருமூச்சு விட்டார். இருநூறு ரூபாயையும் எடுத்துக்கொடுத்து விட்டார். ஆசாமியும் போய் விட்டான். பிரபுவினுடைய வழக்கு கோர்ட்டில் நடந்து கொண்டிருந்த சமயம் அது. பிரபுவினுடைய உயிர் நாடி முழுவதும் அவருடைய வக்கீலிடம் இருந்த காலம் அது.

ஆசாமி வக்கீலிடமிருந்தே கடிதத்தை வாங்கி வந்து விட்டான். பிரபு தப்பமுடியுமா ? கடிதம் வாங்கி வந்தவனைப் போன்ற அசகாய சூரர்களை நாலடி ஆசிரியரும் பார்த்திருக்கிறர். அடடா இவர்கள் கல்லிலிருந்து நார் உரிப்பதோடு நிற்காமல் தேனும் அல்லவா எடுத்து விடுகிறர்கள் என்று வியந்தும் இருக்கிறர், அந்த வியப்புப் பாடலாக வருகிறது.

*நீரினும் நுண்ணிது நெய் என்பர் நெய்யினும்*
*ஆரும் அறிவர் புகைநுட்பம்—தேரின்*
*நிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்*
*புகற்(கு) அரிய பூழை நுழைந்து*

---

நுண்ணிது — நுண்மையானது. நெய்—எண்ணெய். தேரின்—ஆராய்ந்து பார்த்தால். நிரப்பிடும் பையாளன்—தரித்திரன் ; புகும்—போய்விடுவான். புகற்கரிய—நுழைய முடியாத. பூழை—வாசல் வழியாக.

பாடலைப் பாடப்பாட நம்மைக் கிறக்கிவிடும். முதல் இரண்டு வரிகளும் தயங்கித்தயங்கி வருகின்றன. ‘நெய்யினும்’ ‘ஆரும்’ ‘தேரின்’ என்கிற வார்த்தைகள் தயக்கத்தை அருமையாய் எடுத்துக் காட்டுகின்றன.

‘புகுமே’ என்று முடித்து ‘புகையும்’ என்று நிறுத்தி ‘புகற்கரிய பூழை நுழைந்து’ என்று சொல்வதில் ஹாஸ்யம் அற்புதமாக வடிவெடுத்திருக்கிறது.

தாவிக்குதிப்பதற்குச் சில இடங்களில் மிதிகல் போட்டிருப்பார்களே, அப்படி மிதிகல்லாய் விழுந்திருக்கின்றது ‘தேரின்’ என்ற தனிச்சீர்.

* * *

இனி வேறொரு பாடலைப் பார்ப்போம்.

அறிவாளிகள் எந்த விஷயத்தையும் அளந்து பேசுவார்கள். அரை குறைப் படிப்பாளிகள் இருக்கிறார்களே அவர்களுடைய காரியம் அப்படி அல்ல. தெரிந்ததோ தெரியாததோ எதை வேண்டுமானாலும் விளாசி விடுவார்கள்.

பேச்சும் ஒரு துறையில் நிற்காது. அரசியலைப் பற்றிப் பேசும் பொழுது தத்துவத்திற்குள் இறங்கி விடுவார்கள். தத்துவத்திற்கு வரும் பொழுதோ வைத்தியத்திற்குள் பாய்ந்து விடுவார்கள்.

அவர்கள் பொருளாதாரத்தில் முங்குவார்கள். ஆஸ்திகத்தில் நீந்துவார்கள். நாஸ்திகத்தில் மிதப்பார்கள். எல்லாம் விநாடிக்கணக்கில்தான். இப்பேர்ப்பட்ட பேர்வழிகளிடம் நாம் அகப்பட்டுக்கொண்டால் நேரம் ஒரு நாழிகைதான் என்றாலும் மரணாவஸ்தைதான்; சித்திரவதைதான். தங்கள்

நாற்றம் பிடித்த வாயை அவர்கள் மூடவும் மாட்டார்கள். நம்மால் அதைச் சகிக்கவும் முடியாது.

பாடலைப் பார்ப்போம்.

கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றையார் ஆவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய ஓலை சலசலக்கும், எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி.

கற்றறிந்த **நாவினர்** என்று சொல்வதில் மரியாதை தொனிக்கிறது. 'மற்றையார் ஆவர்' என்று வேறு படுத்துவது ஆசாரமான முறை. 'பனையின் மேல்' என்பதைத் தனிச்சீரில் வைப்பது பனைமரத்தையே தூக்கிக் காட்டுகிறது. "எஞ்ஞான்றும்" என்பதை வற்றிய ஓலைக்கும் பச்சோலைக்கும் மத்தியில் போட்டுப் பிரிவினை செய்திருப்பது அருமையான உத்தி. ஒலி என்பதைப் பரிவோடு கடைசி யில் சொல்லி யிருக்கிறது அற்புதமான முறை.

* * *

அறிவாளிகள் மீது நம்மை அறியாமலேயே நமக்கு ஒரு மரியாதை ஏற்படுகிறது. கௌரமாக அவர்களைப் பூஜிக்க வேண்டுமென்று அது நம்மைத் தூண்டுகிறது.

எல்லாம் பாடல் செய்கிற காரியம். அது பாடப் பாடத் தான் தெரியும்.

---

* சொல்லார்—வேண்டாததைப் பேசமாட்டார்கள். மற்றையார் ஆவர்—அறிவில்லாத அறைகுறைப் படிப்பாளிகள். பகர்வர்—வேண்டாததையே பேசிக் கொண்டிருப்பார்கள். எஞ்ஞான்றும்—இன்றல்ல, நேற்றல்ல ஊழி ஊழி காலமாகத் தானே.

கவிதைகள் மந்திர சக்தி வாய்ந்தவை என்று சொல்வார்களே, அது வெறும் வார்த்தை அல்ல. கவிதைகள் தெய்வ சிருஷ்டியைச் சேர்ந்தவை என்று சொல்வார்களே அதுவும் வெறும் வார்த்தை அல்ல. அதற்கு நாலடியாரே சான்று.

# கழுக்குன்றத்தின் அற்புதனே

தமிழ்க் கவி என்றால் அனுபவ உண்மையை எடுத்துத் தமிழ் மொழியே நடனமாடிக் காட்டுகிறது என்பது தான் பொருள்.

விஷயத்துக்கு விளக்கம் கொடுக்க வேண்டும். வேகம் கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றிக் கவிஞர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. வேகம் எவ்வளவு வேண்டுமோ விளக்கம் எவ்வளவு தேவையோ அவ்வள வையும் தமிழிலுள்ள நாடக இயல் செய்துவிடுகிறது.

பாத்திரம், குணம், கட்டம், களம் முதலிய அங்கங்கள் விஷயத்தோடு கலந்து தொழிற்படும்பொழுது வலுவும் பிரகாசமும் அப்படியே வந்துவிடுகின்றன.

கவியோ காலங் கடந்ததாய் இட பேதம் அற்றதாய் கண கண என்று ஒலிக்கிறது. தமிழ்க் கவிதை என்றால் விஷயம் மாத்திரம் அல்ல. அதோடு நாடகமும் இருக்கும்; மொழியின் அற்புதமான நடனமும் இருக்கும். உண்மை யான தமிழ் ஒலியோ ஒலித்துக்கொண்டே இருக்கும்.

இனி பூர்வமான பாடல் ஒன்றைப் பார்க்கலாம்.

* * *

சிவபெருமான் எங்கும் நிறைந்த வஸ்து. சகலமும் தானாகி ஒட்டியும் ஒட்டாது நிற்கும் வஸ்து; யாராலும் அவனை நேரடியாகக் காணமுடியாது. இருந்தாலும் சில

இடங்களில் அடியார்களுடைய கண்களுக்குப் புலனுவது போல உணர்வுமயமாகக் காட்சி கொடுக்கிருன் இறைவன்.

எப்படி ?

கோயில்களிலும் பூசைப் படித்துறைகளிலும் ஆற்றுப் படுகைகளிலும் அடியார்கள் கூடுவார்கள். கூடிப் பழமை யான பக்திப் பாடல்களேப்பாடி உருகுவார்கள், கேட்டும் ஆனந்திப்பார்கள்.

பக்தி நிலேயில் பாடியும் அனுபவித்தும் அடியார்கள் அடைகிற ஆனந்த நிலேயில் இறைவனே காட்சி தருவது போல ஒரு நிலே ஏற்படுவது உண்டு. இறைவனேப் பற்றிப் பாடுகிற அடியார்களுக்கு மத்தியில் இறைவனேக் காணலாம் என்று சொல்வதில் வியப்பில்லேதான்.

இனி இந்தப் பேரண்டங்களிலுள்ள ஒவ்வொரு வஸ்து வும்—சின்னஞ்சிறிய புல்லானுலும் சரி, அளக்க முடியாத நட்சத்திரம் ஆனுலும் சரி, ஒவ்வொன்றும் இறைவனுடைய நிலேயை உணர்த்துகின்ற கருவிகள் தான்.

நம்முடைய ஆணவ நிலே அந்த வஸ்துகளின் மூல மாக இறைவனேக் காணவொட்டாமல் நம்மைத் தடுக் கிறது. இருந்தாலும் இரவு நேரத்தில் வான வெளியை எட்டிப் பார்த்தோமானுல் கோடானு கோடி நட்சத்திர வட்டங்கள் அந்தரத்தே சுழலுகிற காட்சி கால் வினடி யேனும் நமக்கு இறைவனுடைய உண்மையை உணர்த் தாமல் விடுவதில்லே.

ஆகவே இறைவனே உணர்வோடு காண்கிற காட்சி நட்சத்திரம் முதலிய ஒளி வட்டங்களில் கொஞ்சம் லகுவாக அமைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

விஞ்ஞானம் இருக்கிறதே, அதை எவ்வளவு படித் தாலும் இறைவன் நம்முடைய உணர்ச்சிக்குப் புலனுவ தில்லே. நம்முடைய விஞ்ஞானத்தை யெல்லாம் தாண்டி

நிற்பதுதான் இறைவன் என்று உணரும் பொழுதுதான் அவனுடைய அருள் ஓரளவேனும் நமக்குச் சித்திக்கும்.

இப்படி எல்லாம் தோன்றியும் மறைந்தும் விளையாடுகிற இறைவனைத் திருக்கழுக்குன்றத்தில் நேருக்கு நேராகப் பார்த்து அனுபவிக்க முடியும். திருக்கழுகுன்றத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் மூர்த்தியைத் தரிசித்து இரண்டு கண்களையும் மூடி நின்றால் அதுவே போதும். காலம் இடம் எல்லாவற்றையும் கடந்து நிற்கிற பரம் பொருளின் தத்துவம் முழுவதையும் நம் இதயத்திற்குள் அப்படியே கொண்டுவந்து நிறைத்துவிடும்.

இதை அடியார்கள் அனுபவித்திருக்கிறார்கள். ஆனந் தத்தை வெளியிட்டும் இருக்கிறார்கள்.

.........முதுவானவர் தம்
சுற்றத்தி லேகதிர் வட்டத்தி லேதொல்லை
நான்மறையின்
அற்றத்தி லேகழுக் குன்றத்தி லே நிற்கும்
அற்புதனே

தமிழ் மொழியின் அற்புதமான நடனத்தைப் பாடலில் காண முடிகிறது. இனி இந்த நடனம் எப்படி நாடகத்தோடு கலக்கிறது.என்பதைப் பார்க்கலாம்.

உண்மையை உணர்ந்து நெருங்க நெருங்க உண்மை யின்மேல் பக்தியே உண்டாகிவிடும். காதல் பிறந்துவிடும் என்றாலும் மிகை அல்ல. உண்மை எது சம்பந்தப்பட்ட தாக வேண்டுமானாலும் இருக்கலாம். அவற்றின் மூலம்

---

முதுவானவர்-பூர்வமான பக்திப் பாடல்களைப் பாடுகிற புலவர்கள்; அடியார்கள். கதிர் வட்டம்-நட்சத்திரம் சூரியன் முதலிய மண்டலங்கள்; தொல்லை நான் மறையின் அற்றம்-பழங்காலத்திலிருந்தே உண்மையை எடுத்துச் சொல்லி வருகிற விஞ்ஞானம் முதலிய தத்துவங்கள்.

பக்தியும் காதலும் எவ்வளவு தொனிக்கிறதோ அவ்வளவு தான் உண்மையை அனுபவித்ததற்கு அடையாளமாகும்.

பக்தியோடு கலந்து இதயம் கரைய ஆரம்பித்துவிட்டால் அங்கு நிரந்தரமான காதல் ஒலியைக் கேட்க முடியும்.

* * *

திருக்கழுக்குன்றத்திலுள்ள மூர்த்தியை வைத்து ஆனந்தமடைகிற இதயத்தில் காதல் உண்டாகிவிடுகிறது. அப்படியே ஏக்கம், பரிவு, சோர்வு முதலிய பண்புகளும் உண்டாகி விடுகின்றன. "திருக்கழுக்குன்றத்திலுள்ள மூர்த்தி—இறைவன்தான் எனக்காக என்னுடைய வீட்டின் (முன்) வாசலில் வந்து நிற்பானு? தான் ஏறி வருகிற காளை வாகனத்தோடு என் வாசலில் வந்து காத்து நிற்பானு?" என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறது.

மேலே கண்டபடி நினைக்கவும் பேசவும் தகுதியுள்ளது பெண் உள்ளம்தான். பக்தியைக் காதல் துறையில் வைத்து நாடகம் போட்டுக் காட்டுகிறது தமிழ் மொழி.

பெற்றத் திலேவரு கோலமும் தானும் என்
பெண்மை உய்ய
முற்றத்தி லேவந்து முன்னிற்குமோ முது
வானவர்தம்
சுற்றத்தி லேகதிர் வட்டத்திலே தொல்லை
நான் மறையின்
அற்றத்திலே கழுக்குன்றத்தி லேநிற்கும்
அற்புதனே

---

பெற்றம்-ரிஷப வாகனம்; மூர்த்தியைக் கோயிலுக்குள் மாத்திரம் அல்ல, திரு விழாக் காலங்களில் வாகனத்தோடு இறைவன் பவனி வருவதையும் அனுபவித்த நிலையும் தெரிகிறது.

பாடலைப் பாடப் பாட நாவிற்கு ருசி உண்டாகிவிடும்.

சிருஷ்டி தத்துவம் என்பது எங்கும் நிறைந்த ஆனந்த தத்துவத்தின் செயல்தான். ஆனந்த தத்துவத்தின் செயல்கள் தடங்கலில்லாமல் நடப்பதற்கு வேண்டிய உபாயங்கள் ஏற்கெனவே செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பெண்ணின் உடம்பிலுள்ள ஒவ்வொரு நெளிவும், ஒவ்வொரு குழைவும் அந்த உபாயத்தைச் சேர்ந்தவை தான்.

பெண் தன்னுடைய அங்கங்களின் ஒவ்வொரு பகுதி யையும் மூடி மறைப்பது மாத்திரம் அல்ல; தான் பேணுகிற சேலை, வளையல், குங்குமம் முதலிய ஒவ்வொரு உடைமை யிலும் அந்த உபாயம் நிறைந்திருக்கும்.

நாணுவது கோணுவது முதலிய பண்புகளும் விரிந்து பரந்துள்ள தாயன்பும், புனிதமான தியாகமும், ஏன் பெண்ணின் செயலில் உள்ள ஒவ்வொரு துளியுமே ஆனந்த தத்துவத்தின் நேரடியான ஏற்பாடுகள்தான். அதாவது என்றும் இடையறாது நடைபெற வேண்டிய சிருஷ்டி தத்து வத்திற்குத் தேவையான கருவிகள்தான்.

இவ்வளவு கருவிகளையும் கொண்ட பெண்ணுள்ளம் எதிர்பார்த்து நிற்பது இயல்புதானே? எதிர்பார்த்த காரியம் நடைபெறுமா என்று சந்தேகம் கொண்டுவிட்டால் தனக்கு மாத்திரம் அல்ல, ஊழி ஊழி காலமாகச் சிருஷ்டி பண்ணி வருகிற பெண்மைத் தத்துவத்திற்குக் குறை வந்துவிடும் என்று பயப்படுவதும் இயல்புதானே? இதைத்தான்,

என் பெண்மை உய்ய
முற்றத்தி லேவந்து முன்னிற்கு மோ?

என்பதில் சொல்லி இருக்கிறது. உயர்ந்த விஷயம்; அதை எவ்வளவு லகுவாக வெளியிட வேண்டுமோ அவ்வளவு லகுவாக வெளியிடுகிறது தமிழ்.

# குறளின் குரல்

---

அநுபவம் என்பது சாதாரண விஷயம் அல்ல. ரசனை என்பதும் அப்படித்தான்.

ஒரு பருத்திச் செடி வாடிவிட்டது. வழியில் போகிற சாதாரணமான மனிதர்கள் அந்தப் பருத்திச் செடியைப் பார்க்கிற பார்வை வேறு, விவசாயி பார்க்கிற பார்வை வேறு. வாடிய செடியைப் பார்த்த உடனேயே விவசாயி னுடைய இதயம் உருகிவிடும். செடியினுடைய வாட்டம் அவனுடைய இதயத்திற்குள் வந்துவிட்டது என்றாலும் குற்றம் இல்லை.

பருத்திச் செடி விவசாயியினுடைய கண்களுக்கு வெறும் தாவரப் பொருளாக மாத்திரம் படுவதில்லை. அது பருத்தி யாகவே படும். பிறகு பணமாகப் படும். அந்தப் பணத்தின் மூலம் அவன் வாங்க எண்ணிய பொருள்களாகவும் படும். அவனுடைய திட்டங்கள் முழுவதுமே பட்டுவிடும் அந்தச் செடியின் மூலம்.

இதன் காரணமாகத்தான் பருத்திச்செடி தளிர்த்தால் விவசாயியினுடைய இதயம் துள்ளுகிறது. அது வாடினால் அவனுடைய இதயம் வாடுகிறது.

ஒரு பொருளின்மூலம் அநுபவம் உண்டாகிறது, அதன் மூலம் ரசனை பிறக்கிறது என்றால் அந்தப் பொருளின்

விளைவுகள் நம்முடைய இதயத்திற்குத் தேவையாக இருக்க வேண்டும். பிறகு அந்தப் பொருளை நாம் பார்க்கிற பார்வையும் (பொருளை ஒதுக்கிவிட்டு) அதன் பலனைப் பிடிப்பதாக இருக்கவேண்டும்.

எந்த இதயத்திற்கு எந்தப் பொருள் தேவையோ அந்த இதயம் அந்தப் பொருளை நாடிவிடும். அப்பொழுதுதான் அந்தப் பொருளின் யதார்த்த நிலையை அந்த இதயத்தால் அறிய முடியும். அதன் மூலம்தான் ரசனை பிறக்க முடியும்.

வாழ்க்கையின் பல்வேறு நெருக்குதல்களால் உந்தப் பட்டு வலியப் பார்க்கிற ஒவ்வொரு பார்வையும் கழுதை தன்னுடைய முதுகில் சேணத்தைச் சுமந்துகொண்ட கணக் குத்தான். தேவையுள்ள இதயம் ஒரு பொருளின் யதார்த்த நிலையைக் கூர்ந்து கவனித்துவிட்டால் உணர்ச்சி வசப்பட்டு அப்படியே அது உருகிவிடும். இறுகி இறுகிச் சர்க்கரைப் பாகு எப்படிக் கற்கண்டாக விளைந்துவிடுகிறதோ, அதே போல உருகிய இதயத்தைத் தமிழ்ப் பாஷை அப்படியே எடுத்துவந்து கவிதையாக மாற்றிவிடுகிறது. எந்தெந்த இடத்தில் மனித இதயம் உருகுகிறது என்றும், உருகிய இதயம் எந்தெந்த இடத்தில் அநாதையாய்க் கிடக்கிறது என்றும் தேடி அலைவதுதான் தமிழினுடைய காரியம்.

## 2

குறளாசிரியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவதரித்தார். சமுதாயத்திலுள்ள நல்லவர்கள், கெட்ட வர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் எல்லாரோடும் பழகினர். அவர்களுடைய காரியங்களையும் இயல்புகளையும் தெளிவாகத் தெரிந்துகொண்டார். எது செய்யத்தகுந்தது எது செய்யத் தகாதது என்றும் அவர் முடிவு கட்டினர்.

நல்ல காரியங்களுக்கு அவர் ஆனந்தப்பட்டார். கெட்ட காரியங்களுக்கு ஆங்காரப்பட்டார். ஆனந்தத்திலும் ஆங்காரத்திலும் முங்கி முங்கிக் கரைந்துபோன ஆசிரியருடைய இதயத்தைத் தமிழ் பக்குவமாக எடுத்துவைத்தது. எடுத்து வைக்கப்பட்ட ஒவ்வொரு பிடியும் ஒவ்வொரு குறளாக விளைந்துவிட்டது.

ஒவ்வொரு குறளிலும் ஆசிரியருடைய இதயத் துடிப்பை நாம் பார்க்கமுடியும். இதயத்தின் நாடியையும் மூச்சையும் நாம் காதால் கேட்கவும் முடியும்.

பின்னால் வந்தவர்கள் குறளைப் படித்தார்கள். அதில் சொல்லியுள்ள உண்மையையும் அதிசயத்தையும் வியந்து வியந்து பாராட்டினார்கள்.

ஒரு புலவர், பெயர் என்னவென்று தெரியாது, ஊரோ குடும்பமோ எதைப்பற்றியும் நம்மால் அறிய முடியவில்லை.

அவரும் குறளைப் படிக்க நேர்ந்தது; ஒரு தடவை அல்ல, பல தடவை படிக்க நேர்ந்தது. படிக்கப் படிக்க உண்மையும் வேகமும் குறளில் இருந்து வருவதைப் புலவர் கண்டார். 'அடடா, மக்களினுடைய இதயப் பாங்கும் செயலும் எவ்வளவு தெளிவாகக் குறளில் தெரிகிறது' என்று வியந்தார். ஆசிரியருடைய அநுபவமும் ரசனையும் ஒவ்வொரு குறளிலும் பிரகாசிக்கிறதே என்று அதிசயப்பட்டார்.

புலவருடைய இதயம் குறளில் விழுந்து கரைந்துவிட்டது. கரைந்துபோன இதயம் கவிதையாகத்தானே வடிவெடுக்க முடியும்.

இப்பொழுது புலவருடைய கவிகளை (குறளைப்பற்றிய கவிகளை) நாம் பார்க்கலாம்:

பாடல்கள் பாண்டியனை முன்னிலையாக வைத்து அவனிடம் சொல்லுவதாக அமைந்துள்ளன. அப்படி அமைந்ததே தனியான அழகு.

## 3

ஒவ்வொரு புல்லும் தீட்டிச் செதுக்கிக் கூர்மையாக வைக்கப்பட்டுள்ளது. அவற்றின் கொண்டையில் வைரக் கல்லை வைத்துவிட்டுப் போனதுபோல நீர்த்துளிகள் உட்கார்ந்திருக்கின்றன. அது உட்கார்ந்திருக்கிற தோரணையும் மோடியும் அலாதியானவை. இதைக் காலை வேளையில் ஒரு கோணத்தில் இருந்து பார்த்தால் நீர்த்துளிகளின் பட்டைகளில் சூரியனுடைய பிரகாசம் விழும், விழுந்து பல வர்ணங்களாகச் சிதறும். அவ்வளவுதானா? தூரத்தில் இருக்கிறதே ஒரு பனைமரம் அதனுடைய நீளம் உயரம் அவ்வளவையும் ஒரு பட்டையிலேயே பார்த்துக் கொள்ளலாம். பனைமரத்தின் தூரில் இருந்து உச்சி முடிய ஒவ்வொரு ஓலையையும் நீர்த்துளியைப் பார்த்துக்கொண்டே எண்ணிவிட முடியும்.

"நீர்த்துளி பனைமரத்தையே காட்டிவிடுவதுபோல ஒவ்வொரு குறளும் மனிதர்களைக் காட்டிவிடும். நல்லவர்கள் கெட்டவர்கள் ஒவ்வொருவரையும் குறள் இனங் காட்டிவிடும்."

*தினையளவு போதாதச் சிறுபுல்நீர் நீண்ட*
*பனை அளவு காட்டும் படித்தால்—மனை அளகு*
*வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்*
*வெள்ளைக் குறட்பா விரி.*

---

மனையளகு-கிளி; வள்ளை-பெண்கள் உலக்கை கொண்டு தானியங்களைக் குத்தும் போது பாடும் பாட்டு—அந்தப் பாட்டில் கிளிகள் சொக்கிவிடும் என்பது கருத்து. வளநாட-பாண்டியனே.

புலவர் மேலும் சொல்லுகிருர், "பாண்டியா, தமிழ் நாட்டு மன்னர்கள் மூன்று பேரும் குறளைப் பாடிப்பாடி அநுப விக்கவேண்டும். எந்த முறையில் தெரியுமா? உங்களுடைய தலையை அலங்காரம் பண்ணக் கிரீடங்களைத் தாங்கு கிறீர்கள். குறளையோ உங்கள் கிரீடங்கள் தாங்கவேண்டும். குறள்தாள் உங்கள் கிரீடங்களுக்கு ஒளி கொடுக்கிற அடையாளப் பூ."

* மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாம்உடைய மன்னர் தடமுடிமேல்த் தாரன்ரே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

புலவருடைய உற்சாகமானது கரைபுரண்டு ஓடுவதை யும் ஆவேசத்தோடு பொங்குவதையும், பாடலில் பார்க் கலாம்.

"ஒவ்வொரு குறளும் படிக்கப் படிக்க எளிமையாக இருக்கின்றது. உணர உணர அருமையாகவும் இருக்கின் றது. கள்ளம் கபடம் அற்ற பேருள்ளம் படைத்தவர்களுக் குத்தான் குறள் தன்னுடைய பெருமையைக் காட்டும். அவர்களுடைய இதயத்துக்குள் புகுந்துதான் குறள் தன் னுடைய தெய்வீக ஒலியை எழுப்பும். மற்றவர்களுக்கோ குறள் விளங்காது பாண்டியா, விளங்காது."

ஓதற்(கு) எளிதாய் உணர்தற்(கு) அரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்–தீ(து) அற்ருேர்
உள்ளுதோ(று) உள்ளுதோ(று) உள்ளம் உருக்குமே
வள்ளுவனர் வாய்மொழியின் மாண்பு.

---

* செய்யுள்களின் நயத்தையும் அழகையும் இயல்பாகவே தெரிந்துகொண்டவர் குறளாசிரியர். அதனுல்தான் "பாமுறை தேர் வள்ளுவர்" என்று சொல்லப்படுகிறது. தார்-அடையாளப் பூ; மா-குதிரை.

வெளியில் பார்க்கிற ஒவ்வொரு உண்மையும் குற ளுக்குள் வந்து ஒடுங்கி விரியும்பொழுது ஆயிரமாயிரம் மடங்கு பிரகாசம் அடைகிறது. இதை 'வேதப் பொருளாய் மிக விளங்கி' என்பது தெளிவாகச் சொல்லுகிறது.

"நல்ல இதயம் படைத்தவர்கள் குறளைப் படிக்கப் படிக்க மனத்தை உருக்கிவிடும். அறிவோ 'இடம் போத வில்லையே' என்று பெருகிவிடும். பெருகுகிற அறிவு மனத் தில் மாத்திரம் அல்ல அவர்களுடைய உடம்பு முழுவதும் வியாபித்துவிடும்." அதை எப்படிக் கையாளுகிறுர் புலவர் என்று பார்க்கலாம்:

*மணற்கிளைக்க நீர்ஊறும் மைந்தர்கள்வாய் வைத்து
உணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்-பிணக்(கு)இலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு
ஆய்தோறும் ஊறும் அறிவு.

"இப்படி யெல்லாம் குறள் அறிவைப் பெருக்கினுல் புலவர்கள் வேறு நூலைப் படிக்கவா செய்வார்கள்? குளிர்ந்த தடாகத்தில் இறங்கி ஆசை தீர நீராடுகிற யாரும் ஒரு பானை வெந்நீரைப் போட்டு அதில் சுகங் காணமாட்டார்கள்."

தாளார் மலர்ப்பொய்கை தாம்குடைவார் வெந்நீரை
வேளா தொழிதல் வியப்பன்று-வாளாதாம்
அப்பால் ஒருபாவை ஆய்பவோ வள்ளுவனுர்
முப்பால் மொழிமூழ்கு வார்.

பொய் என்பதும் மெய் என்பதும் என்றென்றும் உள் ளவைதாம். ஆனுல் பொய்யைப் பொய்யாக்கி ஓட்டியதும்

* பிணக்கிலா வாய்மொழி வள்ளுவர்-உண்மையைத் திரித்தோ வளைத்தோ சொல்லாமல் நேரடியாக எடுத்துச் சொல்லுவார்.

மெய்யை மெய்யாக்கி அமரச் செய்ததும் குறள்தான். இந்த அநுபவத்தைப் புலவர் எப்படி வெளியிடுகிருர் என்பதைப் பாடலில் பார்ப்போம்.

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின;பொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே-ஒப்பார்இல்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குறளால்
வையத்து வாழ்வார் மணத்து.

"கூம்பிக் கிடக்கும் இதயங்களைக் குறள் வந்து விரித்து விட்டது. உள்ளே கிடந்த அறியாமை இருக்கிறதே அதையும் ஓட்டிவிட்டது. அப்படியாஞல் இருட்டைத் துரத்திவிட்டுத் தாமரையின் விரியாத மொட்டுக்களை விரித்து வைக்கிருனே சூரியன் அவனேடு குறளை ஒப்பிட்டுச் சொல்லலாம் அல்லவா!"

*உள்ளக் கமலம் மலர்த்தி உளத்துள்ள
தள்ளற்(கு) அரியஇருள் தள்ளுதலால்-வள்ளுவனர்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்கும்எனக்
கொள்ளத் தகும்குணத்தைக் கொண்டு.

புலவர் மேலும் சொல்லுகிருர். மனிதர்கள் கைக்கொள்ள வேண்டிய மேலான முறைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல, அஞதி காலம் தொட்டே அது வகுத்து உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஆஞல் அந்த மேலான வழி எப்படிப்பட்டது என்று நம்மால் தெரிய முடியாது. தெரிந்து கொண்ட காரணத்தால் நமக்கு ஆனந்தம் உண்டாகிறது.

---

*உள்ளக் கமலம்-தாமரை மொட்டுப்போன்ற இதயம்; உளத்து-உள்ளத்தில்; தள்ளற்கு அரிய-நீக்க முடியாத; வெங்கதிர்-சூரியன்.

**சிந்தைக்(கு) இனிய செவிக்கினிய வாய்க்கினிய**
**வந்த இருவினைக்கு மாமருந்து-முந்திய**
**நல்நெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்**
**பன்னிய இன்குறள்வெண்பா.**

இந்தக் கவிகளைப் பாடிய கவிஞரின் காலம் நமக்கு இன்னதென்று தெரியவில்லை. ஆனாலும் பாடல்களின் அமைப்பும் உருவமும் 1,500 வருஷங்களுக்குப் பிற்பட்டவர் அல்ல கவிஞர் என்பதைத் தெரிவிக்கிறது.

பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு குறளை அநுபவித்த கவிஞருடைய இதயமும் அதிலுள்ள வியப்பும் நமக்குத் தெரிகிறது.

குறளை அநுபவிக்க முடியாதவர்களைப் பார்த்து அந்த இதயம் விடுகிற பெருமூச்சும் நம் செவிகளில் கேட்கிறது. எல்லாம் தமிழ் சாதிக்கிற காரியம்.

---

வந்த இருவினை-நாம் எங்கே போகிறோம் எங்கே தங்குகிறோம் என்பதை அறிந்து நம்மைப் பிடித்துக்கொண்ட வினைப் பயன்; முந்திய நல் நெறி-பழமையாகவே வகுக்கப்பட்ட உண்மை நெறி; வள்ளுவனார் நாப்புலமை பன்னிய குறள்-வள்ளுவருடைய அறிவும் அநுபவமும் அவருடைய நாவினின்றும் குறளாக வடிவெடுத்தன. அந்தக் குறள்தானே வாய்க்கும் செவிக்கும் இதயத்துக்குங்கூட அமிர்தமாய் இருக்கிறது. வினைப்பயனைத் துடைத்து எறிவதற்குச் சஞ்சீவியாகவும் பயன்படுகிறது என்பது கருத்து.

# வள்ளைப் பாட்டு

நம்முடைய இதயத்திற்கு ஒரு பொருள் மேல் அன்பு ஏற்பட்டுவிட்டால் அந்தப் பொருளை நம்முடைய இதயம் எப்படி எல்லாமோ வைத்து விளையாடுகிறது. அப்படி விளையாடாமல் இதயம் சும்மா இருக்க முடிகிறதில்லை.

காதல் அனுபவமும் இப்படித்தான். நாயகனோடு அனுபவித்த இன்பத்தை நாயகி எப்படி எல்லாமோ வைத்துப் பாராட்டுவாள். பாராட்டுகிற காலை நாணத்தைச் சற்றே ஒதுக்கி வைக்க வேண்டுமானாலும் அதற்கு அவள் தயங்குவது இல்லை.

மலையையும், ஊரையும், தடாகத்தையும் பாராட்டுவது போல அவற்றோடு சம்பந்தப்பட்ட நாயகனைப் பாராட்டி விடுவாள்.

நாயகனை இப்படி மறைத்துப் பாராட்டுவது மற்றவர் களுக்குத் தெரிந்துவிட்டால் வெளிப்படையாகவே பாராட்டி விடுவாள்.

நாயகி நாயகனை இப்படிப் பாராட்டுவதற்கு அனுசரணை யாக அம்மானை, கழங்கு, நீராடல், ஊசல், பூக்கொய்தல் முதலிய விளையாட்டுக்கள் வகுத்து வைக்கப்பட்டுள்ளன.

நாயகனுக்கு வாசனைப் பொடி இடித்துக் கொடுத்தல், துணிகளில் பூ வேலை செய்து கொடுத்தல் முதலிய காரியங் களாலும் நாயகி தன்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்வது உண்டு.

வாசனைப் பொடி இடிக்கும்பொழுது தோழிமார்களும் கலந்துகொள்வார்கள். தோழிமார்களுக்குத் தெரியாத முறையிலும், தெரிகிற முறையிலும் நாயகனுடைய வளத்தையும் அருமையையும் நாயகி பாராட்டிப் பாடுவாள். தோழிமார்களும் நாயகி பாடும் பாடல்களோடு கலந்து கொள்வது உண்டு. ஊடல், கோபம், பரிவு, கலக்கம், ஆனந்தம் முதலிய சகல பண்புகளும் உலக்கைப் பாட்டில் சேர்ந்துவரும். இத்தகைய உலக்கைப் பாடல்களை 'வள்ளைப் பாட்டு' என்று புலவர்கள் பாராட்டி யிருக்கிருர்கள். கிளிகளே இத்தகைய வள்ளைப் பாடல்களைக் கேட்டுச் சொக்கிவிடும் என்கிற கருத்தில்,

"மனை அளகு வள்ளைக்(கு) உறங்கும் நாட"

என்றும் புகழ்ந்து சொல்கிருர்கள்.

* * *

மாணிக்க வாசகர் இறைவனைக் காதற் கண்ணேடு பார்த்து அனுபவிக்கிருர். இறைவனுக்கு வாசனைப்பொடி இடிக்கிறதாகவும், சேர்ந்து பொடி இடிக்கும் தோழிமார்கள் அறிய இறைவனுடைய கல்யாண குணங்களை எடுத்துச் சொல்வதாகவும், இறைவனுக்கு வாசனைப்பொடி இடிப்பது பாக்கியம்தான் என்று வற்புறுத்துவதாகவும் மாணிக்க வாசகர் பாடுகிருர்.

பாடல்களைப் பார்க்கலாம் :

**முத்தணி கொங்கைகள் ஆட ஆட**
**மொய் குழல் வண்டினம் ஆட ஆட**
**சித்தம் சிவனெடும் ஆட ஆட**
**செங்கயற் கண்பனி ஆட ஆட**

---

சித்தம்-இதயம். கண்பனி-கண்ணீர். பித்து-ஆனந்த நிலை. ஆனந்தம் இறைவனை நாடி ஆட இறைவன் கருணையோடு சேர்ந்து ஆடுவான்.

பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவிப் பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ(டு) ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

* * *

[1]தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச் சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊன் அக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகம் ஆக நஞ்(சு) உண்டல் பாடி
பொற்திருச் சுண்ணம் இடித்தும் நாமே

* * *

[2]வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமும் இன்பமும் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே

இதயத்தில் உண்டான அனுபவத்தை வெளியிட வேண்டி தமிழ் பாஷை பெண்ணுருவம் எடுக்கிறது. உலக்கையைப் பிடிக்கிறது. வாசனைப்பொடியும் இடிக்கிறது.

---

1 சிவபுரம்-எங்கும் நிறைந்த ஆனந்த நிலை. ஊன் அக மாமழு- எதிரிகளைக் கொன்று புலால் நாற்றம் அடிக்கும் சூலாயுதம். போனகம் ஆக-ஆகாரப் பொருளாக.

2 பந்தம்-மயக்கம். வீடு-விடுதலை.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத்(து) ஆட்கொண்(டு) அருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யை
........................
........................
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

உண்மை அனுபவத்திற்குள் தமிழ் பாஷை நுழைந்து விளையாட முடிகிறது. விளையாட்டில் விளைகிற கும்மாளியும் எக்காளமும் நம் செவிகளில் ஒலிக்கின்றன. ஆயிரம் வருடங்களானால் என்ன, பதினாயிரம் வருடங்கள் ஆனால் தான் என்ன, அது ஒலித்துக்கொண்டுதான் இருக்கும்.

---

மை-நஞ்சு காரணமாக வந்த நீல நிறம், ஐயன்-தலைவன், ஐயர் பிரான்-தலைவர்களுக்கெல்லாம் தலைவன், அகப்படுத்து-வளைத்து, ஆட்கொண்டு-அடியவளாக்கி. அருமை காட்டும்-நம்மீது கருணை காட்டிய, மாணிக்கக் கூத்தன்-மாணிக்கத்தில் ஒளி நடனம் புரிவது போல ஒவ்வொரு பொருளிலிருந்தும் ஆனந்த நடனம் புரியும் இறைவன்.

# அடியவன் என்கிற பேறு

---

மாணிக்கவாசகர் உண்மை நிலையிலிருந்து பேசக்கூடியவர். 'நான்' 'எனது' என்கிற உபாதைகளிலிருந்து விடுபட்டவர் அவர். விடுபட்ட உபாதைகள் சிலசமயம் மாணிக்கவாசகரைத் தாக்கிவிடுவதும் உண்டு. தாக்குவதும், விலகுவதும் அடிக்கடி நடைபெறும்.

சிலவேளை இறைவனோடு ஒட்டி இருப்பதுபோல மாணிக்கவாசகர் பேசுவார். இறைவனே தனக்குள்ளாக ஐக்கியமாகி விட்டதாய்க் கூடச் சிலவேளை அவர் சொல்வதுண்டு. இறைவனைத்தேடி அலைவதாகவும். அவனைக் காண முடியாதது போலவும், இறைவன் வேண்டுமென்று தன்னை வஞ்சிப்பதுபோலவும், இறைவன் தன்னைக் கைவிட்டு விடுவானோ என்று கலங்குவது போலவும் இப்படிப் பலவித நிலைகளிலிருந்து மாணிக்கவாசகர் பேசுவார்,

மாணிக்கவாசகர் பேசுவது சாதாரண மக்களுக்கு முரணாகப் படலாம். ஆனால் உண்மையை ஒட்டிப் பார்க்கிறவர்களுக்கு மாணிவாசகர் சொல்வதுதான் உண்மை என்றும், அதுதான் தெளிவுமிக்க உறுதிகொண்ட உண்மை என்றும் தெரிந்துகொள்ள முடியும்.

* * *

இதயம் என்பது விநாடி அளவேனும் சும்மா இருப்பதில்லை. அணுவின் உட்பகுதியிலிருந்து அண்ட முகடுகளின் வெளிப் பகுதிகள் முடிய ஒவ்வொன்றையும் துழாவித்

துழாவிச் சுற்றுவதுதான் இதயத்தின் தொழில். வேண்டியதோ வேண்டாததோ எதுவாக இருந்தாலும் சரி அதைச் சலித்துச் சலித்துக் கொழிப்பது இதயத்தின் காரியமாகப் போய்விட்டது.

*　　　　*　　　　*

தமிழ்நாட்டில் கோயில்கள் ஏராளம். படி வழியாக ஏறிக் கோயிலுக்குள் போகப் போக, சுற்றி அலைகிற இதயம் இறங்கி வர ஆரம்பிக்கிறது, கோயிலுக்குள் நாதஸ்வரம் முழங்குகிறது. கண்டாமணி ஒலிக்கின்றது, இதயம் இதயத்திற்குள் ஒடுங்கிப் பூரணமடைகிறது. அடியார்கள் பாடிய பக்திப் பாடல்கள் முழங்க மூர்த்திக்குத் தீபாராதனை நடக்கும்பொழுது இரண்டு கைகளும் தலையின்மேல் ஏறிக் குவிந்துகொள்கின்றன. மூடிய கண்களுக்குள்ளிருந்து கண்ணீர்த்துளி முத்து முத்தாக உதிர்கின்றது. வேர்த்து நடுநடுங்கி நாத்தடுமாற வாய் முனகுகிறது. இதயமோ கரைந்து கரைந்து பரமானந்தப் பெருக்கோடு கலக்கிறது. ஐந்து விநாடியே ஆனாலும் கிடைத்தற்கரிய பேரின்ப நிலைதான் அது. இந்தப் பேரின்ப நிலையைக் கோயில்கள் எப்படியோ நமக்குக் கொடுத்துவிடுகின்றன.

*　　　　*　　　　*

மாணிக்கவாசகரைப் போன்ற ஞானிகளுக்கு இந்தப் பேரின்ப நிலை அடிக்கடி ஏற்படுவதுண்டு. பேரின்ப நிலையிலிருந்தும், அது விட்ட நிலையிலிருந்தும் தங்கள் அனுபவத்தை அவர்கள் எடுத்துச் சொல்வார்கள். மாணிக்கவாசகர் அந்த நிலையிலிருந்து பாடிய பாடல்களை நாம் பார்க்கலாம்.

‘இறைவனே என்னைக் கைவிட்டு விடாதே’ என்பது பாட்டின் கருத்து. தன்னிடம் குலாவி விட்டுப் போகிறவனிடம், மறந்துவிடக்கூடாது’ என்று வேண்டிக் கொள்வது போல இருக்கிறது பாடலின் சாயல்.

[1] மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்(து)
உன்விரை யார்கழற்(கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றிச்
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே

ஏக்கம், பரிவு, சோர்வு அவ்வளவும் பாடலில் கிடக்கின்றன.

இனி மாணிக்கவாசகர் இறைவனுடைய அடியராகிவிட்ட நிலையை எக்காளத்தோடு சொல்வதைப் பார்க்கலாம்.

[2] பவன்எம் பிரான்பணி மாமதிக்
கண்ணிவிண்ணோர் பெருமான்
சிவன்எம் பிரான்என்னை யாண்டு கொண்
டான்என் சிறுமைகண்டும்
அவன்எம் பிரான்என்ன நான் அடி
யேன்என்ன இப்பரிசே
புவன்எம் பிரான்தெரியும் பரி(சு)
ஆவ(து) இயம்புகவே.

பாடல்கள் இரண்டும் உயர்ந்த பக்தி நிலையிலிருந்து உண்டானவை. தெளிவும், பிரகாசமும் பாடல்களில் அப்படியே கிடக்கின்றன. படிக்கிறவர்களை மயக்கத்திற்கு

---

1 பொய்தான் தவிர்ந்து—நான் என்னும் ஆணவ நிலை நீங்கி, நீயே என்னும் உணர்வு பெற்று.

2 பவன்—எல்லாவற்றிற்கும் காரணமாய் இருப்பவன். பரிசு—பாக்கியம். இயம்புக—நாம் சிவனுடைய அடியவன் என்பது எனக்குக் கிடைத்த உன்னதமான பதவி என்பதை நான் சிவனிடமே சொல்வேனுக்கும் என்பது கருத்து.

உள்ளாக்கி விடும். தமிழ் மொழி பாடலுக்குள் நடனமாடு வதைப் பாடி அனுபவிக்கிறவர்கள் தெரிய முடியும்.

* * *

கோடை, சாரல், பனி, மழை முதலிய பருவங்கள் ஆண்டு தோறும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு பருவமும் குறிப்பிட்ட காலத்தில் வந்து குறிப்பிட்ட நாள் முடிய இருந்து போய்விடுகின்றது. லட்சோப லட்சம் ஆண்டுகளாகவே முறை தவருமல் பருவங்களினுடைய ஆதிக்கம் இந்த விதமாக நடந்துவருகின்றது. இவற்றிற்கு அடிப்படையான காரணமும் இருக்கத்தான் செய்கிறது.

நாம் வாழ்கிற உலகமும், நமக்கு ஒளி முதலிய எண் ணிறந்த தத்துவங்களை உபகாரம் செய்யும் சூரியனும் வெட்ட வெளியில்தான் இருக்கின்றன. பூமியும், சூரியனும் சதா சுழன்று கொண்டுதான் இருக்கின்றன.

வானவெளியில் ஒரு கிரகம் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டுமானல் அதற்கென்று பாதை, தூரம், வேகம் இவைகளை அளந்து நிர்ணயப்படுத்தி இருக்கவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அளவிலிருந்து ஒரு மஞ்சாடி கூடப் பிசகாமல் கிரகங்கள் அமைந்து கொள்ளவேண்டும்.

பூமி, சூரியன் முதலிய கோளங்கள் அப்படியே கணக் கிற்குக் கட்டுப்பட்டு நடந்து வருகின்றன. அப்படி வரும் பொழுது பூமி சூரியனை நெருங்குகிற அளவிற்குத் தக்கபடி சூரியனுடைய சக்திகளிலிருந்து பூமி பெறுகின்ற அளவுகள் வித்தியாசப்படுகின்றன. இந்த வேறுபாட்டைப் பூமியிலுள்ள ஒவ்வொரு பகுதியும் ஏற்றுக்கொண்டு பருவ வேறுபாடு கொள்கின்றது.

இதிலிருந்து ஒன்று தெரிகிறது. பூமியும், சூரியனும் அந்தரத்தில் சுழல்வது போல இன்னும் எத்தனையோ

கணக்கில் அடங்காத கோளங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. இவ்வளவு கோளங்களையும் வைத்திருப்பதற்கு ஆகாயத்தில் நடக்கின்ற கோளங்களின் சஞ்சாரங்களை ஒட்டிப் பருவங்கள் ஏற்பட்டு நடந்து வருகின்றன. பருவங்களைக் கொண்டு எத்தனையோ உயிர்வர்க்கங்கள் தழைத்து வருகின்றன.

* * *

மேலே குறிப்பிட்ட விஷயத்தோடு இதயம் தோயத் தோய இவ்வளவிற்கும் மூலகாரணமாகப் பரம்பொருள் ஒன்று இருக்கவேண்டும் என்ற உறுதி ஏற்படுகிறது. அந்தப் பரம்பொருள் நம்முடைய மனம், வாக்கு, காயம் இவைகளுக்கு அப்பாற்பட்ட உண்மை நிலை. அந்த உண்மை நிலையை தேவர்கள் (தத்துவங்கள்) கூடத் தெரியமுடியாது. ஆனாலும் உண்மையான பக்தர்களை அந்த உண்மை நிலை எப்படியோ ஆட்கொண்டு அருள் புரிகின்றது.

**மேலை வானவரும்அறி யாத(து) ஓர்**
**கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே**
**ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்**
**கால மேஉனை என்றுகொல் காண்பதே.**

இறைவனோடு கலப்பதற்கு முன்னால், ஊழி ஊழி காலமாக ஏறி வந்த பாச பந்தம் இருக்கிறதே அது தொலைய வேண்டும். உண்மைத் தத்துவம் விளங்கவேண்டும். விளங்கியது நிலைத்தும் நிற்கவேண்டும். இறைவனுடைய

வானவர்—நியதி தத்துவம் ஏற்படுத்திய மழை, காற்று, ஒளி, உஷ்ணம் முதலிய மூலதத்துவங்கள். ஞாலம்—உருண்டை வடிவமாய்ச் சுழன்று கொண்டே இருக்கும் கோளங்கள். காலம் பருவக் கூறுகள். என்றுகொல் காண்பது—'நான்' என்னும் நிலை ஒழிந்து உன்னோடு கலக்கும் காலம் எப்பொழுது? இதை அருளவேண்டும் இறைவனே அருளவேண்டும்.

திருவருள்தான் மேலே குறிப்பிட்ட உபாயங்களைச் செய்து வைக்கமுடியும்.

இறைவனுடைய திருவருள் மாணிக்கவாசகருக்குக் குறைவில்லாமல் கிடைத்துவிட்டது. மயக்கம் நீங்கியவராய் ஜோதி நிலையோடே மாணிக்கவாசகர் கலந்து விட்டார்.

கட்டறுத்(து) எனை ஆண்டு கண்ணார நீ(று)
இட்ட அன்பரோ(டு) யாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை,
எட்டினோ டிரண் டும்அறியேனையே

இறைவனுடைய கருணையையும் பெருமையையும் இரண்டு பாடல்களும் தெளிவாக உணர்த்துகின்றன. பாடல்களைப் பாடப் பாட இறைவனே பாடல்களுக்குள் இருப்பது தெரியவரும்.

---

கட்டு—பாசபந்தத்தனை. நீறு—விபூதி. பட்டிமண்டபம்-இறைவனுடைய திருவருள் பிரகாசம். ஏற்றினை-ஏற்றுக்கொண்டாய். யாரை இப்படி எல்லாம் உபசரித்தாய் தெரியுமா? எட்டும் இரண்டும் என்னவென்று கூடத் தெரியாத அவ்வளவு 'புத்திசாலி' யாகிய என்னைத்தான்.

# சிவபெருமானின் ஆபரணங்கள்

மனிதர்களை, நமக்கு வேண்டியவர்கள் - நம்மோடு நெருங்கி உறவாடுகிறவர்கள் ஒவ்வொருவரையும், நாம் இயல்பான பெயரை வைத்துப் பேசுவதில்லை, பட்டப் பெயர் ஒன்றை வைத்துத்தான் பேசுகிறோம். அப்படிப் பேசுவதின் மூலமாகத்தான் ஒரு தெளிவும் ரசமும் உண்டாகிறது.

தாய்க்குக் குழந்தையின் பெயர் ஞாபகத்தில் இருக்கத் தான் செய்கிறது. இருந்தாலும் குழந்தையை, 'என் தங்கமே, முத்தே, கண்ணே' என்று அழைப்பதில் தாய்க்கு ஒரு ரசம்.

நம்முடன் நெருங்கிப் பழகுகிற மாடு, பூனை, நாய் இவைகளையும் வேறு பெயர் வைத்து அழைக்கும்போது தனியான சுகம் உண்டாகிவிடுகிறது.

கம்பன் போன்ற மகா கவிஞர்கள் பாத்திரங்களை எந்த இடத்திலும் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறதில்லை. குணம், செயல் முதலியவற்றை வெளிப்படுத்துகிற பெயரைக் கொண்டுதான் பாத்திரங்களைப்பற்றிப் பேசுவார்கள்.

* * *

ஒரு பொருளுக்கு அடையாளமாக வேறொரு பெயர் வந்துவிட்டதென்றால் அந்தப் பொருள் நன்கு வளர்ந்து விட்டது என்று ஏற்பட்டுவிடுகிறது. இனி அடையாளத்

திற்கும் அடையாளம் என்கிற ரீதியில் புனை பெயர்கள் ஏற்பட்டுவிட்டால் முதலில் குறிப்பிட்ட மூலப் பொருள் சமுதாயத்தில் பரிபூரணமாகப் பரந்து நிறைந்துவிட்டது என்று சொல்லிவிடலாம்.

சமுதாயம் ஓர் உண்மையை எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாகவும், விரிவாகவும் அனுபவிக்க முடிகிறதோ அவ்வளவுக் கவ்வளவு உண்மைக்கு அடையாளங்களும் புனை பெயர்களும் உண்டாகிவிடுகின்றன.

சைவ சமயம் பல்லாயிரம் ஆண்டுகளாகவே வளர்ந்து வந்திருக்கிறது. அறிதற்கரிய பல உண்மைகளையும் சாதனங்களையும் விளக்கிக் காட்டுகிறது சைவ சமயம். அடியார்கள், ஞானிகள், சித்தர்கள், இவர்கள் தங்களுடைய முயற்சிகள், அனுபவங்கள், சித்திகள், இவற்றையெல்லாம் சைவ சமயத்துக்குக் காணிக்கையாக அர்ப்பணித்திருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுக் கணக்காக வாழ்ந்து வருகிற மானுட ஜீவன்களின் இதயத் துடிப்பையும், ஆனந்தத்தையும் சைவ சமயத்திடத்தில் நாம் பார்க்கிறோம். ஒவ்வொன்றிலும் நம்பிக்கை தொனிக்கிறது.

* * *

சிவபெருமான் என்றால் எங்கும் நிறைந்த வஸ்து; காலம் இடம் இவைகளைக் கடந்த பொருள். அந்த வஸ்துவுக்கு மூலம் என்றோ முடிவு என்றோ ஒன்றுமே கிடையாது. அப்படியானால் அந்த வஸ்துவை எப்படி எடுத்துச் சொல்வது? நம்மவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சிவபெருமானுடைய தலையில் சடை காடாக வளர்ந்து கிடக்கிறது. சடையில் கொன்றைப் பூக்கள் சிதறிக் கிடக்கின்றன. சடைக்குள்ளே பிறைச் சந்திரன் ஒளிந்து கிடக்கிறது. சடை நிறையக் கங்கை வேறு திமிறிக்கொண்டு நிற்கிறது. இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள் நம்மவர்கள்.

சடை, கொன்றை, பிறை, கங்கை ஒவ்வொன்றும் முடிவற்ற பரம்பொருள் தத்துவத்தை விளக்க வந்த அடையாளங்கள்தான்; அதிசயமான அடையாளங்களும் கூடத்தான்.

கொன்றைப் பூக்கள் என்றுல் நட்சத்திரங்களே உணர்த்த வந்த புனே பெயர். அதே போல சிவபெருமானுடைய ஆபரணங்களில் பாம்பும் ஒன்று. பாம்பு என்றுல் நட்சத்திரக் கூட்டங்களின் செறிவு காரணமாகத் தோன்றுகிறதே பாலாறு, (Milky way) அதை உணர்த்த வந்த புனே பெயர்தான், நம்முடைய காலடியில் அடிக்கடி சந்திக்கிற சாரையோ, விரியனே, கொம்பேறி மூக்கனே அல்ல. கோடானுகோடி நட்சத்திரங்களின் சந்திப்பில் தோன்றுகிற ஒளி வெள்ளந்தான் இறைவன் அணிகிற ஆபரணம் என்றுல் அவனுடைய முடிவற்ற தன்மை ஒருவாறு விளங்கும் அல்லவா? இனி பாடலேப் பார்க்கலாம்.

**பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்**
**துத்திக் கவைநாத் துளே எயிற்ற—மெய்த்தவத்தோர்**
**ஆகத்தான் அம்பலத்தான் ஆரா அமுதணங்கின்**
**பாகத்தான் சூடும் பனி.**

இனி சிவபெருமான் அதே பாம்பாபரணத்தை எங்கெங்கு அணிந்திருக்கிறுர் என்று பார்க்கலாம்.

---

பத்தி-வரிசை வரிசையான; தகட்ட-ஒளிக் கோடுகள், நட்சத்திரங்களில் ஒழுங்கும் வகுப்பும் ஒளி கக்கும் தகடுகளாக இருக்கின்றன. கறை மிடற்ற-விஷத்தை வைத்திருக்கும் தொண்டை; நட்சத்திரங்களுக்கு இடை இடையே உள்ள நீல நிறத் தோற்றம்; பைவிரியும் துத்தி—படத்தில் கிடக்கிற நட்சத்திரத் துளிகள். கவை நா—இரண்டாகப் பிளந்துள்ள நாக்கு; எயிற்ற—பற்களே உடைய; பனி-பாம்பு.

கரம் மருவு பொற்ருெடியாம் காலிற் கழலாம்
பொருவிற் புயவலயம் ஆகும்—அரவரை மேல்
நாண் ஆம் அரற்கு நகைமணி சேர் தாழ்குழையாம்
பூண் ஆம் புனைமாலை யாம்.

பாம்பாபரணத்தை எல்லா இடத்தோடும் சார்த்திச் சொல்லும்பொழுது சிவ தத்துவத்தின் வரம்பில்லாத தன்மை ஒருவாறு விளங்கும்.

---

கரம் மருவு-கைகளில் அணிகிற; பொன்தொடி-ஒளி பொருந்திய வளையல்கள். பொருவில்—இணையில்லாத. அரவு—பாலாருகிய பாம்புதான்; அரைமேல்—இடுப்பில். அரற்கு—சிவபெருமானுக்கு; நகைமணி சேர்—ஒளிமயமான ரத்தினக் கற்கள் பதித்தது போன்ற; குழை—குண்டலம்; பூண்—மோதிரம்.

# சீர்திருத்துக் கல்வி

கல்வியில் சீர்திருத்தம் என்பது இன்றையப் படிப்பை வைத்துக்கொண்டு அதில் வர்ணப் பூச்சுப் பூசுவதல்ல. இந்தப் படிப்பை அப்படியே தூக்கி எறிந்து விடுவது என்பது தான் அதன் பொருள்.

முதலாவது, கவிதை என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

சமுதாயத்தில் எத்தனையோ உணர்ச்சிகள் ஒவ்வொரு சமயத்திலும் வெளிப்படுகின்றன. இந்த உணர்ச்சிகளைச் சம்மந்தப்பட்ட மக்கள் அனுபவிக்க முடிகிறதே ஒழிய அதை வெளியிட முடிகிறதில்லை.

நெஞ்சுக்குள்ளே கிடந்து உறுத்திக் கொண்டிருக்கிற உண்மைகளை அவற்றிற்கு ஏற்ற உருவங்களோடு ஒரு கவிஞன் வந்து வெளியிடுகிறான். அவன் வெளியிடுகிற தோரணையினாலும் முறையினாலும் உண்மைக்கு என்றுமில்லாத பிரகாசம் உண்டாகிவிடுகிறது.

உண்மையை வலுவாகவும் அழகாகவும் எடுத்துச் சொன்ன கவிஞர்கள், வாழையடி வாழையாக இருந்திருக்கிறார்கள். எத்தனையோ பாடல்களையும் பாடி இருக்கிறார்கள். ஆனால் தலைமுடி வளரும் பொழுதே ஈரும் பேனும் பற்றி விடுவதுபோலக் கவிதைகளை மக்கள் அனுபவிக்க அனுபவிக்க இலக்கணப் புலவர்களும் முளைத்துவிட்டார்கள்.

பத்துப் பன்னிரண்டு வார்த்தைகளை வைத்துக் கொண்டே, எப்படிப் புரியாத செய்யுளை, வறட்டுச்

செய்யுளைப் பாடலாம் என்பதற்கு இவர்கள் படாத பாடு பட்டவர்கள்.

ஒருவருக்கும் புரியாத முறையில் செய்யுள் இயற்ற வேண்டும் என்னும் ஒரே லட்சியத்திற்காக இவர்கள் யாப்பிலக்கணம் கற்ருர்கள்; அதற்கு அங்கமான பல்வேறு இலக்கணங்களையும் கடம் பண்ணினுர்கள். ஆயுள்நாள் முழுவதும் இந்த வறண்ட சுடுகாட்டிலேயே சுற்றி அலைந்தார்கள் என்ருலும் குற்றம் இல்லை.

இலக்கணப் புலவர்கள் பாடிய திரிபு, யமகம் முதலிய வறட்டுச் செய்யுள்களை உடைத்துப் பொருள்காண எத்தனையோ அப்பாவிகள் இலக்கணம் படிக்க வேண்டியதாயிற்று.

அவர்களும் அப்படியே கற்று வல்ல பண்டிதர்களாகி அந்தக் கற்பாறைகளை உடைத்தார்கள். உடைக்க உடைக்கப் பாடல்கள் தவிடாகித் தவிடும் காற்றிலே பறந்துவிட்டது.

மிச்சம் அவ்வளவுதான்.

கவிதை என்ருல் மனிதாபிமானத்தையும கவர்ச்சியையும் உண்டாக்க வேண்டும்; ரஞ்சகமாக இருக்க வேண்டும்; படிக்கப்படிக்க ஆனந்தத்தைச் சுரக்க வேண்டும்.

ஆனுல் சிரமப் படுவதையே, சிரமப் படுத்துவதையே ஆனந்தமாகக் கொண்ட இலக்கணப் புலவர்களுக்கு இது பிடிக்குமா? புரியாத வார்த்தைகளைக் கூட்டிச் சேர்ப்பது ஒரு கலையாகவும், அதைக் கலைப்பது ஒரு கலையாகவும் வைத்து விளையாடுவதுதான் அவர்களுக்கு ஆனந்தம்.

இதிலிருந்து ஒரு உண்மை விளங்குகிறது. கலை, இலக்கியம் முதலிய துறைகளில் சம்மந்தம் இல்லாத

ஒரு கூட்டம் நெடுங்காலமாக அதில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கின்றது. இந்தக் கூட்டத்தின் பிரதானத் தொழில் கலையின் உண்மையான எளிமையை, அப்புறப் படுத்திவிட்டு அதற்கு அனுவசியமான சிரமத்தை உண்டு பண்ணுவதும், பிறகு அந்தச் சிரமத்தைத் தீர்த்துக் கட்டுவது போலப் பாசாங்கு பண்ணுவதும்தான்.

இந்தக் கொலைகாரத் தொழிலுக்கு வேறு பலன் கிடைக்காவிட்டாலும் அப்பாவி மக்களை ஏமாற்றி அவர்கள் மத்தியில் தங்களை மேதாவிகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதிலும், அதன் மூலம் தங்கள் வயிற்றைக் கழுவிக் கொள்வதிலும் வெற்றி கண்டே வந்திருக்கிறது. இந்தப் பொறுப்பற்ற செயல் கவிதைகளில் மாத்திரம் அல்ல. பூகோளம், கணிதம், விஞ்ஞானம் முதலிய ஒவ்வொரு துறைகளிலும் புகுந்து நிறைந்துவிட்டன. நம்முடைய படிப்பு முறையிலுள்ள அவ்வளவுமே உண்மைக்கு முரணானது என்று சொன்னால் குற்றம் இல்லை,

மறுபடியும் கவிதையைப் பார்ப்போம். கவிதைக்கு விஷயம் பிரதானம் அல்ல. பெரிய பெரிய தத்துவங்களை உள்ளடக்கி வருவதும் உண்டு. சாதாரண விஷயத்தை எடுத்துச் சொல்வதும் உண்டு. சில சமயம் விஷயமே இல்லை என்று சொல்லும்படியாகவும் கவிதை வரும். கடவுளுக்கு எப்படித் தாரதம்மியம் கிடையாதோ, அப்படியே கவிதைக்கும் விஷயத்தில் பாகுபாடு இல்லை.

உணர்ச்சிகூடக் கவிதைக்குப் பிரதானம் இல்லை. கோபம், ஆங்காரம், சிரிப்பு, கசப்பு முதலிய உணர்ச்சி களைக் கவிதைகள் வந்துதான் வெளியிட வேண்டும் என்பது இல்லை. வேறு எத்தனையோ வழிகளில் உணர்ச்சி களை நாம் காண முடியும்.

அப்படியானால் கவிதைக்கு எது பிரதானம்? வார்த் தைகள் தான்!

வார்த்தைகளும், வார்த்தைகள் போடுகின்ற தாளங்களும் சேர்ந்துதான் நம்முடைய இதயத்தை ஒருமைப் படுத்துகிறது; நிலைத்து நிற்கவைக்கிறது; விஷயத்தோடு தோய வைக்கிறது. விஷயமும் இதயமும் மாறிமாறித் தோயும் பொழுது உண்மைக்கு, அழுத்தம், பிரகாசம் முதலியவை ஏற்பட்டு ஒரு ஆனந்தத்தை உண்டாக்குகிறது. இதயத்தை விஷயத்தோடு கலக்க வைப்பது வார்த்தைகளும் தாளங்களும் தான். கூர்ந்து கவனித்தால் நம்முடைய இதயம் வார்த்தைகளோடும், தாளங்களோடும் தான் கலக்கிறது, விஷயத்தோடு அல்ல என்பதும் தெரியவரும்.

வார்த்தைகளுக்குள்ளே நட்டுவன் உட்கார்ந்து தாளம் போடுவதுபோல அழியாத தொனி ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். வார்த்தை அதாகவே தாளம் போட வேண்டும். வார்த்தை என்றால் அதில் உயிர் இருக்கவேண்டும். முடமாகக் கிடக்காமல் அது சதாசெயல் படவேண்டும். ஒவ்வொரு வார்த்தைக்கும் தனித் தனியான மணமும் இருக்கவேண்டும்.

வார்த்தைகள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வார்த்தை விழுகின்ற ஸ்தானங்கள். தமிழ்பாஷை நெடுகிலும் மக்களால் அனுபவிக்கப்பட்டு வந்தது. மக்களினுடைய அனுபவம் ஏற ஏற பாஷைக்கு உரமும் தெளிவும், நெடுகிலும் ஏற்பட்டுவந்திருக்கிறது. விசாலம், லாகவம், நுட்பம் முதலிய அதிசயமான பண்புகள் தமிழ்ப் பாஷையின் சகல அம்சங்களிலும் நிறைந்து கிடக்கின்றன.

ஒரு விஷயத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்வதற்கும், அனுபவிப்பதற்கும் தமிழ் பாஷைதான் ஏற்றது என்று சொல்லும்படியாக உள்ளது. தமிழ் பாஷையின் வேகத்தையும் பிரகாசத்தையும் தெரிய வேண்டுமானால் சாதாரண மக்கள் பேசுவதைக் கேட்கவேண்டும். அல்லது தமிழிலுள்ள கவிகளைப் பாடிப் பார்க்கவேண்டும்.

தமிழ் பாஷையே கவிகளுக்காக ஏற்பட்டதுதானே என்று அப்பொழுது தெரியவரும்.

தமிழிலுள்ள எதுகைகளும், மோனைகளும் பூர்வீகமாகக் கிடைத்த வரப் பிரசாதங்கள். உண்மையை எடுத்துக் காட்டுவதற்கும், அதற்கு ஒலியையும் வேகத்தையும் கொடுத்துத் தெளிவுண்டாக்குவதற்கும் ஏற்பட்ட அதிநுட்பமான சாதனங்கள்.

இதை ஒரு குறள் மூலமாகப் பார்க்கலாம். சமுதாயத்தில் நல்ல மனிதர்களும் உண்டு. கெட்ட மனிதர்களும் உண்டு. நல்ல மனிதருடைய மாடுகள் நம்முடைய தோட்டத்தில் விழுந்து சேதப்படுத்தி விட்டன. மேய்ப்பவனுடைய சோம்பலும் கவனக்குறையுமே காரணம். இதை அந்த நல்ல மனிதரிடம் சொல்ல நேர்ந்தது. உடனே அவர் நம்மைக் கெஞ்சிக் கூத்தாடி இந்த ஒரு தடவையும் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மன்னிக்கும்படியும் வேண்டினர், வேலைக்காரனைக் கண்டிப்பதாகவும் உறுதி கூறினர்.

“எதற்காக இந்த விஷயத்தைச் சொன்னோம் என்று நமக்கு அசூசையே உண்டாகிவிட்டது. இப்படியும் நல்ல மனிதர்கள் இருக்கிறார்களே என்று பெருமைபட்டுக் கொண்டோம்.”

குறளாசிரியரும் இப்பேர்ப்பட்ட நல்ல மனிதர்களைப் பார்த்திருக்கிறர். அவர்களோடு பழகியும் இருக்கிறர்.

"சொல்லப் பயன்படுவர் மேலோர்"

என்று அவர்களைப்பற்றி அலங்காரமாகச் சொல்லுகிறர். இனி அந்தக் கெட்ட மனிதனுடைய மாடும் ஒரு தடவை நம்முடைய தோட்டத்தில் வந்து விழுந்துவிட்டது. அந்த மனிதனிடம் விஷயத்தைச் சொல்ல நேர்ந்தது. உடனே நம்மிடம் அவன் என்ன சொன்னன் : ‘ போறுமையா

போறும், பெரிய விஷயத்தைச் சொல்ல வந்திட்டாரு, உம்முடைய மாடும் வேலைக்காரனும் ரொம்ப ஒழுங்கோ? இதை எல்லாம் கவனிக்கிறதுதான் எனக்கு வேலையோ?' என்று மரியாதை இல்லாமல் நடந்துகொண்டான்.

நமக்குத் தெரிகிறது, "இந்த மனிதன் சொன்னால் கட்டுப்படமாட்டான்" என்று. குறளாசிரியருக்கும் இது தெரிந்து தானிருக்கிறது. அதனால்தான்,

"கரும்புபோல்
கொல்லப் பயன்படுமாம் கீழ்"

என்று ஆங்காரமாகப் பேசுகிறார்.

பாட்டு முழுவதையும் பார்க்கலாம்.

சொல்லப் பயன்படுவர் மேலோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படுமாம் கீழ்"

மேலோர் என்று முடித்து ஒதுக்கிவிடுவது எவ்வளவு நாகரீகமான செயல் என்று தெரிகிறது, கரும்புபோல் என்கின்ற சொல் (முதல்) வரியின் கடைசியில் விழுந் திருப்பது ரொம்ப வாய்ப்பு. ஆங்காரத்தை எவ்வளவு வேண்டுமானாலும் அங்கிருந்து எடுத்துக் கொள்ளலாம். கீழ் என்று அனயாசமாக விழுகிறது. சக்கை வேறு சாறு வேறாக அரைத்து, சாற்றை விழுங்கி விட்டு சக்கையைத் 'தூ' என்று துப்புவதுபோல விழுகிறது.

மேலோர் என்பதை உயர்வாகச் சொல்லவேண்டும். நிறுத்திக்கொள்ளவும் வேண்டும். கரும்புபோல் என்பதை நிறுத்தி நிதானமாகச் சொல்லவேண்டும், அழுத்தமும் கொடுக்க வேண்டும். கொல்லப் பயன்படுமாம் என்று சொல்லிவிட்டு கீழ் என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டும். நீட்டியும் உச்சரிக்கவேண்டும்.

அப்பொழுது தெரியும் தமிழ்பாஷை எவ்வளவு பெரிய காரியத்தை லகுவாகச் சாதித்து விடுகிறது என்று.

ஆனுல் பள்ளிக்கூடங்களில் இந்தக் காரியங்கள் எல்லாம் நுழையவே முடியாது. நாற்பது பையன்களேயும் குறளே 'மளமள'வென்று படிக்கவைப்பது; உடனே பதவுரை பொழிப்புரை, கருத்துரை எல்லாவற்றையும் கொட்டித் தொலேப்பது. கடைசியில். மேலார் என்பது மேலோர் என வந்தது; '**ஆ**' '**ஒ**' ஆயிற்று; **சொல்ல** என்பது வினே எச்சம்; அது **பயன்படுவர்** என்ற முற்ருேடு முடிந்தது. கரும்புபோல் என்பதில் **போல்** என்பது உவம உருபு இது உவம விரி; **கீழ்** என்பது ஆகுபெயர். இப்படி எல்லாம் இலக்கணத்தைக் கரைத்துக் கொடுத்துக் குழந்தைகளே வதைக்கிருர்கள். குறளே இப்படி எல்லாம் சித்திரவதை செய்தால் குறள் உருப்படுமா, குழந்தைகள்தான் உருப் படுவார்களா?

பெரிய உண்மைகளே எடுத்துச் சொல்லும் குறள் போன்ற நூல்களே இன்றையப் பள்ளிக்கூடங்களில் பாடம் வைக்காமல் இருந்தால் எவ்வளவு நல்லது என்பதை அனுபவ ரீதியில் பார்த்தால் தெரியவரும்.

மேலே குறிப்பிட்ப மாதிரி பாடம் சொல்லிக்கொடுப் பதும், அதை ஒப்புவிக்க வற்புறுத்துவதும், அதில் கேள்விகள் கேட்பதும், அதை வாந்தி எடுத்தவனேப் பாசாக்குவதும், வாந்தி எடுக்காதவனேப் பெயிலாக்குவதும் நீதி ஆகுமா? இதன் மூலம் தமிழில் வெறுப்பு விளேவதைத் தவிரப் பலன் ஏற்படுமா?

கவிஞனுடைய இதயத்தில் ஊறித் தவங்கிடக்கின்ற உண்மை அனுபவம் முட்டித் ததும்பி வெளியே கிளம்பத் துடிக்கிறது. இதை உணர்ந்த பாஷை ரொம்பவும் இரக்கப் பட்டு அந்த அனுபவ உண்மைகளேப் பக்குவமாக எடுத்துக்

கவிதை ஆக்குகிறது. பாஷையினுடைய ஸ்பரிசம்தான் கவிதைக்கு உருவம் தருகிறது. பாஷையினுடைய இரக்கத்தையும், துடிப்பையும் கவிதையின் ஒவ்வொரு கோணத்திலும் காண முடியும்; ஒவ்வொரு மூலையிலும் பார்க்க முடியும்.

தமிழ்ப் பண்டிதர்கள் இதை உணராதது தப்பில்லை. அதனால்தான் அவர்கள்பாஷையின் உன்னதமான அழகைக் கவனிக்காமல் வெறும் விஷயத்தோடும், வறண்ட இலக்கணத்தோடும் போராடுகிறார்கள்.

வேறொரு பழம்பாடலைப் பார்ப்போம்.

"சிதம்பரத்திலுள்ள இறைவனை வணங்க வணங்க 'நான்' என்கிற ஆணவம் கழன்றுவிடும். ஆணவம் கழலக் கழல வினையோ வினைப்பயனோ நம்மைத் தீண்டாது. முன் ஜன்மங்களில் செய்த வினைப்பயன்கூட நம்மைத் தீண்ட முடியாது"

இந்த உயரிய தத்துவத்தைக் கவிஞர் உத்ஸாகமாக எடுத்துச் சொல்லுகிறார். அவருடைய உத்ஸாகத்தைப் பாஷை கும்மாளி போட்டுச் சொல்லுகிறது.

"காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால்
மேலைவினை எல்லாம் கீழுவாம்—நால்வாய்க்
கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து"

பாடலைப் பாடப்பாட அதன் ருசியும் மணமும் தெரிய வரும். சிற்றம்பலத்தில் போய்க் காலையும் மாலையும் வணங்க

---

நால்வாய்க் கருமான் தோல்—யானைத்தோல். பைந்தார்—குளிர்ந்த பூமாலை. சிற்றம்பலத்து—சிதம்பரத்தில்.

மேலே (முன்) வினை முழுவதும் (கீழ்) இல்லாமல் போகும் என்பதை அழகாகச் சொல்லி இருக்கிறது.

பாட்டில் உள்ள அதிசய பாவத்தை எடுத்துச் சொல்வதற்குப் பதிலாகப் பல பண்டிதர்கள் இந்தப் பாட்டை அவமானப்படுத்துவதை நான் பார்த்திருக்கிறேன்.

“கடவுளைக் கும்பிட்டால் எப்படியடா நம்முடைய பாவம் தொலையும். இது பொய்” என்று சொல்வதையும் கேட்டிருக்கிறேன்.

இதைவிட மோசமாக இன்னொரு செயலும் உண்டு. குறளைச் சித்திரவதை செய்ததுபோல் இதையும் செய்து விட்டுப் பாடல் முழுவதும் ஒரு முரண் (காலை மாலை) தொடையாகவும் முரண் அணியாகவும் வந்துள்ளது என்று விளக்கி விடுவார்கள்.

பாட்டிலுள்ள அதிசய பாவமும், பாஷையின் அற்புதச் செயலும் ஓடிவிடும். குழந்தைகளினுடைய மண்டையை இந்த இலக்கணம் குழப்பிக் கலக்கிவிடும்.

கவிதை என்றால் சாவதானமாகப் பாடவேண்டும். நிறுத்துகிற இடத்தில் நிறுத்தி, அழுத்தம் கொடுக்கிற இடத்தில அழுத்தம் கொடுத்தால்தான் பாஷையின் நயமும், நடனமும் தெரியவரும்.

பாட்டைப் பாடி அனுபவித்தல் என்பது பள்ளிக்கூடங்களில் கிடையவே கிடையாது. பாடுவது என்பது தீண்டாத காரியம். சட்ட விரோதமான செயலும்கூட.

கவிகளைப் பாடுவதற்கு என்றே உண்டாக்கினார்கள். ஆனால் அதைப் பாடுவது தான் கிடையாது. பாடாத பழக்கம் ஏற்பட ஏற்படத்தான் வேண்டாத இலக்கணச் சேட்டைகள் இடம்பெற்றன.

“உப்பில் உப்புச்சுவை இல்லாவிட்டால் வேறு என்னத்தைக் கொண்டு நிரப்ப முடியும்? குப்பையில்

போட்டு மூடத்தான் உதவும்'' என்று ஏசுநாதர் சொன்னார் கவிதையையே பாடாவிட்டால் வேறு எதைத்தான் பாட? கவிதைகள் பாடப்படாத காரணத்தால்தான் குழந்தைகளுக்கு வெறுப்பை ஊட்டுகின்றன ஆனந்தத்திற்குப் பதிலாக.

கம்பருடைய பாடல்கள், நெடுகிலும் பாடப்பட்டே வந்திருக்கின்றன. பண்டிதர்கள், பாமரர்கள் எல்லோராலும் பாடப்பட்டு வந்திருக்கின்றன. ஊர்தோறும் உள்ள **கம்ப ராமாயணச்** சாவடிகள் ஒன்றே நமக்குப்பல உண்மைகளைத் தெரிவிக்கும்.

ஆனால் கம்பருடைய பாடலுக்கு ஏற்பட்டதுபோல வேறு எதற்குமே ஆபத்து ஏற்பட்டதில்லை. இலக்கணப் புலவர்கள் தங்கள் அபத்தங்களை எல்லாம் செருகு கவிகளாகக் கம்பரில்தான் கணக்கில்லாமல் நிறைத்திருக்கிறார்கள். உண்மையான கம்பருடைய பாடல்களில் பலவற்றை **இந்தப் பரம்பரை** கணக்கில்லாமல் அழித்துவிட்டதும் உண்டு. பாட பேதங்களுக்கும், வேண்டாத வியாக்கியானங்களுக்கும் கம்பரைப்போல இலக்கானவர்கள் வேறு யாருமே கிடையாது. மட்டமான பாடல்களைக் கம்பருடைய பாடல் என்று வலியுறுத்துவதும், அதற்கு வேண்டாத வியாக்கியானம் பண்ணுவதும் பண்டிதர்களைவிட்டு இன்னமும் நீங்கவில்லை.

கம்பருடைய பாடல் என்றால் அதற்குத் தனித்த முத்திரை உண்டு. அதனுடைய மணமும் பிரகாசமும் தனியானவை. எல்லாவற்றையும் விலக்கி ஒதுக்கிவிட்டு, கம்பருடைய கவி தனித்த நடையோடு வரும். கம்பீரமும் தெய்வீகமும் கம்பருடைய பாடல்களில்தான் உண்டு.

ஒரு பாடலைப் பார்ப்போம்.

சூர்ப்பனகை மூக்கறுபட்டு இலங்கைக்கு வந்து விட்டாள். கோட்டை வாசல் வழியாகக் கதறி வருகிருள். செய்தி காட்டுத் தீபோல் பரவிவிட்டது. இலங்கை வாசிகளுக்கோ நம்ப முடியவில்லை. திகைக்கிருர்கள், தயங்குகிருர்கள், மறுகுகிருர்கள்.

இந்த அபவாதத்தைச் செய்து மடியப்போகிறவன் இந்திரனு, பிரமனு, சிவபெருமானு என்று சிலர் பொருமினுர்கள். வேறு சிலரோ, இந்த அண்டகோளத்தில் யாருக்கு இந்தத் துணிவு வரும்? இது வேறு அண்ட கோளத்தில் உள்ளவர்களின் செயலாகத்தான் இருக்கவேண்டும் என்ருர்கள். "யாரும் இந்தச் செயலைச் செய்திருக்கமாட்டார்கள். யாருக்கும் அப்படிச் செய்யத் துணிவு வந்திருக்காது என்று சிலர் அடித்துச் சொன்னுர்கள்" எப்படி?

என்னையே இராவணன்
தங்கை என்ற பின்
அன்னையே என்றபடி
விழுதல் அன்றியே
உன்னவே ஒன்றுமோ
ஒருவரால் இவள்,
தன்னையே அரிந்தனள்
தான்என்ருர் சிலர்

கவிதையைப் பாடப்பாட அதன் அற்புதம் தெரியவரும் கவிதைக்கும் கம்பருக்கும் சம்மந்தம் கொஞ்சூட இல்லை என்பதும், எல்லாம் பாஷையினுடைய அற்புதச் செயலே என்பதும் தெரியவரும்.

---

ராவணன் தங்கை என்று தெரிந்த உடன் யாராயிருந்தாலும் வணங்குவார்களே ஒழிய இப்படிச் செய்ய எண்ணக்கூட பயப்படுவார்களே. இந்தச் செயல் சூர்ப்பனகை தானுகச் செய்து கொண்டதுதான்.

பாஷையினுடைய திருவருள்தான் கவிதை. அதனுல் தான் முன்னோர்களும் கவிதையைத் தெய்வ சிருஷ்டி என்று புகழ்ந்தார்கள்.

ராவணனுடைய தங்கையை யாரும் அவமானப் படுத்த முடியாது என்கிற நம்பிக்கை, பாடலில் ஒவ்வொரு சொல்லிலும் தெறித்து விழுந்துள்ளது. எத்தனை எத்தனையோ அதிசயபாவங்கள் விளைந்து விளையாடுகின்றன. ஆனுல் இப்படி உண்மையான கவிதையை பள்ளிக்கூடங் களில் பாடமாக வைப்பது கிடையாது. வறட்டுப் புலவர் களின் ஈரம்கெட்ட பாடல்களே "டெக்ஸ்ட்புக்"கில் நிறைந்து கிடக்கும். அதற்குப் பண்டிதர்கள் கொடுக்கும் ஆடம்பரமான விரிவுரைகளும் இலக்கணங்களுமோ இருக்கவே செய்கிறது.

அப்படியானுல் தமிழ் உருப்படுமா? தமிழ் உருப்பட வேண்டுமானுல் நல்ல பாடல்களை நல்ல முறையில் சொல்லித்தர உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

UNIVERSITY EXTENSION L
14 AUG 1960
MADURAI